

## கூட்டமைப்புக்குள் பிளவு வர வாய்ப்பில்லை



## படம் பார்! பாடம் படி!!

ஜூன் 26– ஜூலை 02 , 2011 June 26 - July 02, 2011 பக்கங்கள் -28 25.00



சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்

## கொடியேற்றத்தில் வேட்டைத் திருவிழா

## பொருளாதாரத் தடையும் பூச்சாண்டிகளும்

கொலைகள் ஏற்றுக்கொள்ளப்படாதவைகள். அதனை நியாயப்படுத்த இதுவரை உலகில் சட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை. அவற்றை முற்றாக நிறுத்துவதற்கான சட்டங்களே அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் கொலைகள் குறைந்த பாடில்லை. நாளுக்கு நாள் புதிய வடிவில் புதிய காரணங்களோடு அதிகமாகிக்கொண்டே போகின்றன. இதன் பார்வையில் உயிர்கள் மிகவும் மலிவானவை. படைக்கப்பட்டவை யாவும் தன்பசி போக்குவதற்கானது என்ற அர்த்தத்தில் அதிகாரம் மிக்க சிலரால் புசிக்கப்பட்டுப்போகிறது.

சாவுகள் அல்லது மரணங்கள் இதிலிருந்து வேறுபடுபவை. இரண்டுமே உயிரின் முடிவுறுதலோடு முற்றுப்பெறினும், பெரிய அளவிலான வித்தியாசமுடையன. சாவுகள் எதிர்பாராமல் நிகழ்பவை. நோயினால், மூப்பினால், விபத்தினால் நிகழ்பவை. ஆனால் கொலைகள் அப்படியல்ல. திட்டமிட்ட வகையில் அடையாளம் காணப்பட்ட நபர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுபவை. படுகொலைகள் தற்கொலைகள் என்ற இரு வகையறாக்களுள் அடங்கும் இக்கொலைகள் இலங்கையில் அதிகம் உணரப்பட்டவை. தற்கொலைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்தேறினாலும் படுகொலைகள் கூட்டாக, கொத்துக்கொத்தாக மேற்கொள்ளப்பட்டதற்கான அதிக சான்றுகள் இன்னும் இருக்கின்றன. இப்போதும், இனியும் பேசுபொருளாய் இருக்கப்போகின்றன.

அரசியல் மற்றும் போரியலில் அத்தியாவசியமாய் தேவைப்பட்டுவிட்ட கொலைகளுக்கு காரணங்களிருப்பினும் அந்தக் காரணங் களை ஏற்றுக்கொள்ள 'மனிதர்கள்' தயாரில்லை. உலகமெங்கும் நடந்துமுடிந்த பெரும்போர்கள், யுத்தக் குற்றங்களுக்கான சந்தர்ப்பங் களை ஏற்படுத்தியிருந்தன. அதில், பல உயிர்கள் நிர்வாணமாகக் கொலையிடப்பட்டன. அல்லது கொலை புரியப்பட்டு நிர்வாணிக்கப் பட்டன. மிகச்சிறந்த போர்க்காவியமென வர்ணிக்கப்படும் கலிங்கத்துப் பரணியில் வரும் போர்ப் பேய்கள் பிணங்களையும் அரை உயிரோடு கிடந்த குறை உயிர்களையும் நிணக்கூழ் காய்ச்சிக் குடிக்கின்றன. அது போன்ற உண்மைக் காட்சிகள் இப்போது வெளிவந்திருக்கின்றன. ஆனால் அவற்றை அவர்கள் ஏற்கிறார்கள் இல்லை. மாறாக மண்டி யிட்டவர்களையும் பெண்களையும் எவ்வாறெல்லாம் கொலை புரியலாம் என்பதைக் கற்பிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

# படம் பார்!



# பாடம் படி!!

■ ஜெரா

## சரணடைந்தோரைக் கொல்வது எப்படி?

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து, தோற்றவர்களை போரின் வஞ்சனைக்குள் தந் திரமாக அழைக்க வேண்டும். 'நாம் உங்களைக் கொல்லப் போவதில்லை. யுத்தக் கைதிகளை அல்லது தீவிர வாதிகளை காக்கின்ற சர்வ தேச யுத்த விதிகளுக்கு அமை வாக உங்களைக் காப்பாற்று வோம். எங்களை நம்பி நீங் கள் பதுங்கியிருக்கும் பதுங்கு குழிகளை விட்டு வெளியே வாருங்கள். வெள்ளைக் கொடிகளை ஏந்தி எம்மை நோக்கி அசைத்தவாறு சரணடையுங்கள்' என ஏகப் பட்ட நம்பிக்கை வார்த்தை களை அள்ளித் தெளித்துவிட வேண்டும். சரணடைய வரும்போது யாரையும் சுட்டுவிடக்கூடாது. எல்லாக் கைதிகளும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட அரணைக் கடந்து வந்த பின்பு, அணை யோரமாக அனைவரையும் அமரவைக்கவேண்டும். அவர்கள் அணிந்திருந்த மேலாடைகளைக் கழற்றிக் கைகளைப் பின்புறமாகக் கட்டிவிட வேண்டும். அதன் பிறகுதான் களையெடுப்பு. பதவி நிலைகளின் அடிப் படையிலும், ஆண்கள் பெண்கள் வேறாகவும் பிரித்தல் இந்நிலையில் மிக அவசியம்.

## உற்சாக பானங்கள்

போர்க்களத்தில் தோற்ற பெண்களே மிக முக்கியம். இவ்வளவு காலமும் போரிட்டுக் களைத்துப்போன படைகளுக்கு முழு உற்சாகம் தரவல்லவர்கள் அவர்களே. படையினன் எவ்வாறெல்லாம் கைது செய்யப்பட்ட பெண்ணை உபயோகிக்க விரும்புகிறானோ அவ்வாறெல்லாம் அனுமதிக்க வேண்டும். அதில் கட்டளைகளுக்கோ கஞ்சத்தனங்களுக்கோ இடம் கொடுக்காதீர்கள். ஏனெனில் இப்போது கைதுசெய்யப்பட்ட அனைவரும் அரசின் உடமைப்பொருள். போர்க் கதாநாயகர்கள் தம் ஆசைகள் அடங்கும் வரைக்கும் ஒருவர் மாறி மற்றொருவராகச் சாப்பிட்டுக் களைத்தவுடன் எப்படியும் கொலை செய்யலாம். கண்களைக் கட்டி முட்டுக் காலில் இருத்தி நெற்றியில் சுடலாம். கதாநாயகர்கள் சாப்பிடும்போதே பெரும்பாலான பெண்கள் மரணித்திருப்பர். கொலை செய்ய வேண்டிய தேவை அரிது.

## ஆண்களின் நிர்வாணம் அழகு

இனி கைது செய்யப்பட்ட ஆண்கள் முழுப்பேரையும் நிர்வாணமாக்க வேண்டும். அப்போது அவர்கள் தனி அழகாய்த் தெரிவர். பதவி நிலையில் உயர்ந்தவர்களுக்குத் தனி யான விசாரணைகள் முக்கியம். அவர்களின் உயிருடனான உடலங்களில் இரசாயன வெடிபொருட்களை இட்டுக் கொழுத்திவிடலாம். அப்போது அந்த மனிதர்கள் சில உண்மை களைக் கக்கக்கூடும். சடலம் வெடித்து எரியும் போது எழும் மரண வாசனை இரும்பு மனிதர் களுக்கு உற்சாகத்தைத் தரும். பதவி உயர்ந் தவர்களைக் கொல்வதில் இன்னொரு முறை யும் உண்டு. கைதுசெய்யப்பட்டவர்களை விசாரித்து விட்டு பெரிய கொட்டன்களால் அடித்துக் கொலை செய்வது. மரணித்த பின்னர் அப்படியே விடக் கூடாது. தலை யைப் பிளந்து மூளையைப் பார்க்க வேண் டும். அதற்குள் ஏதும் மறுபிறப்புத் திட்டமிருக் கலாம். இதனையெல்லாம் செய்யும் வேளை யில் எல்லாம் அதிகமானவர்கள் சூழ நிற்க வேண்டும். ஏனெனில் போர்த்தொழில் புரிபவர்களுக்கு மிகச் சிறந்த களப் பயிற்சி யாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கும் உதிரி உயிர்களை எங்காவது கடற்கரை, குளக்கரை வெளிகளுக்கு இழுத் துச்சென்று ஒவ்வொருவராகப் பிடரியில் சுட்டுக் கொல்லலாம். ஆனால் துடித்துத் துடித்துச் சாவது யாராலும் தரிசிக்க இயலாதது. அவர் களால் மட்டுமே முடியும்.

## பிணக்குவியலின் மீது குதூகலம்

உலகில் யாருக்கும் கிடைக்காத அனுபவம் இந்த விளையாட் டில் கிடைக்குமாம். யுத்தக்கள வெளிகளில் நிரை நிரையாகக் குவியும் பிணங்களை அகற்றுவதில் எல்லாம் தர்மம் பார்த்துக் கொண்டிருக்க இயலாது. தொழிலாளிகளுக்கு சந்தோசம் வேண் டும். அதனை அவர்கள் எந்தத் தடங்கலும் இன்றி மேற்கொள் வர். அரை குறை உயிரோடு கிடப்போரை மிதித்தல் உதைத்தல், சுடுதல், வாகனங்களுக்குள் தூக்கியெறிதல், கெட்டவார்த்தை களால் திட்டுதல் எனப் பல இன்பக் கேளிக்கைகளில் ஈடுபடல் இப் பணியில் அலுப்பைத் தராது. இன்னும் இன்னும் பிணக்குவியல் களை நாடிப்போகச் செய்யும். தப்பித் தவறி ஆடையுடன் பெண் களின் உடலங்கள் வந்தால் முதலில் செய்ய வேண்டியது ஆடை அகற்றல்தான். தோற்ற எந்த பெண்ணின் சடலமும் ஆடையோடு இருக்கக்கூடாது. கடைசி அரைநிர்வாணமாவது இருப்பது நல்லது.

காயப்பட்டோர் மோசமானவர்கள். கைப்பற்றப்பட்ட பகுதி களின் பதுங்குகுழிகளை மிகக் கவனமாகச் சல்லடை போட்டுத் தேடவேண்டும். எங்காவது ஒரு குழியிலிருந்து தண்ணீர் கேட்டு குரல்கள் எழும். அவர்கள்தான் போரில் காயப்பட்டவர்கள். மடக்கி பிடித்து விடவேண்டும். அந்தப் பதுங்கு குழியிலே வைத்து அவருக்கான சிறப்புச் சிகிச்சைகளை மேற்கொண்டு கொலை செய்யலாம். அவரை அதிலிருந்து தூக்கித் தென்னை மரத்தடியில் கட்டி கூரிய கத்தியினால் கழுத்தில் கீறி அவர் சாகத் துடிக்கையில் எக்காளமிட்டும் சிரிக்கலாம். பின்னர் உயிரைக் குடித்து விட்டு அவர் இருந்த குழியிலேயே மண் ணைப் போட்டு மூடிவிடலாம். இலையான்களும் புழுக் களும் அதை வைத்துக் கொஞ்ச நாட்களுக்கு பிழைப்பு நடத்தும். நீங்கள் அவைகளுக்குப் புண்ணியம் செய்தவ ராகிறீர்கள். இவ்வாறு ஒரு கொலைக்களம் தரும் படிப்பி னைகள் மிகச் சுவாரஸ்யமானவை. யாருக்கும் கிடைக்காத அனுபவத்தைத் தரவல்லவை. ஆயினும் 'மனிதர்'களால் ஜீரணிக்க முடியாதவை. அதைப் புரிந்தவர்களுக்கு உவப் பானதாக அமைந்தாலும், பார்ப்பவர்களுக்கு செய்தவர்களின் கோர முகத்தைக் காட்டும். இச்செயல்கள் படைகளுக்குப் புது உத்வேகத்தை அளிக்கும் எனப் போர்ச்சாத்தான் ஏவினா லும், இனியும் யாரும் இவை எல்லாவற்றையும் புரியாமல், இருக்கக் கொலைக் களப் படிப்பினைகள், அனுபவப் பகிர்வுகள் உதவுமா?

*குறிப்பு:* இந்த விடயங்கள் குறித்த செய் முறை வழிகாட்டல் காட்சிகளை விளக்கக் குறிப்புகளுடன் இணையத் தளங்களில் இல வசமாக நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.


# வயதான 'பல்ப்'



ஒரு மின்சார பல்ப்பின் ஆயுட் காலம் வெகு குறைவானதே. இரண்டு மூன்று வருடங்கள் அந்த பல்ப் நின்று பிடிப்பதே சாதனையான விடயம்தான். இப்படியிருக்கையில் ஒரு மின்சார பல்ப் 110 வருடங்களாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது என்றால் அது உலக சாதனை தானே?


கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள வைத்திய சாலை வளாகம் ஒன்றில் 1901 ஆம் ஆண்டு இந்த பல்ப் பொருத்தப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை இடைவிடாது ஒளி கொடுத்து வருகிறது. நூற்றாண்டு கடந்தும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த பல்ப் கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் தன் பெயரைப் பதித்துள்ளது.

# வடை போச்சே...!



கிறிஸ் கெய்ல். கரீபியன் புயல். 2011 ஐ.பி.எல்லின் அதிரடி நாயகன். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர். அணியின் முன்னாள் தலைவர். இப்படி அடுக்கிக் கொண்டே போகக்கூடிய திறமைகள் இருந்தும் மே.இ. தீவுகள் கிரிக் கெட் சபையுடன் சம்பளப் பிரச்சினையால் முரண்பட்டுக் கொண்டதால் இவர் அந்த அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டிருக் கிறார்.

ஆனாலும் மனிதர் அசரவில்லை. 'வடை போச்சே!' என்று புலம்பாமல் ஐ.பி.எல்.போன்ற போட்டிகளில் தனது திறமையை வெளிக் காட்டு வேன்என்று சவால் விட்டுள்ளார். சவாலில் ஜெயிப்பாரா கெய்ல்?





# மிரட்டும் பச்சை

அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் இப்போது அனேகரால் உச்சரிக்கப்படும் சொல் பச்சை விளக்கு என்பதாகத்தான் இருக்கும். 'கிறீன் லான்ரன்' (பச்சை விளக்கு) என்ற பெயரில் கடந்த வாரம் வெளியான இந்த ஹொலிவூட் திரைப்படம் வசூலில் சக்கைபோடு போட்டு வருகிறது.

வழமையான சாகச வீரனின் கதைதான் இது. விமானப் பயிற்சியில் ஈடுபடும் நாயகனுக்கு ஒருநாள் எதிர்பாராத விதமாக ஒரு பச்சை மோதிரம் கிடைக்கிறது. அது பல அமானுஷ்ய சக்திகளைக் கொண்ட மோதிரம். அது கிடைத்த பின்னர் நாயகனின் வாழ்க்கையே மாறுகிறது. உலகில் அநீதியை அழித்து அமைதியை நிலைநாட்டும் வீரனாக உயர்கிறான். அவனுக்கு அசாத்தியமான உடல் வலிமையையும் சில அபூர்வ மான சக்திகளையும் பச்சை விளக்கு மோதிரம் வழங்குகிறது.

எனினும் நாயகனின் எதிரிகள் அவனது மோதிரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். எல்லாப் படங்களையும் போலவே இதிலும் நாயகனே இறுதியில் வெற்றி பெறுகிறான்.

மார்ட்டின் கெம்பல் இயக்கியுள்ள இத் திரைப்படத்தில் றியான் ரெனோல்ட்ஸ், ப்ளாகிலிவேலி, பீற்றர் சார்ஸ்காட் ஆகியோர் நடித்துள்ளனர். சிறுவர்களைக் குறிவைத்து எடுக்கப்பட்ட இத் திரைப்படத்துக்குப் பெரியவர்களும் திரண்டு வருவதால் கடந்த வாரம் ஏனைய படங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு வசூலில் முதலிடம் பிடித்துள்ளது பச்சை விளக்கு.

# பின்தொடர்வதில் சாதனை

லேடி காகா, அகா ஸ்ரெபனி ஜோவானி ஏஞ்சலினா ஜெர்மனோட்டா! (அப்பா! இப்பவே கண்ணைக்கட்டுதே!) இது அமெரிக்க அழகி ஒருவரின் பெயர். அவரது பெயரைச் சொல்லி முடிப்பதற்கிடையில் மூச்சு முட்டிவிடுகிறது. ஆனால் அவரைப் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கையைச் சொன்னால் மயக்கமே வந்துவிடும். பத்து மில்லியனுக்கும் அதிகமானோர் (10, 131, 629 பேர்) இவரைப் பின் தொடர்கிறார்கள். இவ்வளவு பேர் எப்படிப் பின் தொடர முடியும் என்று உங்கள் மூளை கண்டபடி யோசித்திருக்கும். 'ட்விட்டர்' சமூக இணையத்தளத்திலேயே இந்த அழகிக்கு இத்தனை மதிப்பு.

'ட்விட்டரில்' மட்டுமல்லாது உலகில் உள்ள எல்லா இணையத் தளங்களிலும் அதிகமானோரைப் பின்தொடர வைத்திருக்கும் சாதனையும் லேடி காகாவுக்குக் கிடைத்திருக்கிறது.



# காருக்குள் ஒரு கிராமம்?

இது ஒரு உலக சாதனைப் பயணம். சிறிய ரக கூப்பர் காரில் 21 நடன அழகிகள் பயணித்தனர். சாதாரணமாக நான்கு பேர் மட்டுமே பயணிக்கக் கூடிய காரில் 21 பேர் பயணித்த இச் சாதனை ஜப்பானில் 2011 மே 5 ஆம் திகதி நிகழ்த்தப்பட்டது.



# கிறிஸ்மஸ் சவாரி

மான்கள் பூட்டப்பட்ட பனிச்சறுக்கு வண்டியில்தான் கிறிஸ்மஸ் தாத்தா வருவார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். காலம் மாறிவிட்டதால் கிறிஸ்மஸ் தாத்தாவும் தன் வாகனத்தை மாற்றப் போகிறார். அமெரிக்காவிலுள்ள மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனம் ஒன்று இந்த வருடத்தில் சிறப்பம்சமாக கிறிஸ்மஸ் மோட்டார் சைக்கிளை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தியுள்ளது. பார்ப்பதற்கு மான்கள் பூட்டப்பட்ட பனிச்சறுக்கு வண்டியை ஞாபகப்படுத்தும் வகையில் இந்த கிறிஸ்மஸ் மோட்டார் சைக்கிள் வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த விலையில் இதனைச் சந்தைக்கு விடும் திட்டமும் இருப்பதால் இவ் வருடம் கிறிஸ்மஸ் தாத்தா அமெரிக்காவில் மோட்டார் சைக்கிளில் பறந்து வரப் போகிறார்.



# அறுபதிலும் ஆசை வரும்

அமெரிக்காவை அசரவைத்த அவுஸ்ரேலிய ஆணழகன், ஆர்னல்ட் ஸ்வாஸ்நேகர் (வயது 63). ஏழு முறை ஆணழகன் பட்டம் வென்று சாதனை படைத்தவர். ஹொலிவூட் சினிமாவில் தன் நடிப்பால் சுப்பர் ஸ்டாராக உயர்ந்தவர். கலிபோர்னியா மாநிலத்தில் ஆளுநராக இருந்தவர். இப்படிப் பல பெருமை கொண்ட ஆர்னல்ட் தன் வீட்டுப் பணிப்பெண்ணின் 10 வயது மகனுக்குத் தானே தந்தை என்று அறிவித்துள்ளார். இதனால் ஆர்னல்டின் மனைவி மரியா ஸ்ரிவர் விவாகரத்துக் கோரவுள்ளார்.



# பாட்டெழுதப் பயந்த பேராசிரியர்

**யா**ப்பு அணி கற்று, எதுகை மோனை தெரிந்து எழுதும் கவிஞர்கள், கேள்விச் செவியாலும் சிறந்த கவிதைகளை வாசித்த அனுபவத்தாலும் முன்னணி யில் நிற்கும் கவிஞர்கள், இவர்களுடன் பிறவிக் கவிஞர்க ளாய் பெருகும் ஆர்வத்தோடு எழுதும் கவிஞர்கள் எனப் பலரிங்கே ஆங்காங்கே பிரகாசித்துக் கொண்டிருக்கி றார்கள். அவர்களே கவிஞர்கள் என்றும் பாராட்டப்படு கின்றார்கள்.

ஓசை நயமும் கருத்துச் செறிவும் மிக்க ஓராயிரம் கவிதைகள் எமது தமிழ் இலக்கிய உலகின் மேன் மையை எடுத்துக் காட்டுகின்றன. அந்தக் கவிதைக ளுக்குள் தமது புலமைச் சிறப்பை இனங்காட்டிக் காலங்காலமாக அழியாவரம் பெற்றுள்ளவர்கள் பலரை நாம் நன்கறிவோம். அவர்களைக் கண்டும், அவர்தம் கவிதை களைக் கற்றும் விளைந்த கவிஞர் ஒருவர் இங்கே பாட் டெழுதப் பயந்த நிலையை வெண்பா வரிகளுக்குள் சிறைப்படுத்தியுள்ள சிறப்பைப் பாருங்கள்.

**சிந்தாமணியும் சிலம்பும் செயங் கொண்டான்**
**தந்த பரணித்தமிழ்ப்பாட்டும் - வந்துவந்து**
**வீட்டிருந்து என்னை விரட்டி அடிக்குமெனப்**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

**கம்பன் கவியும் கவிகாள மேகத்தின்**
**அம்பொன் கவியுமடைந்தென்னை - செம்புருக்கிப்**
**போட்டுவதைக்குமெனும் புன்மையினை நானினைந்து**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

காப்பியங்களும் கலிங்கத்துப் பரணியும் பாடியோர் தந்த பாடல்களைக் கற்றறிந்தவர். கம்பன், காளமேகம் ஆகியோர் வடித்த அழியா இலக்கியங்கள் பற்றி அறிந் தவர். அவர்களின் திறமைக்கு நிகராகப் பாட்டெழுதும் வகையறியாது பயங்

**மைதிலி.தேவராஜா**

கொண்டேன் என்கிறார்.

**வள்ளுவனின் வான்மறையும் வள்ளலார செந்த மிழும்**
**உள்ள முருக்கு திருவாசகமும் - மெள்ளவந்து**
**தீட்டுக் கவிஞனெனத் திட்டிப் பழிக்குமெனப்**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

**நந்திக் கலம்பகமும் நான் படிக்கும் மேகலையும்**
**சிந்தை உருக்கும் திறனறியார் - வந்தபடி**
**காட்டு விலங்காய் கவியெழுதும் காரணத்தால்**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

பொய்யாமொழி தந்த வள்ளுவரையும், உள்ள முருக்கும் திருவாசகம் தந்த வள்ளலாரையும் படித் தறிந்தவர், அவர்போன்று நற்கவி எழுதும் ஆற்றல் தம் மிடம் உண்டோ? என ஐயுற்றுக் கவி எழுதப் பயந்தார். நந்திக் கலம்பகம், மணிமேகலை போன்றவற்றின் கவித்துவம் விளங்கிக் கற்றவர், கற்பித்தவர்; இன்றைய நாட்களில் கவியறியார் தம்மைத் தாமே கவிஞரெனச் சொல்லி எழுதும் சுவையற்ற கவிதைகளைப் பார்த்து மனம் நொந்து கவிதை எழுதப் பயந்தேன் என்கிறார்.

**சங்கப் புலவர்களும் தன்னேரில் ஆண்டாளும்**
**தாங்கத் தமிழ்தந்த பாரதியும் - இங்கிதமாய்**
**சாட்டுக் கவிஞனெனச் சாடி அடிப்பரெனப்**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**


**சின்னத்தம்பிப் புலவர் சீரார் கவிதந்த**
**பென்னம் பெரிய மகாகவியும் - என்னைவந்து**
**கேட்டு விரட்டிக் கேலிசெய்வர் என்றெண்ணிப்**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

சங்கப் புலவர்களும் ஆண்டாளும் பாரதியும் போன்ற புகழ்புத்த புல வர் முன்னே நீயுமொரு கவிஞனோ எனச் சாடு வார்கள் எனப் பயப்படு கிறார். ஈழத்தின் புகழ்பூத்த சின்னத்தம்பிப் புலவர், மகாகவி போன் றோரின் கவிதைகளுடன் என் கவிதையை ஒப்பிட்டுக் கேலி செய்வார்களோ என்றும் அஞ்சுகின்றார்.

**சுந்தரரும் செந்தமிழும் சோமேசர் வெண்பாவும்**
**முந்தவையிற் கூடி முணுமுணுத்து - இந்தவிதம்**
**நீட்டுக் கவிதை நிகழ்த்து மெனைச் சாடு மெனப்**
**பாட்டெ முதல் விட்டேன் பயந்து**

**நல்ல புதுக்கவிதை நாளுமெழுதுகின்ற**
**வல்ல வருமேனை விமர்சகரும் - தொல்லைதந்து**
**வாட்டிவதைப்பரென நானினைந்து**
**பாட்டெழுதல் விட்டேன் பயந்து**

சுந்தரர, சோமேசர் ஆகியோரின் வெண்பாக்களைக் கற்றவரகள் எனது கவிதைகளைக் கேட்டு குறைகண்டு முணுமுணுத்து நீட்டுக் கவிதை எனச் சாடுவார் களோ என்று அஞ்சும் கவிஞர், நல்ல புதுக்கவிதைகள் எழுதுகின்ற புதியவர்களும் வல்லமை மிக்க கவிதை விமர் சகரும் இருக்கின்ற இக் காலத்தில் அவர்கள் வந்து என்னிடத்தில் கவிதை பற்றி யும் கவிஞர் பற்றியும் கேள்வி கேட்டு தொல்லை செய்து வாட்டி வதைப் பரென எண் ணிப் பயந்து பாட்டெழு தல் விட்டேன் என்கின் றார்.



தற்புகழ்ச்சி கொள்ளாது, அவையடக்கத்துடன் வெண் பாவின் வகை தெரிந்து கவிஞரெனத் தன்னை அடை யாளப்படுத்திக் கொண்டுள்ள பேராசிரியர எஸ்.சிவ லிங்கராஜா சிறந்த இலக்கியப் பல்துறைசார் ஆற்றல் மிக்கவர். யாழ் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்து றைத் தலைவரும் பேராசிரியருமான சிவலிங்கராஜா தொடர்ந் தும் இலக்கியத் துறையில் தன்னை ஈடுபடுத்தி சிறந்த ஆக்கங்களை வெளிக்கொணர்வார் என நம்புவோம்.■

# அதிசயம், ஆனால் உண்மை



**தொலையா நினைவுகள்**

**'அ**திசயம்! ஆனால் உண்மை. பாடசாலையில் ஆணும் பெண்ணுமாக ஒரு பிள்ளை' என்று பெரிய எழுத்தில் தலைப்பிடப்பட்ட செய்தியொன்று அன்றைய வரதர் வெளயீடான புதினம் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அச்செய்தியை வாசித்த எனது பாடசாலை ஆசிரியையான மிஸ் சபாபதிப்பிள்ளையின் முகத்தில் விரிந்த கவலையின் கோடுகளை நான் அவதானித்தேன். இந்தச் செய்தி குறித்த உண்மைத் தன்மை அவரது மனத்தை உறுத்துவ தாக நான் உணர்ந்தேன்.

**நெடுந்தீவு மகேஷ்**

அன்றைய நாட்களில் அப்பாடசாலையின் மாணவனாக நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். இச் செய்தி பற்றிப் பாடசாலையில் எழுந்த சலசலப்பினால் அதிபர் என் னைத் தனது அலுவலகத்திற்கு அழைத் திருந்தார். அப்போது நான் பயந்து பயந்து அதிபரின் வாசலில் நின்றபோது 'அடே,நீ பெரிய பேப்பர் றிப் போட்ட ராய் மாறிவிட்டாய் என்ன?' என்றார் கேலியாக. நானோ அச்சத்தோடும் அடக்கத்தோடும் மௌனமாக நின் றேன்.

'யாரடா இந்தச் செய்தியைப் பேப்பருக்கு அனுப்பினது?' என்று சிறிது அதட்டலாகவே கேட்டார். அப்பொழு தும் நான் எதுவும் பேசாதிருந்தேன். ஏனெனில் அந்தச் செய்தியை அனுப்பியவன் நான் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டே அதிபர் என்னுடன் பேசினார். 'நீ பெரிய எழுத்தாளனாக வாறது நல்லதுதான். அதுக்காக எங்கட பல்லைக் குத்தி எங்கட மூக் கில வைக்கிறது சரியோ?' என்று கூறியவாறு என்னைப் பார்த்த அதிபரைப் பாரக்க நான் அஞ்சினேன்.

'நீ இப்பிடிச் செய்தி போட்டதுக்காக உன் னுடைய ரீச்சர் கவலைப்படுகிறார். போய் ரீச் சரிட்ட மன்னிப்புக் கேள்?' என்றார் அவர். எனது மனம் பெரிதும் சஞ் சலப்பட்டது.

நான் தெரிவித்த செய்தியில் உண்மை உண்டு என் பதும், அதனைப் பெரிது படுத்திச் செய் தியாக்கிக் கணிதம் சார்ந்த ஒரு தவறைக் கண்டுபிடித்து விட்டதாகவும் நான் பெருமைப்பட்டி ருந்தேன். எனினும் ரீச்சரைப் போய்ச் சந்தித்து மன் னிப்புக் கேள் என்று அதிபர் பணித்தபோது ரீச்சருக்கு எதிரில் நிற்கும் தகுதி என்னி டம் இல்லாமலே போய் விட்டது. தயங்கித் தயங்கி அவரருகில் சென்றேன்.

'என்ன மகேஸ், நல்ல செய்திதான் போட்டிருக் கிறாய்? இந்தச் செய்தியைப் போடும்படி யார் உனக் குச் சொல்லித் தந்தது?' என்றொரு கேள்வியை என்னி டம் அவர் கேட்டபோதுதான் நான் சற்றுத் திகைத்தேன். ஒரு செய்தி கூறும் உண்மைக்கும் மேலாக, அச்செய் தியைப் பகிரங்கப்படுத்தல் என்ற விடயம் தொடர்பாக எழுந்து நிற்கும் கேள்விகள் என்னை உலுக்கின.

ஒரு ஆசிரியை தனது வகுப்பு மாண வர்களுக்குக் கொடுக்க அச்சிடப்பட்டி ருந்த கணிதபாட வினாத்தாளில் காணப்பட்ட அச்சுப் பிழையின் காரணமாக எழுந்த செய்தியே அது.

32 பிள்ளைகள் உள்ள ஒரு வகுப்பில் ஐந்தில் இரண்டு பங்கினர் ஆண்கள். ஏனையோர் பெண்கள். அந்த வகுப்பிலிருந்த பெண்கள் எத்தனை பேர்? வருட இறுதித் தவணைப் பரீட்சையின்போது ஆறாம் தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கணித வினாத் தாளில் இடம்பெற்றிருந்த கணக்குகளில் ஒன்று தான் இது.

முப்பத்திரண்டு பிள்ளைகளையும் ஐந்தால் வகுத் தால் ஒரு பங்கினுள் ஆறுபிள்ளைகள் தெரிவாகியிருப் பர். கணக்கின்படி மேலும் ஒரு பிள்ளையை ஐந்தாகத் துண்டாடி அதன் இரண்டு துண்டங்களையும் இணைத் தாற்றான் ஐந்தால் வகுத்ததன் சரியான விடை கிடைக் கும். எனவே கணக்கில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கை தவறானது என்பது வெள்ளிடைமலை. ஆயினும் அதனைத் தெரிந்து கொண்டதும் தவறைச் சுட்டிக் காட்டி வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ள வேண் டிய பொறுப்புடைய தரப்பினரே, தற்செயலாக அத் தவறைவிட்ட ஆசிரியரையோ, ஆசிரியையோ சிக்க லுக்குள்ளாக்க, தலைக்குனிவுக்கு உட்படுத்த முனை வது நாகரீகமாகாது.

எது எப்படியோ, குறிப்பிட்ட அந்த வினாத்தாளில் இருந்த எண்ணிக்கைத் தவறு அன்றைய புதினத்திற் கான தலைப்புச் செய்தியாகவும் ஆகிப்போனது. இதனைச் செய்தியாக்கிப் பத்திரிகையில் போடும்படி கேட்டுக் கொண்டவர் வேறுயாருமல்ல, ரீச்சரின் சக ஆசிரியை யான மிஸ் சங்கரன்தான்.

ஆயினும் அது குறிப்பிட்ட வினாத்தாளைத் தயா ரித்த ஆசிரியையின் கவனயீனத்தின் வெளிப்பாடெனி னும், அந்த வினாத்தாள் மாணவர்களுக்கு விநியோகிக் கப்படுவதற்கு முன்னரே அதிலிருந்த தவறு திருத்தப் பட்டுவிட்டது. ஆனால் இது திருத்தத்திற்கு முன்னரான வினாத்தாள் என்பதை மிஸ். சங்கரன் ரீச்சர் எனக்குத் தெரியத்தரவே இல்லை.

வினாத்தாள் திருத்தப்பட்டதால் பரீட்சை எழுதிய மாண வர்கள் அதனைத் தவறுகள் எதுவுமின்றி வாசித்துத் தெரிந்து கொண்டு விடை எழுதியும் விட்டார்கள்.

தவறு திருத்தப்படுவதற்கு முன்னராக வினாத் தாளை அங்கிருந்த மிஸ். சங்கரனே என்னிடம் தந் திருந்தார். நான் அதனை மிஸ். சபாபதிப்பிள்ளை ரீச்சரிடம் சொல்ல வில்லை. ஆனால் இந்த உண்மை யைப் பின்னர் ஒரு நாள் ரீச்சர் தெரிந்து கொண்ட போது இது பற்றி என்னிடம் விசாரித்தார். அப் பொழுதும் நான் மிஸ். சங்கரனே அதைத் தந்தார் என்பதைச் சொல்லவே இல்லை.

இந்தச் சிறிய விடயம் ஆசிரியைகளிடையே தோன்றி வளரும் பொறாமையின் காரணமாகப் பெரியதொரு செய்தியாக்கப்பட்டது என்னவோ ஆச்சரியம்தான். இந்த அனுபவம் எனக்குக் கற்றுத்தந்த பாடத்தின் வழியிலேதான் என்னைத் திருத்திக் கொண்டு இன்றைய எனது பணி யைத் தொடருகிறேன்.

இன்று பாடசாலை அதிபர்களும் அதன் ஆசிரிய குழா மும் தமது சிறப்பான பள்ளிச் செயற்பாடுகள் மூலம் ஐக்கி யம் குலைவுறாதிருக்கவும், பொறாமை எனும் தீய குணம் தோன்றாதிருக்கவும் பணி செய்வதே நன்மை தரத்தக் கது. ஆசிரியர்கள் மாணவர்களின் குற்றம் களைபவர் கள் என்ற வகையில் தமக்குள் ஐக்கியப்பட்டு உழைப் பதன் மூலமே அதனை வென்றெடுக்க இயலும். ஒவ் வொரு பாடசாலைச் சமூகமும் இவை குறித்துச் சிந்தித் துச் செயலாற்றுவதே விரும்பத்தக்கது. ■



# இராணுவம்தான் என்பது உறுதியாகிறது

**யாழ்.** தேர்தல் மாவட்டத்தில் இடம் பெறப் போகும் 19 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரம் வன்முறைச் சம்பவங்களினூடனேயே ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 16ம் திகதி அளவெட்டியில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் முதலாவது கூட்டம் பெரும் களேபரத்தில் முடிவடைந்துள்ளது.

இந்தக் கூட்டத்தைக் குழப்பியவர்கள் இராணுவத்தினரே என்றும், அவர்களைத் தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன், எஸ்.சிறீதரன் ஆகியோர் நடத்திய பேச்சின் போதும், அளவெட்டித் தாக்குதலில் இராணுவத்தினரே சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று அவர்கள் அடித்துக் கூறியுள்ளனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய செய்தி ஒன்றையும் தளபதியிடம் தெரிவித்தனர்.

"வந்த படையினர் எங்களைத் தாக்க முற்பட்டனர். எமது பாதுகாப்புப்பிரிவினர் பாய்ந்து அதைத் தடுக்காவிட்டால், பெரும் அனர்த்தம் ஏற்பட்டிருக்கும்" என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தளபதி ஹத்துருசிங்கவிடம் கூறியுள்ளனர்.

எதிர்காலத்தில் இத்தகையது போன்ற சம்பவம் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது. கூட்டமைப்பினர் சுதந்திரமாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்றும் கூட்டமைப்பினர் மட்டுமல்லாது எந்தக்கட்சியாக இருந்தாலும் சுதந்திரமாக தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்றும் தளபதி ஹத்துருசிங்க உறுதி கூறியுள்ளார்.

தளபதி ஹத்துருசிங்க வழங்கியுள்ள இந்த உறுதிமொழி ஜனநாயகத் தேர்தல் ஒன்று இடம்பெறும் என்பதை உறுதி செய்கிறது.



கூட்டமைப்பினருடனான சந்திப்பை அடுத்து ஊடகவியலாளர்களை தளபதி ஹத்துருசிங்க சந்தித்தார். "அளவெட்டித் தாக்குதல் படையில் உள்ள சில சக்திகளாலோ அல்லது வேறு சக்திகளினாலோ மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இது தொடர்பாக விசாரணைகள் இடம் பெறுகின்றன. படையினர் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அவர்கள் படையில் இருந்து வெளியேற்றப்படுவதுடன் அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று தளபதி தெரிவித்தார்.

இந்த நிலையில் அளவெட்டித் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இராணுவத்தினரே எனப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதி செய்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "அதிகாரி ஒருவரின் தலைமையில் படையினர் குழு ஒன்று கூட்ட மண்டபத்துக்குச் சென்ற போது கூட்டமைப்பின் கூட்டம் இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட, கூட்டத்தில் கலந்து கொண்ட சிலருக்கும் படையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதத்தின் போது, அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கே அடி வீழ்ந்தது. நாடாளுமன்ற உறுப்பினரையோ கூட்டத்தில் பங்கேற்றவர்களையோ அவர்கள் தாக்கவில்லை" என்று கூறியுள்ளார்.

"உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் மண்டபம் ஒன்றில் நடந்தது. இது சட்டவிரோதமான கூட்டம் அல்ல. சாதாரணமாக 50 பேர் பங்குபற்றிய கூட்டம். இதற்குப் பொலிஸ் அனுமதி பெற வேண்டிய தேவை இல்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் எமது மக்களுடன் கலந்துரையாடவும் பொலிஸ் அனுமதி தேவையா?" எனக் கூட்டமைப்பினர் கேட்கின்றனர்.


83 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளைஞர்கள் சிறு சிறு கூட்டங்களை நடத்தியபோது, அங்கு நுழைந்து, இளைஞர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது போன்று, மீண்டும் அரசு இராணுவத்தினரை ஏவி விட்டுள்ளதா எனச் சந்தேகப்பட வேண்டியுள்ளது என்று கூட்டமைப்புத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அளவெட்டித் தாக்குதலில் படையினரே சம்பந்தப்பட்டுள்ளனர் எனக் கூட்டமைப்பினர் அடித்துக் கூறியது உண்மைதான் என்பதையே பாதுகாப்புச் செய லரின் கூற்றும் உறுதிசெய்கிறது. இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிக்கு முன் நிறுத்தும் போது தான் படையினருக்கு நல்ல பெயர் வரும். மக்களும் படையினர் மீது நம்பிக்கை கொள்ள முடியும்.

இது தான் யதார்த்த நிலை.

# கூட்டமைப்புக்குள் பிளவு வரவாய்ப்பில்லை

■ யாழவன்



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் கூடுதல் ஆசனங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக - தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகளாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருப்பதை விரும்பாத சக்திகள் கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறி வருகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ நோதராதலிங்கம் ஆகியோர் வன்னி அபிவிருத்திக்காக அரசுடன் இணைவது குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கிறார்கள். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனுக்கு இந்து கலாசார அமைச்சுப்பொறுப்பை அரசு வழங்கப்போகிறது என்று அரச தரப்புச் சக்தி ஒன்று இணையத்தளம் ஒன்றுக்குச் செய்தியைக் கசியவிட்டது.


இந்தத்தகவலை அன்றே மறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், தாங்கள் தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இருந்தும் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றப் போகிறோம் என்று அறிவித்தனர்.

இத்தகவலைக் கசிய விட்டு இருவாரங்களுக்குப் பின்னர் நாட்டின் பாதுகாப்புஅமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ கூட்டமைப்புக்குள் பிளவு என்று கதை விட்டுள்ளார்.

"அரசுடன் உறவுகளை மேம்படுத்த இரா.சம்பந்தன் எடுக்கும் முயற்சிகளைக் கூட்டமைப்பின் ஒரு பகுதி எதிர்ப்பதுடன் நல்லிணக்கத்தைக் குழப்ப இரவு பகலாக உழைக்கிறது" என்று கூறியுள்ளார் கோத்தபாய.

இரா.சம்பந்தனின் முயற்சிகளைப் பிடிக்காத கூட்டமைப்பினர் சிலர் அனுமதி பெறப்படாத கூட்டம் ஒன்றை அளவெட்டியில் நடத்தி பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளனர் - இப்படி கோத்தபாய கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதனுடன் தான் பேச்சு நடத்தி தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டுள்ள அரசு எப்படியாவது கூட்டமைப்பை உடைக்க பகீரதப்பிரயத்தனம் எடுத்துள்ளது.



கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பியசேன வைத் தமது கைக்குள் போட்டமாதிரிஏனைய உறுப்பினர்களுக்கும் அரசு வலை விரித்துள்ளது.

ஏனைய உறுப்பினர்கள் தமிழ் மக்களின் அசையாத நம்பிக்கையுடன் செயற்படுவதால் அரசின் பாச்சா பலிக்காது என்றே கருதப்படுகிறது.

கூட்டமைப்பைப் பிரித்து அவர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள் அல்லர் என்பதை நிரூபித்து தான் நினைத்ததைச் சாதிக்க அரசு முனைந்துள்ளது.

கூட்டமைப்பு வலுவிழந்தால் தான் நினைத்ததை தமிழ் மக்கள் மீது கட்டி அடித்து விடலாம் என்ற சிந்தனையில் கூட்டமைப்புக்குள் பிளவு என சர்வதேசத்துக்குக் காட்ட அரசு முனைந்துள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

கடந்த கால வரலாறு போன்று தமிழர் தரப்பை பிளவு படுத்தி தான் நினைத்ததைச் செய்து வந்த ஆட்சியாளர்கள் போன்று இன்றைய ஆட்சியாளர்களும் செயற்பட முனைகிறார்களா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்புகின்றனர். இந்தக் கேள்விக்கான பதிலை காலம் தான் தரவேண்டும்.

சுடர் ஒளி

26, ஜூன் - 02, ஜூலை, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com


## மானிட நீதிக்கான போராட்டம்

பாதி அரசுடமையான சுயாதீன தொலைக் காட்சியின் தமிழ் அலைவரிசையான வசந்தம் தொலைக்காட்சியில் கடந்த வார இறுதியில் 'காந்தி' திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது. 1982 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் அது. எனினும் தமிழ் உப தலைப்புக்களுடன் அந்தப் படம் ஒளிபரப்பானது.

கோட்சேயால் காந்தி சுட்டுக் கொல்லப்படும் காட்சியில் இருந்து பின்நோக்கிச் செல்வதாக திரைப்படம் நகர்கிறது.

திரைப்படத்தின் ஒரு காட்சியில் தென்னா பிரிக்காவின் ஜொகன்னர்ஸ்பேர்க் நகரில் உள்ள இம்பீரியல் தியேட்டரில், அன்றைய நிற ஒடுக்கு முறைக்கு எதிரான கூட்டத்தில் காந்தி உரையாற் றிக் கொண்டிருக்கிறார்.

தென்னாபிரிக்க நிறவெறி அரசு நிறைவேற் றிய சட்டம் ஒன்றைப் பற்றி அவர் இப்படி விளக் குகிறார்...

''ஜெனரல் சுமுட்ஸின் புதிய சட்டம் குறித்து விளங்கிக் கொள்வதற்காக இங்கு கூடியிருக்கி றோம். எல்லா இந்தியர்களும் அவர்களது பெரு விரல் அடையாளங்களை இனி வழங்க வேண் டும்; திருடர்களை, குற்றவாளிகளைப் போன்று. ஆண்கள் பெண்கள் எல்லோரும். கிறிஸ்தவத் திருமணங்களைவிட வேறு எந்தத் திருமணங் களும் செல்லுபடியானவை அல்ல. இந்தச் சட் டத்தின் கீழ் இங்கிருக்கும் மனைவிமார்களும் தாய்மாரும் நடத்தை கெட்டவர்கள். அத்துடன் இங்கிருக்கும் ஒவ்வொருவரும் தப்பிப் பிறந்த வர்கள்.''

''இந்தியர்களின் இருப்பிடங்களை - அவற்றை நான் வீடுகள் என்று சொல்ல மாட்டேன் - பொலி ஸார் கடக்கும் போது, எப்போது வேண்டுமானா லும் உள்ளே நுழைந்து - இந்தியப் பெண்கள் தனித்திருக்கும் போதும்- அடையாள அட்டை களைக் கேட்கலாம்''

காந்தி இப்படிச் சொல்வதைப் பொறுக்க முடி யாமல் கூட்டத்தில் இருந்தவர்களிடம் இருந்து வார்த்தைகள் பறக்கின்றன.

''கொஞ்சம் பொறுங்கள்! இதையும் கேளுங் கள்... பொலிஸ் அதிகாரி, இருப்பிடத்தின் வாச லில் நின்று குரல் கொடுக்கத்தான் வேண்டும் என்றில்லை... திறந்தவீட்டுக்குள் நுழைவது போன்று விருப்பப்படி நுழையலாம்.''

காந்தி இப்படிச் சொன்னதும் கூடியிருந்தவர் களிடம் இருந்து கடுமையான வன்முறை தொனித்த வார்த்தைகள் வெளிப்படுகின்றன. ''எவனாவது அப்படி நுழைந்தால் அவனைக் கொன்றுவிடுவேன்'', ''எதையும் எதிர்கொள்ளத் தயார்'', ''உயிரையும் விடுவேன்'' என்று வார்த் தைகள் தடிக்கின்றன. அவற்றைக் கேட்டுவிட்டு காந்தி சொல்கிறார்...

''உங்களுடைய அத்தகைய வீரத்தை நான் மெச்சுகிறேன். ஏனெனில் இவ்வாறான ஒரு நிலையில் நானும் எனது உயிரை விடுவதற்குத் தயாராகவே இருக்கிறேன். ஆனால், நண்பர் களே! எவரையும் கொல்வதற்கான காரணங்கள் எதுவும் எம்மிடமில்லை''

''அதேவேளை, இந்தச் சட்டத்தை தோற்கடிப் பதற்கு வழி வகைகள் இருக்கின்றன. அவர்கள் எமக்கெதிராக என்னதான் செய்தாலும் நாம் அவர்களைத் தாக்கக்கூடாது; கொல்லக்கூடாது. அதேசமயம் எம்மில் ஒருத்தர்கூட தமது கைவிரல் அடையாளத்தையும் அவர்களுக்குக் கொடுக் கக்கூடாது. ஒரேயொருத்தர் கூடக் கொடுக்கக் கூடாது''

''அவர்கள் எங்களைச் சிறையில் அடைக்கக் கூடும். தண்டம் விதிக்கக்கூடும். எங்கள் சொத் துக்களை முடக்கக்கூடும். ஆனால், நாங்களாக விட்டுக் கொடுக்காத வரை எங்கள் சுயமரியா தையை அவர்களால் ஒருபோதும் பறித்துச் செல்ல முடியாது''

''நான் உங்களிடம் கேட்பதெல்லாம், போரா டுங்கள்... என்பதைத்தான்''

1948 முதல் 1994 வரையான காலப்பகுதியில் தென்னாபிரிக்காவில் நிறவெறி அரசின் ஆட்சி யின் போது நிலவிய சூழலை இந்தக் காட்சிகள் நினைவுபடுத்துகின்றன.

இன்று இந்த நாட்டில் தமிழர்கள் அனுபவிக் கும் துன்பங்களும் துயரங்களும் தென்னாபிரிக்க மக்களின் நிலைமைக்குச் சற்றும் வேறுபட்ட தல்ல. அன்று மனித நீதிக்காகவும் நியாத்துக்காக வும் அந்த மக்களைப் போராடுமாறு அழைக்க காந்தி என்ற மனிதர் இருந்தார்; எம்மத்தியில் அப்படி ஒருவர் இல்லை என்பதைத் தவிர.

# கிரிக்கெட்டால் யுத்தம் செய்தல்

■ குறுக்காலபோவான்

“எல்லாற்றை கன்றும் ஓடுதெண்டு கந்தை யற்றை பேத்தைக் கன்றும் ஓடிச்சாம்” என்ற கதை யாக இந்தியாவின் ஐ.பி.எல் போட்டிகளைப் பார்த்து இலங்கையும் எஸ்.எல்.பி.எல்(ஸ்ரீலங்கன் பிறீமியர் லீக்) என்ற அமைப்பைத் தோற்றுவித்தது. கிரிக் கெட்டை வைத்து எப்படிக் கோடிக்கணக்கில் பணத்தைச் சம்பாதிக்கலாம் என்ற வித்தையை உலக நாடுகளுக்கு ஐ.பி.எல் கற்றுக் கொடுத்திருந்தது. இதைப் பார்த்து தாங்களும் பிராந்திய அணிக ளுக்கு இடையிலான ருவென்ரி- 20 போட்டிகளை வைத்து எட்டுக் கோடி ரூபா கடனில் மூழ்கிக் கொண் டிருக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கு ‘ குளுக் கோஸ்’ ஏற்றி விடலாம் என்ற நப்பாசையோடு இலங்கையில் எஸ்.எல்.பி.எல் அமைப்பு அவசரம் அவசரமாக உருவாக்கப்பட்டது. ஐ.பி.எல்லைப் போலவே இங்கும் வெளிநாட்டு வீரர்களை ஒப்பந் தம் செய்யும் நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட் டது. ஐ.பி.எல்லில் கலக்கிய இந்திய வீரர்கள்,மற்றும் பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் வீரர்கள் பெருந்தொகைப் பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்யப்பட்டனர். அணிப்பிரிப்புகளும் அமோகமாக நடந்தது. போட்டிக்கான நாள் நெருங் கிக் கொண்டிருக்கையில் திடீரென இலங்கைக்கு இந்தியா அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

“எமது நாட்டு வீரர்கள் எவரும் இலங்கைப் பிரீமி யர் லீக் போட்டிகளில் விளையாட மாட்டார்கள். அவர்களுக்கு தடையில்லாச் சான்றிதழை நாம் வழங் கப் போவதில்லை.” என்று தடாலடியாக இந்தியக் கிரிக்கெட் சபை அறிவித்தது. இது இலங்கையின் கனவுகள் மீது மண் அள்ளிப் போட்டு விட்டது.

ஆரம்பத்தில் எஸ்.எல்.பி.எல் அமைப்பு இலங்கை கிரிக்கெட் சபையின் ஒரு உப அமைப்பு என்ப தாலேயே இந்திய வீரர்களை விளையாட அனு மதித்ததாகவும், ஆனால் உண்மையில் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட ‘சோமர்செற் என்டர் ரைமென்ட்’ என்ற தனியார் அமைப்பே இப் போட்டிகளை நடத்துவதால் தமது வீரர்கள் இதில் கலந்து கொள்ளமுடியாது என்று தன் செயலுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை நியாயம் கூறியுள்ளது. ஆனால் உண்மையில் இது ஓர் அரசியல் சார்ந்த நடவடிக்கை என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

உலகக்கிண்ண இறுதிப் போட்டிகள் நடைபெற்ற போது அதைக் காண இந்தியாவுக்குச் சென்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கை விளையாட்டுத் துறைஅமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு உரிய மரி யாதையை வழங்க இந்தியா தவறியிருந்தது. இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பதையும் அவரோடு உரையாடுவதையும் இந்திய அதிகாரிகளும் அரசுப் பிரதிநிதிகளும் விரும்பவில்லை. ஏனெனில் அந்தச் சமயத்தில் தான் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பான காணொளிகள் வெளியாகி யிருந்தன. இந்தக் காணொளிகளில் இடம்பெற்றி ருந்த காட்சிகள் தமிழக மக்களைப் பெரிதும் கொந் தளிக்கச் செய்திருந்தது. தம்முடைய தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழர்கள் விலங்கு களைப் போல ஈனமான முறையில் நிர்வாணமாக்கப் பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதை அவர்களால் சகிக்க முடியவில்லை. இறுதிப் போரில் இலங் கைக்கு இந்தியா உதவி செய்ததைக் கண்டித்தும், இனியும் இலங்கைக்கு இந்தியா சார்பாக நடக்கக் கூடாது என்றும் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். இப்படியான அரசியல் சூழ்நிலை யில் மகிந்தவை கனம் பண்ணி, மாலை மரியாதை களோடு வரவேற்றால் அது தேவையில்லாத சிக்கல் களைக் கொண்டு வந்துவிடும் என இந்திய அரசு எண் ணியது. இதனாலேயே உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் மகிந்த புறக்கணிப்புக்கு உள்ளானார்.

இந்தப் புறக்கணிப்புக்குப் பழி தீர்க்கும் முகமாக இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை வீரர்கள் அனைவரும் உடனடியாக நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என இலங்கை அரசு அதிரடி அறிவிப்பு விடுத்தது. வீரர்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஏனெனில் இலங்கை கிரிக்கெட் சபையின் அனுமதி பெற்ற பின்னர் தான் ஐ.பி.எல் போட்டிகளில் வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். இங்கிலாந்துட னான தொடருக்குப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலேயே வீரர்கள் திரும்ப அழைக்கப்படுகிறார்கள் என இலங்கை நொண்டிச் சாட்டொன்றையும் எடுத்து விட்டிருந்தது. ஆனா லும் வீரர்களின் எதிர்ப்புக் காரணமாக உடனடி யாக அவர்களை வரவழைக்க முடியவில்லை.

இலங்கை அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டால் விரக்தியுற்ற இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித் தார். இந்தக் கோபத்தில் இங்கிலாந்துக்கான தொட ரில் அவரை இலங்கை புறக்கணித்தது. இந்தியக் கிரிக்கெட் சபையைப் பழிவாங்குவதற்காக சிறுபிள் ளைத்தனமாக தன் நாட்டு வீரர்களை ஐ.பி.எல் போட் டிகளின் இடைநடுவே அழைக்க முயன்ற இலங்கை மீது இந்தியாவுக்கு ஆத்திரம் அதிகரித்தது. அதுவும் பழி வாங்கத் தருணம் பார்த்திருந்தது.

இப்போது இந்தியாவின் முறை. எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் தமது வீரர்களைப் பங்கு பற்றவிடா மல் தடுத்து விட்டது. இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவுக்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளைச் சந்திக்க இந்தியக் கிரிக்கெட் சபை மறுத்து விட்டது.

★எஸ்.எல்.பி.எல் போட்டிகளின் பின்னணியில் ஐ.பி.எல் அமைப்பின் முன்னாள் தலைவர் லலித் மோடி இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்தமை.

★தமிழக முதல்வராகப் பதவியேற்றுள்ள ஜெயலலிதா இலங்கைக்கு எதிரான தீவிரமான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியமை.

★இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், இலங்கை ஜனாதிபதியைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை.

★இலங்கை மீது ஐ.நா கொண்டுள்ள கோபம்.

★அடுத்தடுத்து வெளியாகும் போர்க்குற்றக் காணொளிகள்.

இத்தகைய காரணிகள் எல்லாம் சேர்ந்தே இந்திய வீரர்களை எஸ்.எல்.பி.எல்லில் விளையாட அனுமதிப் பதில்லை என்ற முடிவை எடுக்க இந்தியாவை தூண்டி யிருக்கலாம். எல்லாப்பக்கமும் அடிமேல் அடிவாங் கிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு, இந்தியாவும் தன் பங்குக்கு கொடுத்துள்ள அடியே இந்த தடை நடவடிக்கை. இந்தத்தடையை வெற்றிகரமாகத் தாண்டினால் மட்டுமே எஸ்.எல்.பி.எல்லை நடத்தி, இலங்கை கிரிக்கெட் சபையின் கடனை அடைக்க முடியும். இந்த இலக்கை அடையுமா இலங்கை?★

# நாதுவுக்கு ஏன் வருத்தம்...?




■ பிரமன்

"நாதுவுக்கு சுகமில்லையாம்". தேவலோகமெங்கும் தீயாகப் பரவிய வதந்தியால் அவர் வீட்டின் முன்னால் ஏகப்பட்ட கூட்டம். எல்லோர் கைகளிலும் 'நெஸ்ரமோல்ட்', 'ஹோர்லிக்ஸ்' போத்தல்கள் இருப்பதைக் கண்ட நாதுவுக்கு வலு புளுகம். ' நாலைஞ்சு மாதத்துக்கு உதுகளை வைச்சு சமாளிக்கலாம்' என்று உள்ளுக்குள் சந்தோசப்பட்டவாறே "ஐயோ! அம்மா! உடம்பெல்லாம் வலிக்குதே" என்று வேதனைக் குரலெடுத்துப் புலம்பினார்.

''உவன் அடிக்கடி பூலோகத்துக்குப் போட்டு வந்து லேட்டஸ்ட் நியூஸ் எல்லாம் வடிவாய் சொல்லுவான். இப்ப உவன் படுத்த படுக்கையா இருக்கிறதால அங்கஎன்னநடக்கிதெண்டு தெரியேலை."

''கண்ணூறு பட்டிருக்கவேணும்.''

''என்ன வருத்தமாம்?''

"அம்மாள் வருத்தம் எண்டு தான் கதை."

''நாதுவின் பிரண்ட் நந்திக்கும் போன கிழமை அம்மாள் வருத்தம் வந்தது. நாது தான் இரவிரவா அவனுக்கு பிளேன்ரீ எல்லாம் போட்டுக்குடுத்துப் பாத்தவன். அது தான் இவனுக்கும் தொத்தியிருக்க வேணும்".

வெளியே நின்றவர்கள் தங்கள் ஊகங்களுக்கு கை கால் எல்லாம் வைத்து நடமாட விட்டுக்கொண்டிருந்தார்கள்.

'இனியும் உள்ளுக்குப் படுத்திருந்தால் உவங்கள் எயிட்ஸ் எண்டும் கதை கட்டிப்போடுவாங்கள்' என்ற நினைப்பு வந்தவுடனேயே படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தார் நாரதர் (நாது). வெளியே நின்றவர்களின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டும். இவ்வளவு பேருக்கும்தன்னில் அக்கறையிருப்பதை எண்ணி நாதுவுக்குச் சந்தோசம் பிடிபடவில்லை. நாதுவின் கைகளில் நிறைய இடங்களில் உரசல் காயங்கள். ஒரு கன்னம் உப்பிப்போய் இருந்தது. காலில் நாலைந்து பிளாஸ்டர்கள். 'வின்னர்' படத்தில் அடி வாங்கிய வடிவேலுவை நாது ஞாபகப்படுத்தினார்.

''இவ்வளவு பேரும் என்னைப் பாக்க வந்ததுக்கு நன்றி. எனக்குப் பெரிசா ஒண்டுமில்லை. லேசா உடம்பு நோ மட்டும்தான். ரெண்டு நாள் 'ரெஸ்ட்' எடுத்தால் எல்லாம் சரியாயிடும். அதுக்காக நீங்கள் கொண்டு வந்த ஹோர்லிக்ஸ் ரின்களைத் திருப்பிக் கொண்டு போடாதையுங்கோ."

நாது இப்படிச் சொன்ன பிறகும் கூட்டம் அசைவதாக இல்லை. நாதுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் வந்தவர்கள் தன்னிடம் ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பது மட்டும் புரிந்தது.

"வருத்தம் பாத்திட்டிங்கள் தானே, பிறகேன் நிக்கிறீங்கள்?" எப்படியாவது கூட்டத்தைக் கலைத்துவிட வேண்டுமென்பதிலேயே அவர் குறியாக இருந்தார். இப்படித்தான் அண்மையில் பூலோகத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு இடத்தில் ஐம்பது பேர் தங்களுக்குள் கூட்டம்வைத்தபோது அவர்களைப் பச்சை உடுப்புப்போட்டிருந்த நூறு பேர் அடித்து நொருக்கியிருந்தார்கள். தப்பித்தவறி அவர்களுக்கு இங்கும் ஐம்பது பேர் நிற்பது தெரிந்தால் கைகளில் கொட்டன்களையும், சீ.டி.எம்.ஏ தொலை பேசிகளையும் தூக்கிக்கொண்டு துவம்சம் செய்ய வந்துவிடுவார்கள்.

"நாது! நல்லாய்த்தானே இருந்தனீர்? என்னண்டு இவ்வளவு காயங்கள்? எங்கையாவது களவுக்குப் போனீரோ?" என்று அக்கறையும் குத்தலும் கலந்து கேட்டார் நசிகேதர்.

"அந்தச் சோகக் கதையை ஏன் கேக்கிறியள்? எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்." என்று கவலையோடு சொல்லிக்கொண்டார் நாது.

''எதெண்டாலும் மற்றவைக்குச் சொன்னால் மனப்பாரம் குறையுமெல்லோ" நசிகேதர் நைசாக நாதுவின் வாயைக் கிளற முயன்றார்.

"சொன்னால் வெக்கக்கேடு. 27 வருசமா ஏ.எல். எக்ஸாம் எழுதி இந்த வருசம் தான் கம்பஸ் கிடைச்சது. அதுக் காண்டித்தான் அடிக்கடி பூலோகத்துக்குப் போட்டு வாறனான்." நாது தயங்கித் தயங்கிச் சொன்னார்.

"அதுக்கும் காயத்துக்கும் என்ன சம்பந்தம்?" கூட்டத்திலிருந்து பெரிதாக ஒரு குரல் எழுந்தது.

" சம்பந்தம் இருக்கு. இப்ப கம்பஸ் கிடைச்சா கண்டறியாத றெயினிங் ஒண்டு எடுக்க வேணுமாம். அதுவும் ஆமிக்காரர் தான் பழக்குவினம்."

" உதென்ன விண்ணாணம்? எந்த நாட்டில இப்பிடி ஒரு விநோதச் சட்டம்?" பாம்புத் தலையோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ராகு கேட்டார்.

"வேறை எங்க? எல்லாம் உந்த இலங்கையில தான். படிக்கிற பெடியளை றெயினிங்குக்கு வா எண்டு கூப்பிட்டு வாட்டி எடுத்துப்போட்டாங்கள். கம்பிக்கு மேலால ஒருத்தன் பாயச் சொல்லுறான். மரத்தில இருந்து குதிக்கச் சொல்லுறான் இன்னொருத்தன். முள்ளுக்கம்பிக்கு கீழால முந்நூறு மீற்றர் தவண்டு போகவேணுமாம். நான் சின்னக் குழந்தையா இருக்கேக்க கூட தவண்டு அறியன். இப்ப இந்த கிழட்டு வயசில தவழச்சொல்லி வெருட்டுறாங்கள். இப்பிடி உடம்பையே நோக்காடாக்கிப் போட்டாங்கள். தலைமைத்துவப் பயிற்சி எண்டு எல்லாரையும் கிழடு கட்டையள் மாதிரி பொல்லுப்பிடிச்சு நடக்க வைச்சது தான் மிச்சம்."

சொல்லும் போதே நாதுவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

''அப்பிடி எண்டால் 'எஸ்கேப் ஆகியிருக்க வேண்டியது தானே?'' மீண்டும் ராகு கேட்டார்.

"வந்திருக்கலாம் தான். ஆனால் வர முடியாத படியும் ஒரு விசயம் இருக்கு."


" என்ன விசயம்?" இப்பவும் ராகு தான் கேட்டார்.

"அது என்னெண்டால் இரவில நிறையப் புறோக்கிராம் நடக்கும். ஆமியில இருக்கிற பெண் பிரசுகள் அந்த நேரத்தில அரைகுறை உடுப்புக்களோட தான் வந்து ஆடுங்கள். அதுக்கு முன்னால எங்கட ரம்பை ஊர்வசியெல்லாம் தோத்துப்போவினம். அதை விட்டுட்டு வர மனம் வருமோ? " இன்னமும் அந்த இன்பக் கனவிலிருந்து விடுபடாத குரலில் நாது கூறினார்.

"உமக்குத் தான் எல்லாத்தையும் செல்போனிலை வீடியோ எடுக்கிற பழக்கம் இருக்கெல்லோ. இதை எடுக்காமல் விட்டனீரோ?" குரலில் ஆர்வம் பொங்கக் கேட்டார் சுக்கிரன்.

"எடுக்காமல் விடுவனோ?" என்று பெருமை பொங்கும் குரலில் கூறியவாறு தன் செல்போன் திரையில் காட்சிகளை ஓட விட்டார் நாது. அரைகுறை உடை மங்கைகளின் ஆட்டங்களை தேவலோக வாசிகள் அதில் பார்த்து ரசிக்கத் தொடங்கினர். பார்த்துக்கொண்டிருந்தவர்களின் கடைவாய்களில் அவர்களை அறியாமல் வீநீர் வழியத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் நாதுவின் வீட்டின் முன்னால் எச்சிலால் ஆன ஒரு வெள்ளம் பாயத் தொடங்கியிருந்தது.

# அன்புள்ள பேரக்குட்டிக்கு...



என்றும் பாசத்திற்குரிய பேரக்குட்டி அறிவது.

சில விசயங்களைக் கேள்விப் படேக்குள்ளை என்னாலை கடிதம் எழுதாமல் இருக்க முடியுதில்லை. எப்படி இருக்கிறாய்?

சின்னச்சின்ன மனக்கவலையளோட இருக்கிறாய் எண்டு நினைக்கிறன். வாழ்க்கையிலை பிரச்சினையள், மனக்கவலையள் இல்லாத மனிசர் ஆரேனும் இருக்கினமோ?

இதை ஏன் சொல்லுறனெண்டால் மேனை, இப்ப இளம் பெடிபெட்டையள் அவசரப்பட்டுத் தற்கொலை செய்ய வெளிக்கிடுகுதுகள்.

இந்த வருசத்திலை யாழ் மாவட்டத்திலை நாப்பத்தாறு தற்கொலையள், அதுவும் முதல் நாலுமாசத்திலை நடந்திருக்குது. ஜனவரியிலை எட்டு, பெப்பிரவரியிலை ஒன்பது, மார்ச்சிலை பதினாறு, ஏப்பிரலிலை பதின்மூன்டு எண்டு அதிகரிச்சுக்கொண்டு போறதைப் பார்க்க, மனசுக்குள்ளை ஏதோ செய்யுது. அது தான் பொறுக்கமாட்டாமல் உனக்குக் கடிதம் எழுத வெளிக்கிட்டன்.

காதலிலை தோத்துப்போனமெண்டு நஞ்சைக் குடிக்குதுகள், சகோதரங்களோட சண்டை பிடிச்சுப்போட்டு நெருப்பில குளிக்குதுகள், பரீட்சையிலை பெயிலாப் போட்டமெண்டு தூக்குப் போட்டு உயிரை மாய்க்குதுகள்.

சின்னச் சின்னப் பிரச்சினையள் எல்லாம் இதுகளின்ரை மனசில பெருசாய் விசுவரூபம் எடுத்திடுது . அதிகமாய் முப்பது வயதுக்கு குறைஞ்ச ஆக்கள் தான் தற்கொலை செய்யிறது கூடவாய் இருக்கெண்டு சொல்லுகினம்.

உணர்ச்சி வசப்பட்டு ஒருகணத்தில எல்லாத்தையும் மறந்து போகுதுகள். தங்கடை தங்கடை வீட்டில இருக்கிற தாய், தகப்பனை, சகோதரங்களை, அவையள் மீது இருக்கிற அன்பை, படிப்பை, ஊரை, நண்பர்களை எண்டு தங்களைச் சுத்தியிருக்கிற எல்லாத்தையும் ஒரு கணம் மறந்து போகுதுகள்.

இப்பெல்லாம் காதலிச்சு ஏமாந்து போன பிள்ளையளும் பெடியன்களும் தற்கொலை செய்யிறாங்களாம். அதிலையும் சின்னப்பெம்பிளைப் பிள்ளையள் ஏமாற்றுப்பட்டு வயித்தில பிள்ளையை வாங்கி அந்த அவமானத்திலை தற்கொலை செய்யுதுகள்.

அலரிவிதை, தூக்க மாத்திரை, கயிறு எண்டு அதுகளுக்கு நிறைய சாகிறதுக்கான வாய்ப்புகளும் வாய்க்குது. பொம்பிளைப் பிள்ளையளை வீட்டில இருக்கிறதுகள் சரியாய்க் கவனிக்கவேணும். படிக்கிற வயசில காதல் கத்தரிக்காயெண்டு சுத்துறதையும், கண்ட கண்ட படங்களைப் பாக்கிறதையும் தாய் தகப்பன் அறிஞ்சிருக்க வேணும்.

தாய் தகப்பன் இந்தப் பருவத்துப் பிள்ளையளை அதுகளின்டை வளர்ச்சியை, மாற்றங்களை உன்னிப்பாய்க் கவனிக்க வேணும். தட்டிக்குடுத்து உற்சாகப் படுத்த வேண்டிய இடத்திலை அதைச் செய்யவேண்டும். அதே நேரத்திலை கண்டிப்புக் காட்ட வேண்டிய இடத்தில கண்டிச்சு புத்திமதி சொல்ல வேணும். மனசு தடுமாறுற வயசில இளம் வயசுக்காரற்றை மனசைக் குழப்ப நிறையப் பிழையான விசயங்கள் எங்கட சமூகத்திலை நிறைஞ்சிருக்குது.

நான் எதுக்கு இதெல்லாம் உனக்குச் சொல்லுறனென்டால் உனக்கும் ரெண்டு பிள்ளையள் இருக்குதுகள். அதுகளின்ர வாழ்க்கையும், எதிர்காலமும் நல்லா அமைய வேணும்.

தாய் தகப்பன் எப்பவும் பிள்ளைகளோடை கதைச்சு நல்ல புரிந்துணர்வோட அதுகளின்ர பிரச்சனையளை விளங்கிக் கொண்டு விட்டுக்கொடுப்பு மனப்பான்மையோட அதுகளோடை அன்பாய் ஆதரவாய்ப் பழக வேணும்.

அப்போது தான் அதுகளும் மனம்விட்டு தாய் தகப்பனோட தங்கடை பிரச்சனையளைக் கதைக்குங்கள்.

பிள்ளையளின்ரை மனசு ஆரோக்கியமானதாய், உறுதியானதாய் நல்ல விசயங்கள் நிறைஞ்சிருக்கிறதாய்க் கொண்டு வருகிற கடமை அதுகளின்ரை தகப்பனுக்குத் தான் இருக்கு.

படிக்கிற இடங்களிலையும் அவையின்ரை மாற்றங்களை அவதானிச்சு அக்கறையெடுக்கிற தன்மையைப் பெத்தவர்கள் வெளிப்படுத்த வேணும். பிள்ளையளுக்கும் உணர்த்த வேணும். இருக்கிற பிரச்சினையளுக்குத் தற்கொலை ஒரு முடிவல்ல எண்டதை அதுகளுக்கு விளங்கப்படுத்தலாம். அதுக்கான பொறுப்பு வீட்டிலை பெற்றோருக்கும், பள்ளிக்கூடங்களிலை ஆசிரியர்மாருக்கும் இருக்கு.

வாழ வேண்டிய வயதிலை ஒரு பிள்ளை தற்கொலை செய்தால், அந்த வீடு எப்படி இருண்டு போய், பார்க்கிறதுக்கு சகிக்க முடியாமல் இருக்குமெண்டதை ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாய் சிந்தித்துப் பார்க்க வேணும்.

ஒரு குடும்பத் தலைவன் வறுமையெண்டு சொல்லி மனுசி பிள்ளையளை விட்டுட்டு தற்கொலை செய்யிறது எவ்வளவு முட்டாள் தனம்? எவ்வளவு கேவலம்? மனுசி பிள்ளையளை மேலும் மோசமாய்ப் பசி பட்டினியிலை தவிக்க விட்டுட்டு தான் உயிரைப் போக்கிக் கொள்ளுறதை ஆராலையும் ஏற்றுக்கொள்ள ஏலாது.

தம்பி, நாலு பேரோடை இந்த விசயங்களைக் கதை. பலபேர் பிரச்சனையிலை இருந்து தப்பிச்சுக்கொள்ளுகிற உபாயமாக இந்தத் தற்கொலையை நினைக்கினம். அதுக்குப்பிறகு அது எப்பிடி அந்தக் குடும்பத்தை, சமூகத்தைப் பாதிக்கும் எண்டதை இவையள் நினைக்கிறதேயில்லை.

பிள்ளையளை நினைக்க நினைக்க மனம் தவிச்சுக்கொண்டே இருக்கிறது.

என்றும் பாசமுள்ள
அம்மப்பா
க. சின்னத்தம்பி.



■ இறுதிப் பகுதி.

# வெள்ளைரோஜா முள்...!



sivanesan@usa.com
மு.சிவநேசன்

**எப்படியும் கரோலையும் டானியலையும் கொன்றுவிடுவது என்ற வைராக்கியத்துடன் கரோல் தங்கியிருந்த எமிலியின் பங்களாவுக்கு வருகிறான் மைக். ஏற்கனவே மைக் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து வந்த கரோலும் டானியலும் பங்களாவின் உட்புறம் மறைந்திருக்கும் மைக்கைக் கண்டு விடுகின்றனர்.**

மின்னியபடி பறந்து வந்த கத்தி டானியலின் மார்பில் பாய அலறியபடி அவன் விழுந்தான். எமிலி ஓடிவந்தாள். டானியலைத் தூக்கி நிறுத்திக் கட்டில் மீது படுக்க வைக்க முயன்றாள். அவளால் அசைக்க இயலவில்லை. கத்தி தானாகவே கழன்று விழுந்தது. நல்ல வேளை அது ஆழமாக ஏறவில்லை. கீழே இருந்து உயர எறிந்ததில் அதன் வேகம் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்க வேண்டும். ஆனால் குறி தப்பவில்லை. டானியலுக்கு மயக்கம் வந்தது. கரோல் காரினுள் காத்திருந்தாள். கண்ணாடிகள் பூட்டப்பட்டே இருந்தன. மைக் குறுக்கே வளைவைக் கடக்க முயலவும் அசுர வேகத்தில் காரைக் கிளப்பினாள் கரோல்.

உள்ளே. . . டானியல் மயங்கியதும் எமிலி கலங்கிப் போனாள். கத்தியில் நஞ்சு அல்லது மயக்க மருந்து பூசப்பட்டிருக்கலாம் என நினைத்தாள். அவனது காயத்தைச் சுத்தமாக்கினாள். இரத்தத்தைப் பிழிந்து எடுத்தாள். சுற்றிவரச் சீவி எறிந்தாள். ஒட்டுப் போட்டாள். தையல் போடவேண்டி இருந்தது. அதற்கான நுட்பங்களோ சாதனங்களோ அவளிடம் இல்லை.

கரோல் எங்கே என்ற ஏக்கம் அவளிடம் இருந்தது. அவள் சமாளிப்பாள் என்ற துணிவும் கூடப் பிறந்தது. டானியலின் நாடித்துடிப்பு சீராகவே இருந்தது. அதிகம் இரத்தம் போகவில்லை. வெறும் மயக்கம்தான் என நினைத்துக் கொண்டாள். தொழிலாளர் பகுதியை நோக்கி உச்சக் குரலில் உதவி கேட்டுக் கத்தினாள். அவளது குரலை மீறிக் காரின் எஞ்சின் உறுமி ஓய்ந்தது. ஏதோ நொருங்குவது போல சத்தங்கள் கேட்டன. துப்பாக்கி வேட்டும் கேட்டமாதிரி இருந்தது.

பின்புறம் இருந்து பலரும் வளவுக்குள் பாய்ந்து வருவதை அவதானித்தாள் எமிலி. கீழே இறங்கி வந்து கதவோரம் நின்றாள். கதவைத் திறப்பதா? விடுவதா? அதற்கிடையில் டெலிபோன் அழைத்தது.

ஹலோ எமிலி ஹியர்

கரோலின் விடயமாகச் சட்டத்தரணிகள் சார்பில் யாரோ கதைத்தார்கள். நாளை காலை எட்டுமணிக்கு அழைத்துப்போக வருவதாகவும் சொல்லி இருந்தார்கள். இவளால் எதையும் கூற இயலவில்லை.

'ஓ.கே' என்றுவிட்டாள். விடிந்ததும் பார்க்கலாம் என்ற எண்ணம்தான்.

வெளியே. . .

கரோல் காரைக் கிளப்பவும் அது புல்லட் போலப் பாய்ந்தது. மைக்கின் கைத்துப்பாக்கி காரை நோக்கித் திரும்பியது. வேட்டுக்களைத் தீர்த்தது.

கார்க் கண்ணாடி உள்ளே கரோலைத் தெளிவாகக் காட்டவில்லை. துப்பாக்கிச் சூட்டை எதிர்பார்த்திருந்த கரோல் ஸ்டெயரிங்கை விட்டு இயன்றளவு விலகியே இருந்தாள். சன்னங்கள் அவளது வலது தோளைப் பதம் பார்த்தன.

மைக் சுவரோரம் விலகித் தப்ப முயன்றான். கரோல் துரத்தித் திருப்பி இடித்தாள். அவன் சேர்க்கஸ்காரன். பாய்ந்து காரின் மேலாகப் பின்புறம் தாவ நினைத்தான். உடல் எழும்பத் தொடங்கவும் காருக்கும் சுவருக்கும் இடையில் அகப்பட்டான்.

கரோலின் வேகம் அத்தனை தீவிரம். இடுப்புக்குக் கீழே எல்லாம் சக்கையாய்ப் பிழியத் துவண்டு பொனட் நொறுங்கல்களின் மேலே சாய்ந்தான். இடுப்புக்கு மேலே உரசல் காயங்கூட ஏற்படவில்லை. அணு அணுவாக வேதனை தலைக்கு ஏறிக் கொண்டிருந்தது. இரத்த வெள்ளத்தில் பாதியுடல் மிதந்தது. மயக்கம் ஏற்படாதது வருத்தத்தை வேதனையைத் தீவிரமாக்கியது.

கரோல் காருக்குள் பந்து போல அங்கும் இங்கும் மோதினாள். மண்டையை உடைத்துக் கொண்டாள். கை கால்கள் முடங்கிப் போயின. மயக்கம் போட்டாள்.

எமிலி கதவைத் திறந்தாள். வெளியே வந்தாள். மைக் துடித்தபடி துவண்டான். அவனது தொங்கும் இரு கால்களும் ஓரளவுக்கு முற்றாகவே சிதைந்து கிடந்தன. காரின் கதவுகளைத் திறக்க இயலவில்லை. கரோல் மயங்கிக் கிடந்தாள். கார் நெளிந்தும் வளைந்தும் இருந்தது. கண்ணாடி நொருங்கல்களை விலக்கி அவளை வெளியே இழுக்க முயன்றாள். உதவிக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

தொலைபேசியில் பொலிஸையும் அம்புலன்ஸையும் அழைத்தாள். இனிவேறு வழி இல்லை. அம்புலன்ஸ் வந்ததும் பொலிஸுக்குக் காத்திராமல் உயிருக்குப் போராடுகிறவர்களை அனுப்ப வேண்டிய கட்டாயம். அவர்கள் டானியலை மேல் தளத்தில் படுக்க வைத்தனர். அம்புலன்ஸின் கீழ் தளத்தில் கரோல் மயங்கிக் கிடந்தாள். அருகே எட்டாத அளவில் மைக் கிடந்தான். புறப்பட்டது அம்புலன்ஸ்.

மைக் ஒருவனே நினைவுடன் இருந்தான். வலி பிராணனை வாங்கியது. தற்கொலை செய்து கொள்ளலாம் போல இருந்தது. மேல் பொக்கட்டைத் தடவினான். இரண்டு கத்திகள் இருந்தன.

"நைஸ் வெரி, நைஸ்."

முதலில் அருகே இருக்கும் கரோல். அடுத்து மேலே கிடக்கும் டானியல். மூன்றாவதாக தான். யாருமே வாழக் கூடாது. இனி தான் உலாவ முடியாது. எவரும் தன்னைக் குட்டும் நிலைமை வரக்கூடாது. தண்டனைகள் மரணத்தை மிஞ்சும் என்பது தெரியும்.

சாகும்போது வெற்றியுடன் தான் சாக வேண்டும். தோல்வி என்பது வரலாற்றிலே கிடையாது. சாவு எல்லோருக்கும் நிச்சயம். டானியலும் கரோலும் முடிந்து போனால் அவன் வாழ்விலேயே அகராதியிலேயே தோல்வி என்ற சொல் கிடையாது. எமிலி காரில் அம்புலன்ஸைத் தொடர முற்பட்ட வேளை பொலீஸ் வந்துவிட்டது. விவரம் சொன்னாள். தனது விருந்தினர்கள் யார் யார் என்று மட்டும் அவள் அவர்களை அடையாளம் காட்டவில்லை.

மைக் வந்ததை மட்டும் தெளிவாகச் சொன்னாள். பொலீஸாரின் முகத்தில் வெற்றிப் பூரிப்பு.

'மைக் நிச்சயமாக ஓடமாட்டானா?'

'நோ. நெவர். அவன் கால்கள் இனி வாழவே உதவாது என்றாள் எமிலி.'

'அப்படியா? துணிவுடன் நெஞ்சை நிமிர்த்தினார் ஒரு பொலீஸ் அதிகாரி.'

'வீரம்தான்' என்றாள், எமிலி நக்கலாக.'

'என்றாலும் அவன் ஆபத்தானவன். மயங்கவே இல்லை. அம்புலன்ஸிலும் ஏதும் நடக்கலாம். தொடருவோம்' என்றாள் எமிலி.

அவள் நினைத்தது வீண்போகவில்லை.

மைக் எறிந்த முதல் கத்தி அம்புலன்ஸின் கூரையில் பட்டுத் தெறித்து டானியலின் நெஞ்சில் ஆழத் தைத்தது. சத்தம் கேட்டுத் திரும்பினான் சாரதி. மைக்கின் கையில் கத்தி. அவன் கண்கள் குரூரமாகக் கரோலைப் பார்த்தன. வாய் கரோல், கரோல் என முணு முணுத்தது.

மைக்கின் முகத்தில் வேதனையும் தொனித்தது. வன்மமும் வெடித்தது. அம்புலன்ஸ் நின்றதும் அற்றெண்டன்ற் பின்னே வந்தான்.

அதற்கிடையில் கரோலின் கழுத்தில் கத்தியை வைத்து அழுத்தத் தொடங்கினான் மைக். கத்தி அவள் கழுத்தில் இறங்கத் தொடங்கவும் மைக்கின் கை தளரத் தொடங்கியது. நினைவுகள் மங்கத் தொடங்கின. என்றாலும் அழுத்திக் கொள்ள முயன்றான். மயக்கம் முந்திக் கொண்டது.

கழுத்தில் கத்தி படவும் கரோல் ஏதோ உணர்ந்தாள். மெல்ல விழிகள் திறந்தன. வேதனை தென்பட்டது. கை கால்களை அசைக்க இயலவில்லை. நடந்தது எதுவும் ஞாபகத்தில் வரவில்லை. முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். இயலவில்லை. விழிகள் திரும்பின. அருகே சுழலும் தட்டு ஒன்றில் பல முகங்கள் தெரிந்தன. அத்தனையும் மைக்கின் குரூரப் பார்வைகள். மைக், மைக். பற்களை நறுவ முயன்றாள். இயலவில்லை.

சுழலும் முகங்களை நிறுத்தி ஒருமுகப்படுத்தி மைக் இருக்கும் சரியான இடத்தை ஊகிக்க முயன்றாள். இயலவில்லை.இருவருக்கும் இடையில் அற்றெண்டன்ற் புகுந்து கொண்டான். கத்தி அவன் கைக்கு மாற முன் மைக் மயங்கிப் போனான்.

பிரபல மருத்துவமனை அது. தியேட்டரில் மிகவும் சுறுசுறுப்புக் காணப்பட்டது. பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டது. மைக்கின் இரு கால்களும் அகற்றப்பட்டன. கரோல் சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து தேறி இருந்தாள். டானியலின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது.

விடிந்ததும் பத்திரிகைகள் செய்திகளை அள்ளி வீசி இருந்தன. எமிலியின் பேட்டி வெளியாகி இருந்தது. சட்டத்தரணிகள் ஆலோசனை கூற அவள் பேட்டி கொடுத்து இருந்தாள். அவள் கூறிய விடயங்கள் அமெரிக்காவை மட்டுமல்ல, முழு உலகையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

காரணம் கடல் கடந்தும் பல கொலைகளைச் செய்தவர்கள் சுழியன்ஸ். மைக்கைப் பார்க்கக் கூட்டம் முண்டியடித்தது. கரோலைக் காணவும் கரை காணாக் கூட்டம். எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகையாளர்கள் படங்களைப் பிடித்துத் தள்ளினர். கால்கள் இல்லாத மைக்கின் படங்கள் பல கோணங்களிலும் அன்றைய மாலைப் பத்திரிகைகளில் இருந்தன.

கரோலின் படங்களும் கூடவே வெளியாகி இருந்தன. எங்கும் பரபரப்புக் காணப்பட்டது. பூரண சுகம் பெற்றதும் மைக் சக்கர நாற்காலியில் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டான். தனது சகல திருவிளையாடல்களையும் ஒப்புக் கொண்டான். இறுதியில் தான் தோற்றதையும் ஒப்புக்கொண்டான்.


சாகும்வரை சிறையில் வைத்தாலும், மீண்டும் மீண்டும் தூக்கிலிட்டாலும் அவனுக்குத் தண்டனைகள் போதாது எனப் பத்திரிகைகள் விமர்சித்திருந்தன. கரோல் விரைவாகத் தேறி வந்தாள். எந்த அசாதாரண தன்மையையும் அவளிடம் உறுதிப்படுத்த இயலவில்லை. சொத்துக்களைப் பொறுப்பெடுத்துக் கொண்டாள்.

அணு அணுவாய்க் கொல்லும் வரை மைக் அவள் கையில் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவளிடம் இருந்தது. டானியலின் நிலைமை நீண்டகாலம் மோசமாக இருந்தது. மீண்டும் மீண்டும் நெஞ்சிலே தாக்கம் ஏற்பட்டிருந்தது.

காயங்கள் இலகுவில் தேற டானியலை அனுமதிக்கவில்லை. அவன் தேறிவரும்வரை கரோல் காத்திருப்பாள். மீண்டும் அவனோடு பண்ணைக்குத் திரும்பி விட்டால் அமைதியாக வாழலாம் என்பது அவளின் ஆசை.

**(முற்றும்..)**

# கொடியேற்றத்தில் வேட்டைத் திருவிழா



சந்திரசேகர ஆசாத்

**இப்படியான சின்ன விடயங்கள் தொடர்ந்தும் இடம்பெறும். இது தொடர்பாக யாரும் குரல் கொடுத்தாலோ அல்லது எங்காவது முறைப்பாடு செய்தாலோ அது தேச விரோதக் குற்றம்.**

யாழ்ப்பாணத்தில் கோவில் வருடாந்த உற்சவங்கள் பிரபலமானவை. ஒரு புறம் பத்தர்களின் விரத அனுஷ்டானங்கள், அங்கப் பிரதட்சணம், அடியழிப்பு, காவடி, கரகம் போன்ற வழிபாடுகள், மறுபுறம் கலை நிகழ்ச்சிகள், சிகரம், சப்பறம், வாணவேடிக்கை என அந்த வட்டாரமே கோவிலை மையமாக்கி செயற்பட ஆரம்பித்து விடும்.

திருவிழாக்களும் கொடியேற்றங்களும் ஆரம்பமாகி கோலாகலங்கள் அதிகரிக்கத் தொடங்கி, சயனச்சாத்துப்படி, வேட்டைத்திருவிழா, தேர் ஏற்றம் என நீண்டு பூங்காவனத்துடன் நிறைவு பெறும். இப்போது யாழ்ப்பாணத்தில் தேர்தல் திருவிழா தொடங்கி விட்டது. கோவில் திருவிழாக்களுக்கென சில பிரந்தியேகமான புனித தனித்துவங்கள் இருப்பது போலவே, தேர்தல் திருவிழாக்களுக்கும் சில அசிங்கமான தனித்துவங்கள் உண்டு. அதாவது அடிதடி, கோஷ்டிச் சண்டை, மேடைகளில் வசைபாடுதல், சில சமயங்களில் கொலைகள், கொலை மிரட்டல்கள், ஆட்கடத்தல்கள், சாராய பணவிநியோகம், கள்ளவோட்டு எனப் பற்பல ஜனநாயக விரோத காரியங்களைப் பல்வேறு தரப்பினரும் போட்டி போட்டுக்கொண்டு நடத்துவர்.

தேர்தல்கள் தொடர்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பக் கலந்துரையாடல் அளவெட்டியில் இடம்பெற்ற போது தான், இந்தத் திருவிழா முறை மீறல் இடம்பெற்றது.

கொடியேற்றம் நடத்த வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீது இராணுவச் சீருடை அணிந்தவர்கள் வேட்டைத் திருவிழா நடத்தியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் ஒரு இராணுவ மேஜர் கதைத்துக்கொண்டிருந்தபோது கொட்டன்கள், துப்பாக்கிகளுடன் வந்த இராணுவச் சீருடை தரித்தவர்கள் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன் ஆகியோர் மீது தாக்குதல் நடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி அவர்களின் பாதுகாவலர்களால் தடுக்கப்பட்டது.

இதில் பெரிதாக ஆச்சரியப்பட எதுவுமேயில்லை. இது ஆட்சியாளர்களாலும் அவர்களின் அடிவருடி அரசியல் குழுக்களாலும் மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் ஒரு பகுதி தான்.

## வன்முறை வழிமுறை ஆரம்பமா?

இப்படியான வன்முறைகள் மூலம் மக்களை அச்சுறுத்தி வாக்களிப்பதைத் தடுத்து தாங்கள் தேர்தலில் முறையற்ற விதத்தில் வாக்குகளைப் பாவித்து வெற்றி பெற எடுக்கும் ஒரு கீழ்த்தரமான வழிமுறை வழக்கமான ஒன்று தான். கடந்த பொதுத்தேர்தலில் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பல பிரதேசங்களுக்குப் பரப்புரைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. தேர்தல் பணிகளில் ஈடுபட்ட பல ஆதரவாளர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதேவேளையில் வடபகுதிக் கட்டளைத்தளபதி இதில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எதிர்காலத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

இப்படியான வாக்குறுதிகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்குமளவுக்கு கடந்த கால அனுபவங்கள் இல்லை. சாவகச்சேரி மாணவன் படுகொலை, அளவெட்டி ஆலயப் பூசகர் படுகொலை என்பன தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டும் இன்று வரை உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் அடுத்தடுத்து நடந்த படுகொலைகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

புத்தளம் - அனுராதபுரம் வீதியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி, நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் என்பன தொடர்பாக இதுவரை எவருமே கைது செய்யப்படவில்லை.

இப்படியாக தமிழ் மக்களின் கடந்த கால அனுபவங்கள் நியாயமான நடவடிக்கைகள் தொடர்பாக நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ள அதே வேளையில், பாதுகாப்புச் செயலர் கோந்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் மிக முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாயுள்ளன.

## எல்லாமே சின்ன விடயங்கள் தான்

கொழும்பு நுகேகொடையில் படையினரைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ்ப்பாணத்தில் நடந்த சிறு சம்பவமொன்று பொலிசாருக்கு அறிவிக்கப்படாமல் அமெரிக்கத் தூதரகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், முதலில் அது பற்றி அங்கேயே விசாரிக்கப்பட்டதாகவும், அவ்வாறே கட்டுநாயக்கா துப்பாக்கிச்சூட்டு சம்பவமும் ஜேர்மன் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டதாகவும், கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அவரைப் பொறுத்த வரையில் அளவெட்டியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை ஒரு சிறிய விடயம். கட்டுநாயக்காவில் ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர்கள் மேல் வன்முறை பிரயோகித்து ஒருவர் கொல்லப்பட்டு 240 பேர் காயப்பட்ட விடயமும் ஒரு சிறிய விடயம் மட்டும் தான். அந்தச் சின்ன விடயங்களைப் பெரிதுபடுத்தி வெளிநாட்டுத் தூதரகங்களில் முறையிட்டு புனிதமான படை யினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்படுகிறது என்பது தான் அவரது குற்றச்சாட்டு.

இப்படி வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது தொடர்பான உண்மை பொய் ஒரு புறமிருக்க, ஒருவர் இந்த நாட்டில் தனக்கு நீதி கிடைக்காது என உணரும் பட்சத்தில் இன்னொரு சக்தியிடம் முறையிடுவதில் என்ன தவறு இருக்க முடியும்?

இதில் அவர் சொல்லாமல் சொல்லும் செய்தி ஒன்றுண்டு. அதாவது இப்படியான சின்ன விடயங்கள் தொடர்ந்தும் இடம்பெறும். இது தொடர்பாக யாரும் குரல் கொடுத்தாலோ அல்லது எங்காவது முறைப்பாடு செய்தாலோ அது தேச விரோதக் குற்றம்.

இப்போது சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கொலை, கொலை முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் கூட அந்நிய சக்திகளின் தூண்டுதல் என்ற வட்டத்துக்குள் தள்ளப்படும் நிலை ஏற்படுத்தப்படப் போகிறது என்பதற்கான ஒரு உதாரணமே கட்டுநாயக்கா தொடர்பான பாதுகாப்பு அமைச்சரின் அண்மைய கருத்து வெளிப்படுத்தலாகும்.

1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட தேசிய எழுச்சியின் பின்பு சிங்கள மக்களின் தேசப்பற்று, இனப்பற்று என்பன காத்திரமான வகையில் நிலைத்திருக்கின்றன என்பதை எவரும் மறுத்து விட முடியாது. எந்த ஒரு இனத்துக்கும் அது அவசியமானது. அவ்வகையில் தமிழ் மக்களுக்கும் தேசியம், இனம் தொடர்பான பற்று இருப்பதை எவரும் தவறு எனச் சொல்லிவிட முடியாது.


ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் தாம் மேற்கொள்ளும் இன அடக்குமுறை, தொழிலாளர் மீதான அடக்குமுறை, போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், சாதாரண மக்கள் மீது சுமத்தும் பொருளாதாரச் சுமைகள் என்பவற்றுக்கு எதிராகக் குரல்கள் எழும் போது அவற்றைத் தேச விரோத நடவடிக்கையாகக் காட்ட முனைகின்றனர். அதன் மூலம் சிங்கள மக்களின் தேசப்பற்று என்ற நிழலில் நின்று கொண்டு, சகல விதமான மனித குல விரோத நடவடிக்கைகளையும் அடக்குமுறைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளையில் பிரதமர் டி.எம் ஜெயரத்தினாவோ வறக்காப்பொலையில் தூங்கும் நிலையில் உள்ள ஒரு புத்தர் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட்டத்தில் அப்படியான தாக்குதல் எதுவுமே நடக்கவில்லை எனவும், இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயலும் சில சக்திகளின் பொய்ப்பிரச்சாரமே அது எனவும் கூறியிருக்கிறார். தூங்கும் புத்தருக்கு கேட்காது என்று நினைத்து இப்படி அப்பட்டமான ஒரு பொய்யை அவிழ்ந்து விட்டிருக்கிறார் போலிருக்கிறது.

வடபகுதிக் கட்டளைத் தளபதி, சம்பவம் நடந்ததை ஒப்புக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தனது மனவருத்தத்தைத் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலரோ, நடந்தது சிறிய விடயம் என்கிறார். பிரதமரோ, நடக்கவேயில்லை என்று கூறி விட்டார். ஒரே அரச தரப்பிலிருந்து மூன்று விதமான பதில்கள்.

நாளை அங்கு இராணுவத்தினர் பாதுகாப்புக்குச் சென்றதாகவும், கூட்டத்திலிருந்த சிலர் இராணுவத்தினரைத் தாக்கியதாகவும், படையினர் பாதுகாப்புக்காகத் திருப்பித் தாக்கியதாகவும் யாராவது ஒருவர் அறிக்கை விட்டால் கூட அதில் ஆச்சரியப்பட இடமில்லை.

எப்படியிருந்த போதிலும், தேர்தல் திருவிழாவின் கொடியேற்றமே வேட்டைத்திருவிழாவாக ஆக்கப்பட்டு விட்டது. இது தொடரும் என்பதையும் இதற்கு முகம் கொடுத்தே தமிழ் தேசியக்கூட்டமைப்பு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி வரும் என்பதையும் எதிர்பார்க்கலாம். ✸



# கிடைக்குமா கிண்ணம்?

டென்னிஸ் உலகில் தர வரிசையில் நீண்ட காலம் முதலிடத்தில் இருந்தவர் என்ற சாதனையைப் படைத்தவர் சுவிஸ்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர். குழந்தைத் தனமான முகத்துடன் களமிறங்கும் பெடரர், கையில் டென்னிஸ் 'ராக்கெட்டை' எடுத்து சுழற்றத் தொடங்கினால் புயலாக மாறி விடுவார். அதிகளவான போட்டிகளில் அடுத்தடுத்து பங்கேற்றமை, தொடர்ச்சியான காயங்களால் அவதிப்பட்டமை ரபேல் நடால், அன்ரி முர்ரே போன்ற திறமையான இளம் வீரர்களின் டென்னிஸ் உலகப் பிரவேசம் என்பவற்றால் பெடரரின் தொடர்ச்சியான வெற்றிப் பயணத்துக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. கூடவே தன்னுடைய முதலிடத்தையும் அடிக்கடி பறிகொடுக்க வேண்டிய நிலையும் இவருக்கு எழுந்தது. முக்கியமான போட்டிகளில் பெடரர் அதிர்ச்சித் தோல்விகளைத் தழுவியதால் முதலிடத்திலிருந்து கீழிறங்கி இப்போது மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டார்.

இந்நிலையில் ஏழாவது முறையாக கிண்ணத்தை வென்று சாதனை படைக்கும் கனவோடு விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறார் பெடரர். ஆறு முறை விம்பிள்டன் கிண்ணத்தை வென்ற பெடரர் சென்ற ஆண்டு கால் இறுதியோடு வெளியேறியிருந்தார். அந்த தோல்விக்குப் பழி வாங்கி இம்முறை கிண்ணத்தை வென்று அதிக தடவைகள் விம்பிள்டன் கிண்ணத்தை வென்ற வீரர் என்ற சாதனையைப் படைப்பதே தன்னுடைய இலட்சியம் என்று பெடரர் கூறியுள் ளார். சொன்னதைப்போல முதல் சுற்றுப்போட்டியில் அபாரமாக விளையாடி தான் இன்னும் புயல் தான் என்பதை நிரூபித்திருக்கிறார். பெடரருக்கு விம்பிள்டன் கிடைக்குமா என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வரும்.


# கனவுக்குத் தடை போட்ட காயம்

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கோல்ப் ஓப்பின் சம்பியன் ஷிப் போட்டிகளில் பிரபல கோல்ப் வீரர் ரைகர் வூட்ஸ் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கோல்ப் போட்டிகளில் வெல்ல முடியாத வீரராக வலம் வந்தவர் வூட்ஸ். எனினும் கடந்த சில வருடங்களாக முக்கியமான போட்டிகளில் வூட்ஸ் சாதிக்கத் தவறினார். தொடர்ச்சியான தோல்விகளால் துவண்டு போனார். எனினும் தன்னுடைய முதலிடத்தை அவர் இழக்கவில்லை. தன்னுடைய தோல்விகள் குறித்து சுய பரிசோதனை செய்த வூட்ஸ் "என்னிடமுள்ள அளவுக்கு மீறிய பாலியல் தொடர்புகளே இந்த தோல்விகளுக்கு காரணம்" என வெளிப் படையாக அறிவித்தார். இந்த அறிவிப்பால் இவரது மனைவி முதலில் அரண்டு போனாலும் பின்னர் வூட்ஸோடு சமாதானமானார். சில காலம் கோல்ப் உலகிலிருந்து ஒதுங்கிய வூட்ஸ் தன்னுடைய பாலியல் எண்ணங்களைக் கட்டுப்படுத்த சிகிச்சையையும் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் போட்டிகளில் மீண்டும் பங்கேற்கத் தொடங்கினார். 35 வயதுடைய வூட்ஸ் இம் முறை ஓப்பின் சம்பியன் ஷிப் கிண்ணத்தை வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது இடது காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் இப் போட்டிகளில் அவர் கலந்து கொள்வது சந்தேகத்திற்கிடமான தாக மாறியுள்ளது.



# பதவி போனது



உலகக் கால்பந்தாட்ட சங்கத்தின் துணைத்தலைவர் ஜாக் வார்னர். இவர் சங்கத்தின் நடைமுறை விதிகளை மீறி விட்டார் என்று குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் பெரும் நெருக்கடிக்கு ஜாக் வார்னரும், உதைபந்தாட்ட சங்கமும் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. இந்த சிக்கலிலிருந்து இப்போது உதைபந்தாட்டச் சங்கத்தைக் காப்பாற்றியிருக்கிறார் வார்னர். இதற்கு அவர் கொடுத்த விலை தன்னுடைய துணைத்தலைவர் பதவி. அடுத்த தலைவர் என்ற நிலையிலிருந்த இவர் தன்னுடைய பதவியை ராஜினமாச் செய்து விட்டார். இதன் மூலம் சர்வதேச கால்பந்தாட்டச் சங்க நிர்வாகக் கூட்டத்தில் வார்னர் மீது கொண்டு வரப்படவிருந்த குற்றச்சாட்டுப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சுடர் ஒளி வாசகர்களுக்கு...

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்பும் வாசகர்கள் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**சுடர் ஒளி வாரமலர்**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

## மாணவப் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?

நீங்கள் துடிதுடிப்புள்ள சமூக நோக்குக் கொண்டவரா?

நீங்களும் சுடர் ஒளியின் மாணவப் பத்திரிகையாளர் குழுவில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பிரதேச பிரச்சினைகள் தொடர்பாக 200 சொற்களுக்கு உட்பட்ட ஆக்கம் ஒன்றை எழுதி உங்கள் சுயவிபரங்களுடன் தொலை பேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவை யுங்கள். வயதெல்லை 16 தொடக் கம் 26 வரை. அனுப்பும் கடித உறையில் இடது பக்க மூலை யில் சுடர் ஒளி மாணவப் பத்திரிகையாளர் எனத் தலைப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும். (கிழக்கு மாகாண விண்ணப்பதாரி களுக்கு முன்னுரிமை உண்டு).

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# புதிய தலைவர்




நியூசிலாந்துக் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமும் அதிரடி ஆட்டக்காரருமான ரோஸ் ரெய்லர் அந்த அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். உலகக் கிண்ணப் போட்டிகளில் நியூசிலாந்து அணி கிண்ணம் வெல்லத் தவறியதை அடுத்து அந்த அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து டானியல் வெற்றோரி விலகியிருந்தார். அவருக்குப் பின்னர் அடுத்த தலைவராக அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான பிரண்டன் மக்கலம் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்த இடத்திற்கு ரோஸ் ரெய்லர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். இக்கட்டான நிலையில் களம் புகுந்து அணியைக் காப்பாற்றுவதோடு எதிரணியினரின் பந்துகளை எல்லைக்கோட்டுக்கு வெளியே அனுப்புவதில் ரெய்லர் கில்லாடி. உலகக் கிண்ணப்போட்டியின்போது பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி ஐந்து ஓவர்களில் 100 ஓட்டங்களுக்கு மேல் குவித்தமை ரெய்லரின் பேயாட்டத்திற்கு ஒரு சிறு உதாரணம். 27 வயதான ரெய்லர் 2006 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இது வரை 30 டெஸ்ட் போட்டிகள் , 107 ஒரு நாள் போட்டிகள், 37 ருவெண்ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ள ரெய்லர் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அரங்கேற்றம்



நாட்டிய கலா மந்திர் இயக்குனர் 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவிகளான திரு. திருமதி சண்முகநாதன் அவர்களின் புதல்வி ரதிக்ஷா மற்றும் திரு. திருமதி முத்து அவர்களின் புதல்வி திவ்யா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 02.07.2011 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மருதானை புதிய டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கிழக்கு மாகாண பல்கலைக்கழக வேந்தர் பேரா சிரியர். சி. மௌனகுரு கலந்துகொள்வார். மற்றும் கௌரவ அதிதிகளாக இராம நாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திரு மதி. கோதை நகுல ராஜா, மற்றும் விவே கானந்தா கல்லூரி அதிபர் ஐ. இராஜரட் ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.


ஹோட்டல் துறையில் பட்டப் படிப்பு

தொழில் மற்றும் துறைசார் நிபுனத்துவப் படிப்புக்கள். L-GAV நிறுவனம் கட்டணத்தை வழங்குவதால் உங்களுக்கு முற்றிலும் இலவசமான உயர்கல்வி.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

Hotel & Gastro *formation* | Eichistrasse 20 | 6353 Weggis
Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவிடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.


தொடர்புகளுக்கு மூர்த்தி மாஸ்ரர்,

**Tel. 0041 61 813 15 52**

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில் 10 மொழி அகராதி

für Handy



Sprache wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்



# STUDY IN LONDON

**BEDFORDSHIRE, WORCESTER, WALES**

**SPOT ASSESSMENT**

**Postgraduate / Undergraduate Courses**

MBA (No work experience required), Computer Networks, Computer Information Systems, Computer Science, Software Engineering, IT, Education Studies Top UP, TESOL, English Literature, Early Childhood Studies, Special Education Needs, Primary Studies with Qualified Teacher Status (QTS), Project Management, Business Studies, Accounting & Finance, Architecture, Law, Media, Art & Design, Fashion, Animation, Music, Social Sciences, Psychology, Biotechnology, Bio Medical Sciences, Pharmacology, Nursing Studies Top Up, Civil Engineering, Quantity Surveying, Construction, Electrical & Electronic, Mechanical Engineering, Mechatronics, Hospitality, Tourism, Sports Science, and .....Many More

**Foundation Degree, in Engineering, Computing, Law, Art, Design & Media**

PhD Students: Application Approval Time, Approx. 4 Weeks

Direct Entry to MSc Accounting & Finance/Financial Management for ACCA & CIMA Students (Fast Track Available)

**IELTS Waived off** Conditions apply

University of East London – www.uel.ac.uk
University of Bedfordshire – www.beds.ac.uk
University of West London – www.uwl.ac.uk
University of Worcester – www.worc.ac.uk
University of Wales, Newport – www.newport.ac.uk

**Sept. / Oct. 2011 & Feb. 2012 Intake**

**LOHOS TOPS 400 STUDENTS**

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities*

- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognised qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students having good O/L's / other qualifications / related work Experience may be considered for entry
- Admissions available for Mature students

HELPLINE CALL LOHO 0777 917929

Meet Mr. LOHO LOHOS GROUP

**Please call Sri Lanka Representative's office for more details**

Lucky Plaza Building, 4 / 7, 4th Floor,
St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03. Tel : 2577768 / 0777 917929
E-mail : lohosgroup@sltnet.lk
www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel : 0773-498660

**FREE ADMISSIONS + FREE VISA GUIDANCE**



# Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில் தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள் மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch

# குதிரைப் பெண்கள்!



முறத்தால் புலியை விரட்டிய மறப் பெண்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதிலும் விலங்குகளை அடக்கும் பெண்கள் தமிழினத்தில் ஒரு படைப்பிரிவாகவே இயங்குவது வித்தியாசமான செய்திதான். இந்தியாவில், தமிழகத்தில் பொலிஸ் குதிரைப் படைப் பிரிவில் பெண்களுக்கென்றும் தனிப் பிரிவு உண்டு. நான்கு பெண்களை மாத்திரமே கொண்டுள்ள இந்த பிரிவு நாள் முழுதும் நகரங்களைச் சுற்றிவந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றது.

செல்வி, எழிலரசி, திலகவதி, தமிழ்ச்செல்வி ஆகிய நான்கு பெண்களும்தான் இந்தக் குதிரைப் படையில் ஆரோகணிக்கும் வீராங்கனைகள். புழுதியைக் கிளப்பியபடி இவர்கள் விரட்டிப் பிடித்த சமூக விரோதிகளின் எண்ணிக்கையை அளவிடமுடியாது. பெரிய வாகனங்கள் உட்புக முடியாத பாதைகளில் எல்லாம் குதிரைகளின் மீதேறிப் பாய்ந்து சந்தேக நபர்களை இந்தப் பெண் பொலிஸ்காரிகள் 'லபக்' கென்று கைது செய்திருக்கிறார்கள். ஏனைய வாகனங்கள் என்றால் அவை நூறு மீற்றருக்கு அப்பால் வரும்போதே அவற்றின் இரைச்சல் குற்றவாளிகளை உஷார் படுத்திவிடும். இதனால் பெரும்பாலான சமயங்களில் தேடப்படுபவர்கள் தப்பித்து விடுகிறார்கள். ஆனால் அந்த வித்தை எல்லாம் இந்தக் குதிரைப் பெண்களிடம் வாய்க்காது. சத்தமிடாமல் குற்றவாளிகளை இவர்களால் நெருங்க முடிவதால் இந்தக் குதிரைப் பெண்களைக் கண்டாலே தலை தெறிக்க ஓடுகிறார்கள் சமூகவிரோதிகள்.

## அலங்காரம்

சுவாமிப் படங்களுக்கு வைத்த சாமந்திப்பூ, சில வகை ரோஜாக்கள் போன்ற மலர்கள் சமயங்களில் அடுத்த நாளும் வாடாமல் பளிச்சென்றிருக்கும். குறிப்பாக, குளிர் காலங்களிலும் மழைக் காலங்களிலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றைத் தூக்கி எறிய மனம் வராது. அம் மலர்களை நீர் நிரம்பிய பித்தளைக் கிண்ணத்திலோ, மண் சட்டியிலோ வைத்து வாசலை அலங்கரிக்கலாம். கோயில்களில் பூஜை முடிந்ததும் கிடைக்கும் பூக்களையும் கூட இப்படி அலங்கரிக்கலாம்.

**- சரண்யா, கல்லியங்காடு.**



## கண்களுக்காக....



கண்களின் அழகிற்கு கீழ்க்கண்ட உணவுகள் முக்கியம். பால், பால் பொருட்கள், கீரை, முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப் பழங்கள் மற்றும் காய்கள். போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியதும் மிக முக்கியம். உடலுக்கு மட்டுமின்றி கண்களுக்கும் பயிற்சி அவசியம். ஏனெனில் கண் தசைகளோடு, மூளையுடன் தொடர்புடைய ஏராளமான நரம்புகள் இணைக்கப்பட்டுள்ளன. கண் களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் க்ளாக் வைஸ் மற்றும் ஆன் டிக்ளாக் வைஸ் டைரன்களில் மூன்று முறைகள் சுழற்ற வேண்டும்.

கிட்டத்தில் இருக்கும் பொருளைப் பார்த்துவிட்டு, உடனடியாக தொலைவில் உள்ள ஒரு பொருளையும் பார்க்க வேண்டும்.கட்டை விரலை நடுவில் வைத்துக்கொண்டு, அதை இடவலமாகவும், வல இடமாகவும் நகர்த்தி, தலையைத் திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பிப் பார்க்க வேண்டும்.தினசரி எட்டு மணி நேரத் தூக்கம் மிகவும் அவசியம்.

சிலருக்குக் கண்களுக்குக் கீழ், இரண்டு கன்னப் பகுதியிலும் கருமை படர்ந்து திட்டுத் திட்டாக இருக்கும். இது முக அழகைக் கெடுத்து விடும்.அந்தக் கருமையை விரட்டியடிக்க ஒரு டிப்ஸ்...

வேப்பங்கொழுந்து சிறிதளவு, ஆரஞ்சு தோல் விழுது, கஸ்தூரி மஞ்சள் சம அளவு எடுத்து கலந்து, எங்கெல்லாம் கருமை படர்ந்து உள்ளதோ அங்கெல்லாம் பூசி 5 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வர கருமை மறைந்துவிடும்.

கரு வளையம் போக: கண்களைச் சுற்றி பாதாம் ஆயில் தேய்த்தால் கரு வளையம் படிப்படியாக மறையும். வெதுவெதுப்பான நீரில் கால்களைப் பதினைந்து நிமிடம் வைக்கவும். இவ்வாறு செய்து வந்தால் பாதங்கள் பொலிவு பெறும்.

## உங்கள் துணையைக் கவர்ந்து கொள்ள...

உணவு வரை எதிலுமே சுவையும், அழகுணர்ச்சியும் வேண்டும் என்று நினைப்பது மனிதர்களின் இயல்பு. புதிதாகத் திருமணமான தம்பதியர்களுக்கு இந்த எதிர்பார்ப்புச் சற்று அதிகமாகவே இருக்கும்.

சமையலாகட்டும், வாழ்க்கையாகட்டும் எதிலுமே அழகுணர்ச்சியோடு கொஞ்சம் கற்பனை உணர்வும் கலந்திருந்தால் அதன் சுவையே அலாதி தான்.

என்ன செய்தால் பிடிக்கும் என்று குழம்பித் தவித்து தினசரி புதிது புதிதாக ஏதாவது முயற்சி செய்து கொண்டிருப்பவரா நீங்கள்? அப்படி என்றால் இது உங்களுக்கானது தான். உங்கள் வாழ்க்கைத் துணையைக் கவருவதற்காக கூறப்பட்டுள்ள சில வழிமுறைகளைப் பின்பற்றிப் பாருங்கள்.

கற்பனையை வெளிப்படுத்துங்கள்: வழக்கமான முறையைப் பின்பற்றுவதை விட, புதிது புதிதாக சில விடயங்களை முயற்சி செய்யுங்கள். ஓவியம் வரையும் கலைஞனுக்குரிய கற்பனைத்திறனுடன் துணையை அணுகினால் உங்களுடைய துணையின் சந்தோஷத்திற்கு ஈடு இணையேது.

ஆச்சரியப்படுத்துங்கள்: பணிபுரியும் இடங்களில் புதிய புதிய சிந்தனைகளுக்குத்தான் வரவேற்பும் மதிப்பும் உண்டு. அது போல்தான் இல்லறத்திலும், சினிமா சீன்களை உள்ளே புகுத்த வேண்டாம். சின்ன சின்ன ஆச்சரியங்கள். எதிர்பாராத சந்தோஷங்களை ஏற்படுத்துங்கள். ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளும் இந்த சந்தோஷங்கள் தான் வாழ்க்கைப் பயணத்தின் கடைசிக் கட்டம் வரை தித்திப்பைத் தரும்.

சாதிக்க உற்சாகமளியுங்கள்: இன்றைய நவீன யுகத்தில் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் சாதித்து வருகின்றனர். சமையலறை மட்டுமே அவர்களின் உலகமல்ல என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். மனைவியின் திறமையை மதித்து அவர்களை ஊக்குவித்தால் அன்றைக்கே வாழ்க்கைத் துணைவருக்கு அடிமைச் சாசனம் எழுதித்தருவது நிச்சயம்.

ஆலோசனை கேளுங்கள்: புதிதாக ஒரு முடிவெடுக்கும் போது ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசனை செய்யுங்கள். அது பணத்தை பற்றியதாக இருக்கலாம். வேலை, தொழிலைப் பற்றியதாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் வாழ்க்கைத் துணையின் கருத்துக்கு மதிப்புக்கொடுங்கள்.

கட்டாயப்படுத்த வேண்டாம்: ஒவ்வொருவருக்கும் ஒரு இலக்கும், அதை அடைவதற்கான கனவும் உண்டு. யாருக்காகவும் இலக்குகளை விட்டுவிட வேண்டாம். கனவுகளைக் கலைக்க கட்டாயப்படுத்தக் கூடாது.

அழகில் கவனம் செலுத்துங்கள்: அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்குப் போகும் போது உங்கள் மனைவிக்கு இணையாக நீங்களும் உங்களை அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.



கெட்டிக்காரத்தனம் முக்கியம்: சமையலறை என்பது மனைவிக்கு மட்டுமே சொந்தமானது என்று நினைக்க வேண்டாம். நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரைத்தான் மனைவிக்கு அதிகம் பிடிக்கும்.

அக்கறை காட்டுங்கள்: வாழ்க்கையில் இருவருமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழப் பழக வேண்டும். துணையிடம் மட்டுமல்ல அவரின் குடும்பத்தினரிடமும் அக்கறை காட்டுங்கள்.


சில நேரங்களில் இது அவசியம். எல்லாவற்றிலும் புதுமையாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வப்போது சில வசனங்களைப் பேசுவதில் தவறில்லை.

உன்னைத் தவிர இந்த உலகத்தில் சிறந்தது எதுவுமே இல்லை என்பது போல பேசினால் வானத்தில் பறக்க ஆரம்பித்து விடுவார் உங்கள் மனைவி.

பகிர்ந்து கொள்ளுங்கள்: தனிமையான தருணங்களில் வழக்கமான விடயங்களை மட்டுமல்லாமல் பல விடயங்களைப் பற்றியும் பேசுங்கள்.

# கவிதைப்புனல்

## 'சீ'...தனம் !



சீதனம் என்ற
தீக்குச்சியால்
பற்றி எரிகிறது
பெற்ற கருவறைகள்

பேரம் பேசல்கள்
இலட்சத்தோடு தொடங்கிட
ஓலைக்குடிசைகள்
என்னத்தைத்தான்
பேசிடும்?


தங்க ஆபரணமும்
பணமும் தான்
இல்லற வாழ்வின்
இனிமைகளா?
இல்லையே

சீதனம் என்ற
சகதிக்குள்
அன்பும் பாசமும்
ஜீவகாருண்யமும்
புதைந்து போனதுவோ

காண்டேகரின்
'கிரவுஞ்சப் பறவைகள்'
பார்த்த சாரதியின்
'குறிஞ்சி மலர்கள்'
ரவிந்திரநாத் தாகூரின்
'கங்கை நதிக்கரையிலே'
காதல் கதைகள்
பெருந்தனத்தை
சொல்லவில்லையா?
'சீ' தனம் !

ஆ.முல்லைதிவ்யன்
பொலிகண்டி.

## அதிகார நாற்காலி



ஆண்டாண்டாய்
ஒலித்து ஓயும்
இசையில் தொடர்கிறது...

ஆணவக் கூட்டணிகளின்
அதிகாரத்தைப்
புதுப்பித்துக் கொள்ளும்
ஆசன விளையாட்டு

அடிக்கடி ஆடப்படுவதால்
ஆண்டியாகிப் போகிறது
ஆண்டுப் பொருளாதாரம்

அமர்ந்தவர் வெல்ல
தோற்றவர் கொல்ல
சமநிலை மாறிக்
கதிரைகள் சாய

குரங்கு பங்கிட்ட
அப்பமாகிறது
அதிகாரப் பரவலாக்கம்

நாற்காலிச் சண்டையில்
உருவாக்கப்பட்ட
வறுமையின் குரல் மட்டும்
தெருவெங்கும்
ஒலித்து ஓயும்
இசையில் தொடர்கிறது
இன்னுமொரு தேர்தல் !

மன்னார் அமுதன்

## எம்மை அனாதைகள் ஆக்கி



தினம் தினம்
அவள் வரவுக்காய்
காத்திருந்தோம்

அந்த நிலாவைக் கூட
வெறுத்து
இருள் மகளை
நட்பாக்கினோம்
அவள் வரவுக்காய்!

குருதி உறையும்
பனியிலும் கூட
பசித்திருந்தேன்
வழி மேல் விழி
வைத்து
அவள் வரவுக்காய்
ஆனால் ...?

வந்தாள் விடிவெள்ளி
அதிகாலை மட்டும்
ஆகாயத்தில் கண்சிமிட்டி
எம்மை எல்லாம்
அநாதைகள்
ஆக்கி !..

வன்னி மகன்.


## மெழுகுவர்த்தி



நான்
கருணை வேண்டி
தேவாலயத்தில்
ஏற்றி வைத்த
மெழுகுவர்த்தி
உருகுகின்றது என்
கவலைக்காக அல்ல
தனக்கு
ஒளி கொடுத்து விட்டு
அணைந்து போன
தீக்குச்சிக்காக !...

து.திலக்,
யாழ்ப்பாணம்.

## பெயர்களும் பட்டங்களும்



எம்.ஐ.எம்.அஷ்ரப்,
சாய்ந்தமருது 07

ஈன்றவர் இட்டு
ஆசைதீர அழைத்தது
சரி பிழை பார்த்து
பொருத்தம் கண்டது
உயர்வு வேண்டித்
துடித்து நிற்கையில்
உச்சரித்து உச்சரித்து
உச்சம் ஏறிட
ஒத்திகை பார்த்தது

கல்விக் கூடங்களில்
மிகைத்த எதிர்பார்ப்புக்களில்
பரீட்சைகள் என்றும்
பல்கலைக்கழகங்கள் என்றும்
பட்டங்கள் தந்திட
அமைப்புக்கள் அரவணைத்து
அள்ளி வழங்கி
அழகு பார்க்கையில்
பண்பட்டா மனிதம்
வழங்கிடும் பட்டங்கள்
தூக்கி விழுங்கி விடுகிறது
பெற்றோர் இட்டவற்றை

வரைந்த கோலத்திற்கு
வர்ணம் தேடிட
எங்கிருந்தோ வந்து
ஒட்டிக் கொண்ட
வசைப் பூச்சுக்களாய்
அப்பிக் கொள்கின்றது
தூரிகைகள் தீட்டிய
அழகிய போஸ்டரில்
சாணி அடித்தது போல்

கல்விச் சாலைகளெல்லாம்
எங்கே வழங்கியது
இந்தப் பட்டங்களை
ஊர் உறவு
குடும்பம் கோத்திரமெல்லாம்
அடையாளம் காட்டுகிறது
சக்தி பெற்ற ஆவணமாய்

சந்ததிக்கு உரித்தானதாய்
வந்து சேர்ந்தாலும்
சேர்ந்திட்டவர் வைத்திட்டாலும்
பட்டப் பெயர்களாய்
நிலைத்த அவை
தரித்து நிற்கின்றது
சுடலை வரைக்கும் !

## கோடீஸ்வரி

கூரையோ ஓட்டை
கரைந்த சிவர்
தகரத்தால் - ஓர் கதவு
தாழ்ப்பாளில்லை

படுக்கப்பாயில்லை
பாவிக்கப் பொருளில்லை
மாறி உடுக்க
மாற்றுடுப்பில்லை
ஆக்கிப் போட அரிசியுமில்லை
அடுப்பில் படுக்குது பூனை

வறுமையின் பிடியில்
வாடும் எனக்கு
பொருத்தமற்று இட்டனர் பெயர்
பெருமைக்குரிய என் பெற்றோர்
'கோடீஸ்வரி'யென்று !

- சாந்தா குகதாசன்.





# மிச்சம் பிடிக்க மாட்டேன்

கவர்ச்சி... என்ற ஐந்தெழுத்து வார்த்தையை வைத்துத்தான் இன்றைய பெரும்பாலான சினிமாக்கள் காலம் தள்ளிக் கொண்டிருக்கின்றன. அதனால்தானோ என்னவோ... புதிதாக நடிக்க வரும் நடிகைகள் எப்படிப்பட்ட கவர்ச்சிக்கும் நான் தயார். என்று கூறி அறிமுகமாகிறார்கள். இதுபற்றி ஹன்சிகாவிடம் கேட்டால். 'நான் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்று சொன்னதில்லை. கவர்ச்சி என்றால் ஓகே. கவர்ச்சி என்று வந்தப்பிறகு அதில் கஞ்சத்தனம் காட்டுற ஆள் நானில்லை' என்றார்.



# மீண்டும் பொக்சரானார்

'எம்.குமரன் சன் ஒப் மகாலெட்சுமி' படத்தில் பொக்சராக நடித்த ஜெயம் ரவி, மீண்டும் ஒரு படத்தில் பொக்சராக நடிக்கிறார். எங்கேயும் காதல் படத்தை தொடர்ந்து அமீரின் இயக்கத்தில் ஜெயம் ரவி நடித்து வரும் படம் ஆதிபகவன். இப்படம் கிட்டத்தட்ட முடியும் நிலையில் உள்ளது. இதனைத்தொடர்ந்து ஜனநாதன் உதவியாளர் கல்யாண் இயக்கும் ஒரு புதிய படத்தில் நடிக்க இருக்கிறுர். இந்தபடத்தில் ஜெயம் ரவிக்கு பொக்சர் ரோலாம். தமிழ் நாட்டு நடிகர்களுக்குதான் உடலை ஏற்றுவதும் இறக்குவதும் சாதாரண விசயமாச்சே.




# முதல் கோணல் !

அருண் விஜய், பிராச்சி தேசாய் நடிக்கும் படம் தடையறத் தாக்க. பிராச்சி தேசாய் தமிழில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள முதல் படம் இது. அருண் விஜய்யின் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டவர் பெரிய சம்பளமும் பேசி அட்வான்ஸையும் வாங்கி விட்டார். ஆனால் அவசர அலுவலாக சொந்த ஊர் திரும்பிய பிராச்சி மீண்டும் படத்தில் நடிக்க வர மறுத்து விட்டார். காரணத்தைத் தேடியபோது அருண் விஜய் பற்றிய உண்மை முகத்தை யாரோ பிராச்சிக்கு சொல்லிவிட்டார்கள். அதனால் பீதியடைந்தவர் படத்தை விட்டே ஓடி விட்டார்.

# அனுஷ்காவு
# திருமணம் ?

நடிகை அனுஷ்காத்.
தெலுங்கு நடிகர் நாகா
வின் மகனும் நடிகருமான
சைதன்யாவை விரை வ
திருமணம் செய்ய உள்ள
கக் கூறப்படுகிறது. இருவ
கும் குடும்ப உறுப்பினர்
முன்னிலையில் ரகசிய
தார்த்தம் நடந்துள்ளதாக
வட்டாரத்தில் பரபரப்பு
ளது. தமிழ், தெலுங்கு ப
முன்னணி கதாநா
அனுஷ்கா. காதல் வலை
துள்ளார் இது பற்றி அவர்
நாம் காதலிப்பது உண்
வெகு விரைவில் அதனை
போம் என்றார்.



# பழிவாங்கும் சிம்பு !

சிம்பு. ஜெய் இணைந்து நடித்து வரும் படம் வேட்டை மன்னன். இப்படத்தை இயக்குனர் நெல்சன் இயக்கி வருகிறார். இந்த படத்தில் ஒர் ஆயுத கும்பலின் தலைவனாக நடிக்கிறாராம் சிம்பு. அவருக்கு நண்பனாக நடிக்கிறார் ஜெய். நாயகியாக தீபிகா ஷேத் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கதைப்படி சிம்பு தன்னுடைய உயிர் நண்பனுக்காக பழிக்குப்பழி வாங்க களத்தில் இறங்குவார். இந்தப் பழிக்குப்பழி முயற்சி எப்படி பெரிய வில்லங்கமாக மாறுகிறது என்பதுதான் திரைக்கதை. அந்த நண்பன் கதாபாத்திரத்துக்கு இன்னொரு ஹீரோ அவசியம். அதனுல் தான் ஜெய்யை ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள்.



# புலம்பும் நிலா!!

எனக்கு ஆபாச மெயில் அனுப்பியவனைச் சும்மா விடக்கூடாது. கடுமையாக தண்டிக்க வேண்டும். சென்ற வருடமே எனக்கு இந்த நபர் தொடர்ந்து மெயில் அனுப்பி வந்தார். என் மேல் உள்ள தீவிர பற்றுக் காரண மாக இது போல் அனுப்புகிறார் என்று கருதி விட்டு விட்டேன். ஆனால் ஜனவரி மாதத்தில் இருந்து ஆபாச மெயில் அனுப்ப ஆரம்பித்தார். ஆபாசமோ எனக்குப் பிடிக்காது. சினிமாவில் கூட நான் ஆபாசமாக நடிக்க மாட்டேன். அப்படிப்பட்ட எனக்கு ஆபாசமாக மெயில் அனுப்புகிறார்கள். நான் எங்கே போகிறேன். போனில் யாரிடம் பேசுகிறேன் என்பதையெல்லாம் கண்டுபிடித்து மெயில் செய்கிறார். இதனால் வெளியே செல்ல முடியவில்லை. வீட்டில் முடங்கிக் கிடந்து அழுதேன்.



# காதலிக்க நேரமில்லை

முன்னர் பிருத்விராஜூடன் காதல் என்ற கிசுகிசுக்குள் சிக்கிய பிரியாமணி தன்னை யாரும் காதலிக்கவில்லையென்று மனம் நொந்து இருக்கின்றார். அது குறித்து அவர் அளித்த பேட்டியில் 'பிருத்விராஜ் திருமணத்துக்கு பிறகு அந்தக் கிசுகிசு ஓய்ந்தது. அதே வேகத்தில் தெலுங்கு ஹீரோ சுமந்துடன் காதல் என்று கிளப்பி விட்டார்கள். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். காதலும், கல்யாணமும் எனக்காகக் காத்திருக்கிறது. எனக்குகேற்ற காதலனை இன்னும் கண்டு பிடிக்கவில்லை. இதுவரைக்கும் என்னை யாரும் காதலிக்கவும் இல்லை அதற்கு நேரமும் இல்லை' எனத் தெரிவித்துள்ளார்.

னார்

மி' படத்
ம் ரவி,
க்சராக
படத்தை
ஜெயம்
பகவன்.
லையில்
டர்ந்து
யாண்
நடிக்க
ரவிக்கு
நாட்டு
றுவதும்
சே.



## ஆட்சி மாறியது விஜய்யினால் சீமான் !!

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிற்கு நடிகர் விஜய்தான் காரணம் என்று இயக்குனரும், நாம் தமிழர் 'கட்சியின் தலைவருமான சீமான் தெரிவித்துள்ளார். அண்மையில் நடந்த விழா ஒன்றில் விஜய லட்சுமி விவகாரத்தில் சிக்கியிருக்கும் டைரக்டர் சீமான் பேசுவதற்காக மைக்கை பிடித்ததும், விழாவுக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் சீரியஸாக கேட்க ஆரம்பித்னர். ஆனால் சீமானோ காமெடியாக பேசினார். தமிழ்நாட்டில் ஒரு புரட்சியை நடத்திவிட்டு சத்தம் போடாமல் அமர்ந்திருக்கிறுர் என் தம்பி விஜய். அவர் நடத்திய மௌவுனப் புரட்சி தான் இன்று ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படவே வழி வகுத்தது, என்றார்.

## விமர்சனம்




வழக்கமான வட சென்னை தாதா கதைதான். ஆனால் அதைச் சொல்லியிருக்கும் விதம், தமிழ் சினிமாவுக்கு புதுசு. தாதா சிங்கப்பெருமாளின் (ஜாக்கி ஷெராப்) தளபதி பசுபதி (சம்பத்). எதிர் அணி தாதா கஜேந்திரன் (ராம்போ ராஜ்குமார்). இவர்களின் ராஜ்யத்துக்குள் தானாக வந்து விழுகிறது பல கோடி மதிப்புள்ள போதை மருந்து பொட்டலம். தாதாக்கள் சாம்ராஜ்யத்தில் கோழிச் சண்டை நடத்தி காசு சம்பாதிக்க கிராமத்திலிருந்து வந்திருப்பவர்கள் காளையனும் (சோமசுந்தரம்) அவரது 12 வயது மகன் கொடுக்காபுலியும் (மாஸ்டர் வசந்த்). வந்த இடத்தில் இருப்பதை இழந்த இவர்கள், அடுத்து என்ன செய்வது என்று தவிக்கிறபோது அந்தப் போதைப் பொட்டலம் இவர்கள் கைக்கு வருகிறது. அதைக் கைப்பற்ற இரு கோஷ்டி தாதாக்கள், மற்றும் சம்பத் மூவரும் நடத்தும் போராட்டத்தில் நடக்கும் சதிகள், துரோகங்கள், திரைமறைவு வேலைகள்தான் திரைக்கதை.

வட சென்னை தாதாவாக ஜாக்கி ஷெராப் நடித்திருக்கிறார். அதட்டல், உருட்டல், மிரட்டல் எதுவுமின்றி எளிய வார்த்தைகளிலேயே காய் நகர்த்துவதும், கேரக்டருக்காக தன்னையே மாற்றிக் கொண்டு நிர்வாணமாக நடித்திருப்பது வரையிலான அவரது துணிச்சல் ஆச்சர்யப்பட வைக்கிறது. அவரது இளம் ஆசை நாயகியாக யாஸ்மின், நடிப்பில் ஜாக்கிக்கே சவால் விட்டிருக்கிறார். ரவி கிருஷ்ணாவைக் காதலித்து ஊரைவிட்டு ஓடத் திட்டமிடும்போது, நான் ஹிந்தி சினிமாவில் நடிக்கிறேன், நீ எனக்கு மானேஜரா இருந்து கொள் என்று ஐடியா கொடுப்பது, கிளைமாக்சில் தனது இன்னொரு முகம் காட்டுவது வரையிலான அவரது நடிப்பு பாராட்டதக்கது.

யுவனின் இசையில் மௌனம் அதிகம். அந்த மௌனமே காட்சியின் வக்கிரத்தை உணர்த்துவது அபாரம். ஒவ்வொரு காட்சியையும் நிஜக் கேரக்டர்களுக்கு தெரியாமல் அவர்களைப் படம்பிடித்தது மாதிரியான உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் பி.எஸ்.வினோத். நம் உள்ளூர் கதையை உலக தரத்தில் சொல்லி யிருக்கும் இயக்குனர், கொமர்சியல் படங்களில் போலீஸ் என்ற ஓர் இனம் இருப்பதை வசதியாக மறந்து விடுவதைப் போல இவர்களும் மறந்திருக்கிறார்கள்.



## ...வுக்கு ...ம் ?

...த். பிரபல
நாகார்ஜூனா
...மான நாக
...ரை வில்
உள்ளதா
இருவருக்
...னர் கள்
...கசிய நிச்சய
...தாக சினிமா
...ப்பு ஏற்பட்டுள்
...கு படவுலகின்
நாயகியான
...லையில் விழுந்
அவர் கூறும் போது
உண்மை தான்.
...தனை அறிவிப்



## வில்லங்கத்தில் கருணாஸ்

நடிகர் செந்தில் கதாநாயகனாக நடிக்க சில வருடங்களுக்கு முன் பூஜை போடப்பட்ட திரைப்படம் ஆதிவாசியும் அற்புதபேசியும். ஏதேதோ காரணங்களால் சில நாட்கள் படப்பிடிப்புடன் நின்றுபோன இப்படத்தின் கதையை இப்பொழுது கருணாஸிடம் சொல்லி இருக்கிறுர் இயக்குநர் மாலன். கதையைக் கேட்டவுடன் உடனடியாக ஹீரோவாக நடிக்கச் சம்மதித்துள்ளார். விஷயம் கேள்விப்பட்ட பி.பி.சி பிக்சர்ஸ் பாபு, என் கதைக்கு யாருடா உரிமை கொண்டாடுவது என...? மாலன் மீதும் கருணாஸ் மீதும் இயக்குநர் சங்கத்தில் புகார் கொடுக்கத் தயாராகி வருகிறாராம்!

## மலையாளத்திலும் கலக்கும் அமலா பால்!



மலையாளப் படமான நீலத்தாமரா படத்தின் மூலம் தனது சினிமாப் பயணத்தை தொடக்கிய அமலாபாலுக்கு, மலையாளத்தில் எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை. இதனால் மலையாளத்தை விட்டுத் தமிழுக்கு வந்தார். மைனா உள்ளிட்ட படங்களில் நடித்து புகழின் உச்சிக்கு சென்றதால் இப்போது கை நிறைய படங்கள். தமிழில் அமலா பாலுக்கு கிடைத்த வரவேற்பைப் பார்த்து பிரமித்து போன மலையாள திரையுலகம், மீண்டும் அவரை மலையாளப் படங்களில் நடிக்க வைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. ரஞ்சித் இயக்கத்தில் ப்ருத்விராஜ் நடிக்கும் படம் ஒன்றில் அமலா பால் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

# எதிர்பாராதது...!

சிறுகதை

**அரவிந்தன் சாப்பிட்டு முடித்து விட்டு எழும்பும்போது நேரம் சரியாக ஆறு நாற்பத்தைந்து.**

**சாப்பிட்டு முடித்து விட்டு தனது அறைக்குள் சென்று புத்தகமொன்றைப் படிக்க ஆரம்பித்தவனின் கவனம் புத்தகத்தில் செல்லவில்லை. மாறாக அவனுடைய மனம் அப்பா எட்டு மணிக்கு வந்து விடுவார் என்பதையே ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. எட்டு மணி வரைக்குமாவது நிம்மதியாய் இருக்கலாமென்றால் அவனு டைய மனம் அவனைச் சும்மாய் விடவில்லை.**

வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை அரவிந்தனுக்கு. 'இப்படி ஆகிவிட்டதே!' என்று அவன் மனம் பதைபதைத்தது.

அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை.

இனி என்ன செய்வது என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

பயமென்னும் பூதத்திடம் சிக்கிக்கொண்ட அவனுடைய மனம் அப்பூதத்தின் பிடியிலிருந்து விடுபட முயன்று தோற்றுக் கொண்டிருந்தது.

'அப்பா அப்பவே சொன்னார், இனிமேல் அங்கே எல்லாம் போகாதே என்று. இவன் தான் கேட்கவில்லை. அப்பாவின் பேச்சை மீறி வந்ததற்கு நல்ல தண்டனை கிடைத்துவிட்டது. இந்த விஷயம் மட்டும் அப்பாவுக்குத் தெரிந்தால், மேலே நினைக்கவும் அஞ்சியது அவன் மனம்.

அவனுடன் வந்திருந்த அவனுடைய நண்பர்கள் ஒவ்வொருவராக அங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

"டேய் அரவிந்தா! ஆனது ஆகிப்போச்சு, அதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் வீட்டிற்குப் போற வழியைப் பாருடா" என்று தனது நண்பனுக்கு அறிவுரை வழங்கி விட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டான் அரவிந்தனுடைய அருமை நண்பன் மகேஷ்.

என்ன செய்வதென்ற பயத்துடனேயே இரண்டு நிமிட நடையில் அருகிலிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தான் அரவிந்தன்.

நல்ல வேளை, நேரம் இப்போது தான் ஆறரை. அப்பா எப்படியும் வீட்டிற்கு வந்து சேர எட்டு மணியாகிவிடும் என்ற எண்ணம் தந்த தைரியத்தினால் வீட்டிற்குள் நுழைந்தவனை அம்மாவின் குரல் வரவேற்றது.

" வாடா! இப்பத்தான் வர்றியா? சரி சரி, போய் கை,கால் முகம் கழுவிட்டு சாப்பிட வா" என்றழைத்த தாயின் சொல்லுக்கு மறுப்பேதும் சொல்லாமல் கை கால் கழுவி விட்டுச் சாப்பிட அமர்ந்தவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் அவனுடைய தாய்.

வழமையாகச் சாப்பிட வா என்று அழைத்தாலே எனக்கு அது பிடிக்காது, இது பிடிக்காது என்றெல்லாம் பிடிவாதம் பிடிக்கும் அரவிந்தன் இன்றைக்குத் தான் கொடுத்த சாப்பாட்டை எந்த விதப் பேச்சுமின்றி அமைதியாகச் சாப்பிட்டான் என்றால் அவளுக்கு ஆச்சரியமாயிருக்காதா என்ன!

ஆனால் அரவிந்தனுடைய மனதிலிருந்த பயத்தை மட்டும் அவனுடைய தாய் அறிந்திருந்தால், இப்படி அவனுடைய அமைதியைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்க மாட்டாள்.

அரவிந்தன் சாப்பிட்டு முடித்து விட்டு எழும்பும்போது நேரம் சரியாக ஆறு நாற்பத்தைந்து.


சாப்பிட்டு முடித்து விட்டுத் தனது அறைக்குள் சென்று புத்தகமொன்றைப் படிக்க ஆரம்பித்தவனின் கவனம் புத்தகத்தில் செல்லவில்லை. மாறாக அவனுடைய மனம் 'அப்பா எட்டு மணிக்கு வந்து விடுவார்' என்பதையே ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. எட்டு மணி வரைக்குமாவது நிம்மதியாய் இருக்கலாமென்றால் அவனுடைய மனம் அவனைச் சும்மாய் விடவில்லை.

வலுக்கட்டாயமாகத் தன் மனதை இழுத்துப் பிடித்துப் புத்தகத்தில் கவனம் செலுத்தியவன் ஒரு வழியாக அந்தப் புத்தகத்தை வாசித்து முடித்து விட்டு தலை நிமிர்ந்தபோது நேரம் ஏழரையாகி விட்டது.

இவ்வளவு நேரமும் புத்தகத்தில் மூழ்கியிருந்த அரவிந்தனின் மனம் மறுபடியும் வேதாளமாக மாறி பயமென்னும் முருங்கை மரத்தின் மேல் ஏறிக்கொண்டது.

'அப்பா வரப்போகிறார். நடந்த விஷயத்தைக் கேட்கப்போகிறார். பிறகு..' அதற்கு மேல் சிந்தனை ஓடவில்லை அரவிந்தனுக்கு.

'அப்பா வருவதற்குள் படுத்துத்தூங்கி விடலாமா?' என்று ஒரு கணம் யோசித்தவன், உடனேயே அந்த எண்ணத்தைக் கைவிட்டான். 'நாளைக்கு எப்படியும் அவருக்குத் தெரிந்துவிடும். தான் சொல்லாவிட்டாலும் தன்னுடைய நண்பர்களின் மூலமாவது அப்பாவுக்குத் தெரிந்துவிடும். அப்படி நண்பர்களின் மூலமாகத் தெரிந்தால் அப்பாவின் கோபம் இன்னும் அதிகமாகலாம். அதற்குப் பதிலாக இன்



றைக்கு நானே சொல்லிவிட்டால் பிரச்சினை கொஞ்சமாவது குறையும் என்று நினைத்தான் அரவிந்தன்.

இப்பொழுது நேரம் ஏழு நாற்பத்தைந்து.

கடிகாரத்தின் 'டிக் டிக்' ஓசையோடு அரவிந்தனின் இதயத்தின் லப் டப் ஓசையும் சேர்த்துக் கேட்டது.

வழக்கமாக மெதுவாகவே ஓடுகின்ற நேரம் இன்றைக்குத் தனக்காக வேகமாக ஓடுகின்றதோ என்று நினைத்தான் அரவிந்தன்.

நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அரவிந்தனின் நெஞ்சமும் உச்சவேகத்தில் அடித்துக் கொண்டிருந்தது.

ஆயிற்று சரியாக 8.00 மணி கடிகாரம் எட்டுத் தடவை அடித்து ஓய்வதற்குள் அப்பாவின் பிரவேசம் நிகழ்ந்து விட்டது.

கைகால் முகம் கழுவி விட்டு உடைமாற்றிக் கொண்டு சாப்பிட்டு விட்டு முன்னறையிலிருந்த ஷோபா ஒன்றில் அப்பா அமர்ந்தவுடன், அரவிந்தனின் அம்மா அன்றைக்குத் தங்கள் வீட்டில் நடந்த எட்டாவது அதிசயத்தைப் பற்றி அப்பாவிடம் சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

"என்னங்க! இண்டைக்கு நம்ம அரவிந்தனோட நடவடிக்கையைப் பார்த்தா எனக்கு ஆச்சரியமாயிருக்குங்க"

"நீ ஆச்சரியப்படுகிற அளவுக்கு அவன் என்ன செய்திட்டான்"

" இல்லை வழக்கமாய் நான் சாப்பிடக் கூப்பிட்டால் எனக்கு அது வேண்டாம், இது வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறவன் இண் டைக்கு நான் என்ன சாப்பிடக் கொடுத்தேனோ அதைச் சாப்பிட்டு விட்டுத் தனது அறைக்குள் போய் அமைதியாய் இருந்திட்டான். அவன் இண்டைக்கு வெளியில போயிட்டு வந்ததிலிருந்து தான் அவன் இப்பிடி இருக்கிறான். அதற்கு ஏதாவது காரணமிருக்குமெண்டு நினைக்கிறன். கொஞ்சம் அவனைக் கூப்பிட்டு விசாரிச்சுப் பாருங்கோ" என்றாள் அரவிந்தனின் தாய்.

அரவிந்தனுக்குப் பகீரென்றது. அவன் அப்போதிலிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்த அப்பாவுடனான நேரடிச் சந்திப்பு இப்போது நிகழப் போகிறது.

"அரவிந்தா! இஞ்சை வா தம்பி" என்று அப்பாவே அழைத்த பிறகு மறுக்க முடி யாமல் அப்பாவின் முன் வந்து நின்றான் அரவிந்தன்.

"ஏனடா! என்ன ஆச்சுது உனக்கு? ஏன் முகமெல்லாம் ஒரு மாதிரியாயிருக்கு?" என்று கவலையுடன் விசாரித்தார் பெற்றவர்.

"அதுப்பா ... அது வந்துப்பா..." என்று மென்று விழுங்கினான் மகன்.

"தயங்காம, தைரியமாய் சொல்லடா..! என்ன விஷயம்?" ஊக்கப்படுத்தினார் தந்தை.

"இல்லைப்பா ! நேற்று நீங்க வாங்கிக் கொடுத்தீங்களே ஒரு கிரிக்கெட் மட் டையும் பந்தும் அது இண்டைக்கு விளையாடக் கொண்டு போன இடத்தில தொலைந்து போச்சுது" என்று இவ்வளவு நேரமாகத் தான் பயந்து கொண்டிருந்த விஷயத்தைச் சொன்னான் மகன்.

" இவ்வளவு தானா? இதுக்காகவா இவ்வளவு நேரமாய்ப் பயந்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டுச் சிரித்த தந்தை "அரவிந்தா! நீ இண்டைக்கு பக்கத்திலுள்ள மைதானத்திற்கு விளையாடப்போகும் போது நிச்சயமாய் நான் வாங்கித் தந்த புது 'பாட்' டையும் பந்தையும் கொண்டு போவாய் என்று தெரிந்திருந்தும் உன்னைக் கொண்டு போகக் கூடாது என்று சொன்னதற்கு காரணம், அப்பா சொன்னதையும் மீறிக் கொண்டு வந்து விட்டோமோ என்ற எண்ணத்தில் அதைப் பத்திரமாய் வைத்திருப்பாய் எண்ட எண்ணத்தில தான். விளையாட்டுப் பொருளொண்டு உடையிறதும் காணாமப் போகிறதும் சகஜம் தான். ஆனால் நீ கொஞ்சம் கவனத்தோடு இருந்திருந்தா இன்னும் பல நாட்களுக்கு அதை வைச்சிருந்திருக்கலாம்.

சின்ன வயதிலை பழகுகிற ஒரு பழக்கம் நீ வளர்ந்து பெரியவனா வளர்ந்த பிறகும் உதவும் என்பதை ஞாபகம் வச்சுக் கொள். போனதை நினைச்சுக் கவலைப்படாதை. நான் புதுசாய் வேறொன்று வாங்கித்தாறன். அதையாவது இனிமேல் கவனமா வைச்சிரு" என்று தந்தை கூறவும் தன் தந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டு அவர் கூறியபடியே இனிமேல் கவனமாய் இருக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான், அந்தப் பத்து வயது சிறுவன் அரவிந்தன். ★

■ ரீ.ஆர் சக்தி
கொழும்பு -04.



# அப்படியான கவர்ச்சி காட்ட ஆசைப்படுகிறேன்

சுசீந்திரன் பெரிய இயக்குநர். அவருடைய இயக்கத்தில் 'அழகர்சாமியின் குதிரை' படத்தில் நடித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. நான் பெங்களூரில் வளர்ந்தவள். அதனால் தமிழகத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று நடித்தபோது புது அனுபவம் கிடைத்தது. இந்தப் படத்தைப் பொறுத்த வரை யாருக்குமே அவ்வளவாக மேக் அப் இல்லை. இப்படி அழகான ஒரு கிராமத்துக் கதையில் நடித்தது மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது என்று கண்கள் படபடக்கப் பேசுகிறார். அழகர் சாமியின் குதிரை- அத்வைதா'.

**கே:-** ஒரு காட்சியில் பிரபாகரை சைக்கிளில் ஏற்றிச் செல்வீர்களே...! நிஜத்தில் அப்படிப்பட்ட அனுபவம் உண்டா?

**ப:-** சைக்கிள், டூ வீலர் எல்லாம் ஓடுவேன். நீங்க கேட்கின்ற மாதிரி ஓடிய அனுபவம் இல்லை. ஆனால் அந்தக் காட்சியில் நடிக்கும்போது மிகவும் கஷ்டப்பட்டேன். கிராமப்புறங்களில் பெண்கள், ஆண்கள் ஓடும் சைக்கிளைக் கூட ஓடுவார்கள். அதனால் அந்தக் காட்சிக்குப் பெரிய சைக்கிளைக் கொண்டு வந்து விட்டார்கள். இதில் ஒரு நகைச்சுவை என்னவென்றால், அந்த சைக்கிளில் ஏறி உட்காருவதற்கு எனக்கு உயரம் போதவில்லை. ஒரு வழியா ஸ்டூல் போட்டு ஏறி உட்கார்ந்தாலும் தரையில் கால் ஊன்றுவதற்கு எட்டவில்லை. அது மட்டுமல்லாமல் அந்த சைக்கிளின் இடையே கம்பி இருக்கும். நானோ பாவாடை, தாவணி போட்டிருந்தேன். இப்படியாக அந்தக் காட்சியில் நடித்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

**கே:-** தமிழ் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

**ப:-** நான் நடித்த முதல் தமிழ்ப்படம் 'சகாக்கள்'. ஆனால் 'அழகர்சாமியின் குதிரை ' தான் முதலில் வெளியானது. பெங்களூரில் இருக்கும் முரளி என்ற எனது நண்பர் மூலமாகத்தான் சினிமாவுக்குள் வந்தேன்.

**கே:-** 'சகாக்கள்' படம் குறித்து?

**ப:-** அழகர்சாமியின் குதிரை படத்தில் நான் நடித்த வேடத்திற்கு நேர் எதிரான வேடம் 'சகாக்கள்' படத்தில். ஆனால் இதில் ஒரு பொருத்தமான விடயம் என்ன வென்றால் இரண்டு படங்களிலும், என்னுடைய பெயர் தேவி. சகாக்கள் படத்தில் மிகவும் துணிச்சலான பெண்ணாக வருவேன். என்னை எதிர்க்கிறவர்களுடன் சண்டை எல்லாம் போடுவேன். இந்தப் படம் விரைவில் வெளியாகும். இதுவும் எனக்கு நல்ல பெயரைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை இருக்கு.

**கே:-** இரண்டு நாயகிகள் கதையில் நடித்தால் தொடர்ந்து அதுபோன்ற வேடங்கள்தானே அமையும்?

**ப:-**அழகர்சாமியின் குதிரை படத்தைப் பொறுத்தவரை நாயகன், நாயகி எல்லாமே அழகர்சாமியும், அந்தக் குதிரையும், இயக்குநரும்தான். அத்துடன் நாங்களும் அந்தக் கதைக்குத் தேவைப்பட்டோம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரை ஒரு படத்தில் இரண்டு, மூன்று ஹீரோயின்கள் இருந்தாலும் அவர்களுக்கு அமையும் பாத்திரம் என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்த வகையில் அழகர்சாமியின் குதிரை படத்தில் சரண்யா மோகன் நடித்திருந்தாலும் எங்கள் இரண்டு பேருக்கும் தனித்தனியான கதைதான்.

**கே:-**முதன் முதலில் கமராவைப் பார்த்து நடித்தபோது உங்கள் மன நிலை எப்படி இருந்தது?

**கே:-**மிகவும் பயமாகத்தான் இருந்தது. அப்போது எனக்கு சினிமாவைப் பற்றி எதுவுமே தெரியாது. மொழி தெரியாததால் யார் என்ன சொல்லுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று கூடத் தெரியாது. அதனால் மிகவும் பயம் இருந்தது. ஆனால் நான் நடித்த முதல் காட்சியில் எனக்கு வசனங்கள் கிடையாது. இருந்தாலும் கஷ்டப்பட்டு நன்றாக நடித்து இயக்குநரிடம் பாராட்டுப் பெற்றேன். நான் நடித்த காட்சிகளை திரையில் பார்த்தபோது, இது நான் தானா? என்று ஆச்சரியப்பட்டேன்.

**கே:-** அடுத்து நடிக்கும் படங்கள்?

**ப:-**தற்சமயம் தமிழில் வேறு எந்தப் படமும் ஒப்பந்தம் ஆகவில்லை. இந்த இரண்டு படங்களில் நடித்து முடித்ததும் எனக்கு பரீட்சை ஆரம்பித்து விட்டது. அதனால் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். அழகர்சாமியின் குதிரை வெளியான பிறகு யார் இந்தப் பெண்? என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இப்போது தமிழில் நிறையக் கதைகளைக் கேட்டு வருகிறேன். ஒரு கன்னடப் படத்திலும் நடித்து வருகிறேன்.

**கே:-** கவர்ச்சி வேடங்களில் நடிப்பீர்களா?


**ப:-** பாவாடை, தாவணியில், ஏன் புடவையில் கூட ஒரு பெண் கவர்ச்சியாகத் தெரிவார். அது டீசன்டான கவர்ச்சி. அதுபோன்று நடிக்க ஆசைப்படுகிறேன்.

**கே:-** உங்களைப் பற்றியும், உங்கள் குடும்பத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்?

**ப:-** எனது தாய்மொழி துளு. என் நிஜப் பெயர் கீர்த்தி ஷெட்டி. சினிமாவுக்காக அத்வைதா என்று மாற்றி வைத்திருக்கிறேன். எம்.ஏ., முடிச்சிருக்கிறேன். எனது சிறு வயதிலிருந்தே நாங்கள் பெங்களூரில்தான் வசித்து வருகிறோம். பதினாறு வருடங்களாக நடனம் கற்று வருகிறேன்.

# எப்படிப் பிறந்தாள் ஆயிஷா


தமிழ் சிறுவர் உளவியல் பற்றியும் அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் முறைகள் பற்றியும் தமிழில் முதல் பேசிய நாவல் ஆயிஷா. இதனைப் படைத்தவர் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த இரா.நடராஜன். இவர் அண்மையில் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் ஆயிஷா பற்றிப் பேசியிருக்கிறார். அதிலிருந்து சிறுதுளி.



## ஆயிஷா உருவான கதையைச் சொல்கிறீர்களா?


என்னிடம் பயின்ற முஸ்லிம் மாணவன் ஒருவன்தான் ஆயிஷாவுக்கான உந்துதலாக இருந்தான். மாணவனைக் கதையில் மாணவி என்று மட்டும் மாற்றிக்கொண்டேன். வகுப்பறை என்பது குழந்தைகளுக்கு ஒரு வெறுக்கத்தக்க இடமாக இருப்பதைப் பார்த்து இருக்கிறேன். ஒரு கடையில் ஒரு பொருள் வாங்கும் நுகர்வோருக்கு அந்தப் பொருளில் திருப்தி இல்லையென எனில் நீதி மன்றத்துக்குப் போகலாம். ஆனால், நம் சட்டமும் சமூகமும் கல்விபயிலும் மாணவர்களை நுகர்வோராகப் பார்ப்பது இல்லை. அவர்களுக்கு உகந்த கல்வி இல்லையெனில், அதனை ஆட்சேபிக்கும் உரிமைகூட அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. ஆசிரியர் நினைப்பதுபோல் எல்லாம் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இங்கே கேள்வி கேட்கக் கூடாது. குழந்தைகள் ஆசிரியர்களிடம் வாதாடக் கூடாது. இந்தக் கொடுமைகள் எல்லாம் நடந்துகொண்டு இருக்கும் இதே சமூகத்தில்தான் திண்டி வனம் அருகே ஒரு கல்லூரி மாணவன் பாம்புக்கடிக்கு மருந்து கண்டு பிடிக்கத் தன் உடலையே பரிசோதனைச் சாலையாக மாற்றிக் கொண்டு மரணத்தைத் தழுவினான். இதை வைத்து ஆயிஷாவை எழுதினேன். 1985 ஆம் ஆண்டே ஆயிஷா எழுதப்பட்டு விட்டது. என்றால் நம்புவீர்களா? அனுப்பிய இடங் களில் எல்லாம் கதை திரும்பி வந்தது.

ஆயிஷா சொல்லும் விஷயங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அப்போது நம் சமூகத்தில் இல்லை. குழந்தைகளுக்கு நம் கல்வி முறையில் அளிக்கப்படும் தண்டனைகளில் ஒரு தவறும் இல்லை என்றேதான் நினைத்திருந்தது சமூகம். 10 ஆண்டுகள் விடாமல் முயன்றேன். பின்னர், 1995 இல் கணையாழி குறு நாவல் போட்டியில் இரா.முருகன், சுஜாதா இருவரும் நடுவராக இருந்து ஆயிஷாவைத் தேர்ந்தெடுத்தார்கள்.




■இரா.நடராஜன்

"அந்த விஞ்ஞானிகளின் நெத்திகளிலெல்லாம் என்ன காயம்?"
வேறொண்டும் இல்லை. பறக்கும் தட்டைப் பார்க்க வேணும் எண்டு சொன்னாங்கள். அதுதான் என் வீட்டுக்குக் கூட்டிப் போனேன்.






"அம்மா.... பிச்சைக்காரன் வந்திருக்கிறான்!..."
"இன்னும் சமையல் முடியவில்லை நேரமாகும் எண்டு சொல்லி விட்டியா....?"
" ஓ சொல்லிப்போட்டன். ஆனா அதுதான் பிரச்சினையாப் போச்சு".
"ஏன், இப்ப என்ன அதுக்கு?"
"அதுவரைக்கும் அவன் ஹோல்ல இருந்து ரி.வி பார்க்கட்டுமா எண்டு கேக்கிறான்........"

# செதில் குழந்தை



மேற்குச் சீனாவில் உள்ள ஜின்ஹஉ நகரை சேர்ந்தவன் சாங்ஷெங். இவன் கடந்த வருடம் பிறந்தான். பிறக்கும்போது அவனது உடலில் முடி வளர்வதற்கான மயிர்க்கால்கள் எதுவும் இருக்கவில்லை. இதனால் உடலில் இருந்து வியர்வை வெளியேறா மல் மிகவும் அவதிப்பட்டு வந்தான். இந்த நிலையில் அவனது உடலில் மீன் போன்ற செதில்கள் வளரத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் அவனை வைத்தியர்களிடம் கொண்டு போய்க் காட்டினர். பரிசோதனை செய்த வைத்தியர்கள் மிகவும் குழப்பம் அடைந்தனர். அவனுக்கு ஏற்பட்டுள்ள நோயை அவர் களால் கண்டுபிடிக்க முடியவில்லை. "உடலில் இருந்து வெப்பத் தைக் குறைக்க அவன் மிகவும் சிரமப்பட வேண்டி இருக்கும். இதற்காக அவனை ஐஸ்கட்டிக்குள் வைக்க வேண்டிய நிலை ஏற் படும். இது ஒருவகை மரபுநோய்" என்றும் வைத்தியர்கள் தெரிவித் தனர். இவனை அனை வரும் மீன் சிறுவன் என்றே அழைக்கின்றனர்.

# பாம்புக் கோயில்





பாம்பு என்றால் படையும் நடுங்கும் எனச் சொல்வதுண்டு. ஆனால் பாம்புகளுக் குப் பல ஆலயங்கள் இருந்தாலும் உயிரு டன் பாம்புகளை வைத்து வழிபடும் ஆலயம் மலேசியா வில் உள்ளது. இந்த ஆலயத் தில் உள்ள பாம்புகள் அனைத்தும் மலேசியாவைச் சுற்றி யுள்ள காட்டுப் பகுதி யில் இருந்து பிடித்து வந்து வளர்க்கப்படு கின்றன. இந்தப் பாம்பு ஆலயம் மலேசியாவி லேயே மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்கின்றது.

# ஊசித்தலை மனிதன்

மெக்சிக்கோ நாட்டில் 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி பிறந்தவர் Schlitze Surtees என்பவர். இவர் உலகில் பிரசித்தி பெற்ற விசித்திர மனிதர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் பிறக்கும் போதே சிறிய மூளையுடன் பிறந்தமையே இதற்குக் காரணம். இவர் தோற்றத்தில் ஒரு ஆணாகவும் பெண்ணாகவும் காணப்பட்டார். மற்றும் இவர்




வாழ்ந்த காலத்தில் ஒரு திரைப்பட நடிகராகவும் திகழ்ந்தமை குறிப் பிடத்தக்கது. இவர் ஊசித்தலை மனிதன் என அழைக்கப்பட்டார். இவர் இறந்த பின்னர் இவருடைய முகச் சாயலை வைத்துப் பல கார்ட்டுன் திரைப்படங்களும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இவருடைய மூளை மூன்று வயதுடைய ஒரு குழந்தையின் மூளைக்கு சமமாகவே காணப்பட்டது. பல ரசிகர்களை கவர்ந்த இந்தச் சிறிய மூளை ஊசித்தலை மனிதன் 1971 ஆம் ஆண்டு உலக வாழ்வை நீத்தார்.



# தும்பிக்கையுள்ள பன்றி


ஒரு பன்றிக்குப் பிறந்த குட்டி யானை முகத்துடனும் தும்பிக்கையுடனும் பிறந்துள்ளது. இந்த அதிசயப் பன்றிக்குட்டி சீனாவில் பிறந்துள்ளது. இந்தப் பன்றிக்குட்டியைப் பார்க்க இப்போது மக்கள் படையெடுத்து வருகின்றனர். இதன் உடல்வாகு வழமையான பன்றிகள் போல்தான் உள்ளது. ஆனால் காதுகள் மிகவும் பெரிதாக உள்ளன. தும்பிக்கைதான் பெரிய அதிசயம். மொத்தத்தில் இந்தப் பன்றிக்குட்டி கிட்டத்தட்ட ஒரு யானைக் குட்டி போல் காட்சியளிக்கின்றது.

# 34 விரல்கள்



உத்தரப் பிரதேச மாநிலம் பெரைலியைச் சேர்ந்த மனோஜ் அம்ரிடா தம்பதிகளின் பதினைந்து மாத ஆண் குழந்தை அக்சித். இந்தக் குழந்தைக்கு பிறக்கும் போதே கைகளிலும் கால்களிலும் அதிக அளவில் விரல்கள் இருந்தன.

இரு கைகளிலும் தலா 7 விரல்களும் இரு கால்களிலும் தலா 10 விரல்களும் இருந்தன. மொத்தம் 34 விரல்களை அக்சித் பெற்றிருந்ததனால் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் அவனது பெயர் இடம்பெற்றது.ஐந்து விரல்கள் இருக்க வேண்டிய கைகளில் அளவுக்கதிகமான விரல்கள் இருந்ததனால் அவனால்எந்தப் பொருளையும் கெட்டியாகப் பற்றிக் கொள்ள முடியவில்லை.



# இளஞ்சுடர்

# மீண்டும் டிஸ்கவர்–125



இலங்கை இளைஞர்களின் கனவு வாகனம் பஜாஜ் டிஸ்கவர் 125 மோட்டார் சைக்கிள் தான். பல்ஸர், கரீஸ்மா என உருவத்திலும், விலையிலும் பிரமாண்டமானதாகப் பல மோட்டார் சைக்கிள்கள் இலங்கைச் சந்தையில் விற்பனையில் தூள் பறத்திக் கொண்டிருந்த சமயத்தில் அப்பாவியாய் வந்து சேர்ந்தது டிஸ்கவர் 125. குறைந்த விலை, நீடித்த உழைப்பு, குறைவான பெற்றோலில் கூடிய தூரம் பயணிக்கும் வாய்ப்பு என்னும் வசதிகள் டிஸ்கவரில் இருந்ததால் அதன் விற்பனை விகிதம் திடீரென அதிகரித்தது. ஏராளமான இளைஞர்கள் விலை கூடிய, பெரிய மோட்டார் சைக் கிள்களை வாங்குவதை விடவும் டிஸ்கவர் மீது தமது கண்களை திருப்பினர். இலங்கையில் தேரோடும் தெருவெங்கும் பட்டையைக் கிளப்பியது டிஸ்கவர் 125.எனினும் டிஸ்கவரின் வெற்றியால் மகிழ்ந்த பஜாஜ் நிர்வாகம் அதில் பல மாற்றங்களோடு டிஸ்கவர் 135, டிஸ்கவர் 150, டிஸ்கவர் 100 என பல புதிய வடிவங்களில் உற்பத்தி செய்தது. இதனால் டிஸ்கவர் 125 சந்தைகளில் இருந்து காணாமல் போனது. எனினும் டிஸ்கவர் 125க்கு உள்ள மதிப்பே தனிதான்.

இந்நிலையில் பஜாஜ் தொழிற்சாலையிலிருந்து மீண்டும் மீண்டு வந்திருக்கிறது டிஸ்கவர் 125.

எனினும் தோற்றத்தில் எந்த மாற்றமும் இல்லாததால், கவனத் தைத் தன் பக்கம் திருப்ப மறுக்கிறது டிஸ்கவர் 125. இஞ்ஜின்தான் இதன் பலம். நகருக்குள் சுற்றி வர சிறந்த அனுபவத்தைக் கொடுக் கிறது டிஸ்கவர். ஆனால், வேகமாகச் செல்லும்போது ஏற்படும் அதிர்வுகள், சிறப்பான ஓட்டுதல் இதன் தரத்தைக் குறைத்து விடுகின்றன. ஆனால், 100 சிசி, 150 டிஸ்கவருக்கு இடையில் இருக்கும் இடைவெளியைக் குறைக்க வந்திருக்கும் இந்த டிஸ் கவர் 125 சிசி பைக், நடுத்தரவர்க்க இளைஞர்களைக் கட்டாயம் திருப்திப்படுத்தும்!




# உலகின் மிகப்பெரிய குடும்பம்



இந்தியாவின் மீசோராம் மாநிலத்தின் மலைப்பாங்கான பக்ட்வாஸ் என்ற கிராமத்தில் உலகிலேயே மிகப் பெரிய குடும்பம் வாழ்வதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குடும்பத்தலைவரின் பெயர் சியானோசனா. இவரது 39 மனைவியர் 94 பிள்ளைகள் 33 பேரப்பிள்ளைகள் அத்துடன் 14 மருமக்கள்மார் என 180 பேரைக் கொண்ட இக்குடும்பம் குடும்பத் தலைவரான இவரையும் சேர்த்து 181 உறுப்பினர்களை உள்ளடக்கியது.

இவர்கள் அனைவரும் 100 அறைகளையுடைய நான்கு மாடி வீட்டிலேயே கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். மூத்த மனைவியான சதியாஞ்சி சலிப்படையச் செய்யும் வீட்டு வேலையான கழுவுதல், துப்பரவு செய்தல் மற்றும் உணவு தயாரித்தல் ஆகியவற்றைச் சகல குடும்ப உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்து நிர்வாகம் செய்து வருகின்றார்.

வயதில் இளையவரான மனைவி றிஸ்மினியின் வயது 35. பதினெட்டு வருடங்களுக்கு முன்பாக வீதியில் சென்ற அவரைப் பார்த்து அவர்மேல் விருப்பம் கொண்ட சனா கடிதம் மூலம் அவரது விருப்பத்தைக் கேட்டுச் சம்மதம் பெற்று அவரைத் திருமணம் புரிந்துள்ளார்.

சனாவின் மற்றொரு மனைவியான கந்தரந்தாஸ்கி தங்களது குடும்பம் பரஸ்பர, அன்பு மற்றும் மதிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றது எனக் கூறுகிறார்.


இக்குடும்பத்தின் ஒரு மாலை நேர உணவிற்காக 30 கோழிகள், 65 கிலோ உருளைக்கிழங்கு மற்றும் 105 கிலோ அரிசி என்பன தேவைப்படுகின்றன.

சனா இரட்டைக்கட்டில்களைக் கொண்ட தனது படுக்கை அறையிலேயே தூங்குகிறார். ஏனையோர் பொதுவான படுக்கையறைகளைப் பயன்படுத்துகிறார்கள். இவரது மனைவிமார் ஒரு சுழற்சி முறையிலேயே அவருடன் இரவைக் கழிக்கின்றனர்.

சனா மலைவாழ் இனத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர். தற்போது 4000 பேர்வரையில் இந்த இனத்தவர் வாழ்கின்றனர். புதிய மனைவிமார்களைத் தேடுவதை தான் இன்னும் நிறுத்திவிடவில்லையென்று பெருமையுடன் கூறும் சனா, எனது இனத்தவரைப் பல்கிப் பெருகச் செய்வதற்காக நான் புதிதாக திருமணம் செய்வதற்கு அமெரிக்காவுக்குச் செல்ல கூடத் தயங்க மாட்டேன் எனவும் கூறுகிறார்.

# பொருளாதாரத் தடையும் பூச்சாண்டிகளும்





■ ஆதங்கன்

இலங்கை மீது ஐ.நா கொளுத்திப்போட்டுள்ள புதிய வெடிகுண்டு 'பொருளாதாரத் தடை மிரட்டல்'. ஐ.நாவின் பேச்சைக்கேட்காமல் தான் தோன்றித்தனமாகத் தான் செய்வதையெல்லாம் நியாயப்படுத்துவதோடு, தனக்குச் சார்பாக சில நாடுகளை வளைத்துப்போட்டு வரும் இலங்கையின் செயற்பாடுகள் ஐ.நாவின் மூக்கை கோபத்தால் சிவக்க வைத்திருக்கின்றன.

இலங்கையில் இறுதிக்கட்ட போரின்போது நிகழ்ந்தவை என்ன? என்பது பற்றி நடுநிலையான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பதற்காக ஐ.நா செயலர் பான் கீ மூன் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். தருஸ்மன் என்பவரின் தலைமையிலான இக்குழு தன்னுடைய விசாரணைகளை முடித்து இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது. இறுதிப் போரின்போது விடுதலைப்புலிகளும் படையினரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் பொதுமக்கள் மீது போர்க்குற்றங்களைப் புரிந்திருக்கிறார்கள் என்பது தான் இந்த அறிக்கையின் சாராம்சம். இந்த அறிக்கை வெளிவந்தவுடன் எவருமே ஆச்சரியத்தால் தம் புருவங்களை உயர்த்தவில்லை. 'அட அவ்வளவு தானா?'என்பது போலவே பல உலக நாடுகளின் பிரதிபலிப்புக்கள் இருந்தன. ஏனெனில் கஷ்டப்பட்டு தருஸ்மன் குழு கண்டுபிடித்த இந்த உண்மை ஏற்கனவே எல் லோருக்குமே உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிந்த விடயம் தான்.

### இலங்கையின் கொதிப்பு

ஆனால் இலங்கை மட்டும் இல்லாததையும்பொல்லாததையும் தருஸ்மன் குழு சொல்லி யிருப்பதாக வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக்குதித்தது. புலம்பெயர் நாடுகளில் வாழும் புலி ஆதரவாளரின் பணத்திலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், இது இலங்கையின் கௌரவத்தை உலக அளவில் கீழ் இறக்குவதற்கான திட்டமிட்ட ஒரு முயற்சியே என்றும், இலங்கை தன்னுடைய கண்டனத்தைப் பலமான முறையில் பதிவு செய்தது. இதன் ஒரு வடிவமாக இம்முறை மே தினக் கொண்டாட்டங்களை ஐ.நாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிகழ்வாக மாற்றுவதற்கு அரசு முயன்ற போதும், அத்திட்டம் சில காரணிகளால் பிசுபிசுத்துப்போய்விட்டது. ஆனாலும் அரசு அடங்குவதாக இல்லை. தன் பக்கம் நியாயம் இருப்பதாக வக்காலத்து வாங்குவதற்கு உலகெங்கும் ஓடித் திரிந்தது. தன் பங்காளிகள் எல்லோரினதும் கால்களில் வீழ்ந்து தன்மீது ஐ.நா வீசியிருக்கும் புகார்களைப் பொய் என்று சொல்லுமாறு கெஞ்சிக் கேட்டிருந்தது. ஒரு சில நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் ஏராளமான நாடுகள் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டன. இந்த மௌனத்தின் அர்த்தம் சம்மதமல்ல. மாறாக இலங்கைக்கு ஆதரவாகத் தம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதற்காகவே இலங்கையின் பங்காளி நாடுகள் தங்களுடைய வாய்களுக்கு இறுக்கமான பூட்டுகளைப் போட்டுக் கொண்டன.

தருஸ்மன் அறிக்கையின் அமளி துமளிகள் அடங்குவதற்கு முன்பாகவே 'சனல் 4' தன்னுடைய அடுத்த அஸ்திரத்தை இலங்கையை நோக்கி எய்தது. ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரின்போது நிகழ்ந்தேறிய போர் குற்றங்களைத் தொகுத்து 'கொலைக்களம்' என்ற ஆவணப்படத்தை அந்தத் தொலைக்காட்சி திரையிட்டது. பார்த்தோரின் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கும் காட்சிகள். பல சம்பவங்களைக் கண்கொண்டு பார்க்க முடியாத அளவுக்கு அவை படுகோரமாக இருந்தன. ஏற்கனவே 'சனல் -4' வெளியிட்டிருந்த வீடியோ பதிவுகளை விட இந்த ஆவணப் படத்தில் மேலும் சில வீடியோ காட்சிகள் இணைக்கப்பட்டிருந்தன. இவற்றில் அனேகமானவை குறித்த குற்றங்களோடு தொடர்புபட்டிருந்த இராணுவத்தினரின் கையடக்கத்தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்டவை. போர்க்களத்தில் தாம் செய்த 'வீர தீரங்களை' தமது சகபாடிகளுக்கு காண்பிப்பதற்காக விளையாட்டாகப் படையினர் எடுத்த காட்சிகள் எப்படியோ கைமாறி, போகக்கூடாத இடத்திற்குப் போய் இப்போது அது அரசுக்கே வினையாகிவிட்டது.

### உலகம் ஏமாறவில்லை

என்ன தான் ஆதாரங்களை முன் வைத்தாலும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற முடிவிலேயே இலங்கை அரசு விடாப்பிடியாக நின்றது. சனல் -4 வெளியிட்ட எல்லாக் காட்சிகளும் 'கிராபிக்ஸ்' முறையில் வடிவமைக்கப்பட்டவை, எனவும் இலங்கையை ஒத்த புவியியல் பின்னணியைக்கொண்ட இந்தியாவின் கேரளா மாநிலத்தில் திட்டமிட்ட முறையில் பதிவாக்கப்பட்டவை எனவும், இலங்கை இராணுவத்தினர் கனவில் கூட பொதுமக்களுக்கு தீங்கிழைக்கவில்லையெனவும், அரசு பிரதிநிதிகள் உலகெங்கும் கூவிக்கூவிக் களைத்துப்போயினர். யாருமே இலங்கையின் மாய்மாலத்தைக் கண்டு ஏமாறுவதாக இல்லை.

தன்னுடைய வார்த்தைகளை உலகம் நம்பவில்லையென்று கண்டு கொண்ட இலங்கை அரசு என்ற வேலி தனக்குத் தெரிந்த ஓணான்களைச் சாட்சிக்கு அழைத்தது. ஆனால் இலங்கையின் பக்கம் என்றால் தமக்கும் அது எதிர்காலத்தில் பிரச்சினையாகி விடும் என்று நினைத்த அந்த ஓணான்கள் இலங்கையே எதிர்பாராத வகையில் கைவிட்டு விட்டன. தனக்கு நெருங்கிய எல்லா நாடுகளையும் பார்த்து ஜூலியஸ் சீசரைப்போல "புருட்டஸ் நீயுமா?" என்று கேட்காத குறையாக இலங்கை அழுது தீர்த்தது. இந்த கண்ணீர் காய்வதற்குள் ஐ.நா நிபுணர் குழு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டதைப் போன்று போர்க்குற்றங்களை விசாரிக்க ஒரு பொறிமுறையை உருவாக்க இலங்கை இணக்கம் தெரிவிக்காவிட்டால் அதனை வழிக்குக் கொண்டு வர சில இராஜதந்திர முன்நகர்வுகளை ஐ.நா மேற்கொள்ளப்போவதாக கதைகள் எழுந்தன. அதிலும் செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கைமீது பொருளாதார தடையை விதிக்க வேண்டும் என்ற பிரேரணையை அமெரிக்கா முன் வைக்கவுள்ளதாக வெளியான தகவல்கள் இலங்கை அரசின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

அமெரிக்காதான், ஐ.நாவின் சூத்திரதாரி. அதன் கைகளிலுள்ள கண்ணுக்குத் தெரியாத கயிறுகளின் அசைவுக்கேற்பவே ஐ.நா ஆடி வருகிறது. ஆப்கானிஸ்தான், ஈராக் என்பன போன்ற நாடுகளிலிருந்து அமெரிக்க எதிர்ப்பு அரசுகளை அழிப்பதற்கு ஐ.நாவும் அமெரிக்காவுக்கு துணையாக நின்றது. அமெரிக்கா சொல்கின்ற எல்லா விடயங்களையும் ஏன் எதற்கென்று ஆராய்ந்து கூடப் பார்க்காமல் அவற்றைச் சிரமேற்கொண்டு செய்து முடிக்கும் விசுவாசமான ஏவலாளியாக ஐ.நா இருந்தது. கிட்டத்தட்ட அமெரிக்கா தான் அலாவுதீன் என்றால், அவனது விளக்கிலிருந்து வெளிப்பட்டு வேலைகளைச் செய்து முடிக்கின்ற பூதமாக ஐ.நா இருந்தது. அதனாலேயே பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் தனக்குப் பிடிக்காத எல்லோரையும் அமெரிக்காவால் 'நீதியோடு' கொலை செய்ய முடிந்தது. இப்போது அதே அமெரிக்கா இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற முன்மொழிவைக் கொண்டு வரப்போவதாக வெளி வந்துள்ள தகவல்கள் இலங்கையைக் கலக்கம் அடையச்செய்துள்ளது. ஏனெனில் அமெரிக்காவின் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச ஐ.நா சபையில் ஆள் இல்லை.

### வெடிகுண்டா? வெறும் பூச்சாண்டியா?

ஆனாலும் ஐ.நா இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்போகிறது என்ற செய்தி உண்மையில் வெறும் பூச்சாண்டி தான் என்று சொல்வோரும் உண்டு. ஏனெனில் இவ்வாறு வெருட்டினால் மட்டுமே பழையபடி இலங்கையை தன் காலடியில் வீழ்த்த அமெரிக்காவால் முடியும். இல்லாவிட்டால் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளான ஈரான், சீனா போன்றவற்றின் ஆதரவை வைத்துக்கொண்டு இலங்கை பெரும் நடப்புக் காட்டும். அமெரிக்காவை ஐந்து சதத்திற்கும் இலங்கை மதிக்காத நிலை தோன்றிவிடும். ஆனால் தன் மீது பொருளாதாரத்தடையை அமெரிக்காகொண்டுவரப்போவதாகச்செய்திவெளிவந்த மறுகணமே வேறுவழியின்றி இலங்கை அமெரிக்காவிடம் சரணடைந்தாக வேண்டும். ஐ.நா பாதுகாப்புச் சபையில் வீற்றோ அதிகாரம் கொண்ட ரஷ்யாவும் சீனாவும் இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவ முடியாதெனச் சூசகமாகச் சொல்லி விட்டன. ஆகவே பரவலாக அடிபடும் பொருளாதாரத்தடை என்ற கதையை உண்மையாகவே அமெரிக்கா எழுத ஆரம்பித்தால் அதை நிறுத்தவே முடியாது. இலங்கையின் தலையெழுத்தும் தலை கீழாக மாறிவிடும்.

எப்படியேனும் வென்றுவிட வேண்டும் என்ற வெறியில் உலக நாடுகள் எல்லாவற்றிடமும் இலங்கை வகைதொகையின்றி கடன் வாங்கி விட்டிருந்தது. போர் முடிந்தபின்னர் அந்தக் கடன்கள் விஸ்வரூபமெடுத்து இலங்கையின் கழுத்தை நெரிக்கத்தொடங்கியுள்ளன. பெரும் பொருளாதாரப் பிரச்சினையால் தலை தூக்க முடியாத நிலையில் இலங்கை உள்ளது. பொருளாதாரப் பிரச்சினையின் தீவிரத்துக்கு கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம் பெற்ற தனியார் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் ஒரு சிறு உதாரணம்.

இத்தகைய பொருளாதாரப் பிரச்சினைகள் நிலவும் சூழலில் உண்மையாகவே ஐ.நா இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதிக்குமானால், அது நினைத்துப் பார்க்க முடியாத எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடும். சூடானைப்போலவோ, சோமாலியாவைப்போலவோ ஒரு நேர உணவுக்கே போராட வேண்டிய நிலை தோன்றிவிடலாம். எனவே வேறு வழியின்றி எப்படியாவது அமெரிக்காவின் கால்களின் இலங்கை விழவேண்டியிருக்கும். இதையே பொருளாதாரத்தடை விதிக்கப்படும் எனப் பூச்சாண்டி காட்டி அடைவதற்கு அமெரிக்காவும் ஆசைப்படுகின்றது.

பொருளாதாரத்தடை என்ற பூச்சாண்டி உண்மையில் வெடிகுண்டாக வெடிக்குமா? அல்லது வெறும் பந்தாக மாறுமா? என்பது இலங்கை அரசின் கைகளிலேயே உள்ளது. ★

# வதைத்தது போதும் வாழ விடுங்கள்


■நா.சிவராமா

விலங்குகளும் பறவைகளும் ஊர்வனவும் தம் சுற்றத்தாருடனும், தம் இனத்தவருடனும் காடுகளில் வெகுதூரங்கள் வரை மகிழ்ச்சியுடன் மேய்ந்தும், வேட்டையாடியும், அலைந்தும், பறந்தும், ஊர்ந்தும், திரிகின்றன. இவையாவும் தம் இனங்களுடன் கூடிக் குலாவி காடுகளில் தன்னிச்சையாயும், சுதந்திரமாகவும் திரிவதில் தான் எவ்வளவு இன்பம் காண்கின்றன. இவற்றை மனிதன் தனது சூழ்ச்சியினாலும், வல்லமையினாலும், பொறிவைத்தும், இவற்றின் பெற்றோரிடமிருந்தும், இவற்றின் இனத்திடமிருந்தும் பறித்தெடுக்கின்றான். பகுத்தறிவற்ற இவற்றைச் சிறை பிடித்து தனது விருப்பு வெறுப்பிற்கேற்ப இயக்குவதன் மூலம், இவை தம் சுதந்திரத்தினை இழந்து வாழ்நாள் முழுவதும் மிகச்சிறிய கூண்டுகளில் மானிடருக்குப் பயந்து பெரும் அவலங்களை அனுபவிக்கின்றன.

இயற்கைக்கு மாறாக, இவற்றைச் சுதந்திரமாக ஓடித் திரிய முடியாதவாறு மிகச்சிறிய கூண்டுகளில் அடைத்து வைத்து, கடுமையாகத் துன்புறுத்தி சாகஸ விளையாட் டுக்களைச் செய்விப்பதும், கோயில்களில் கூண்டுகளில் அடைத்து வைப்பதும், விக்கிரகங்களைச் சுமக்கச் செய்வதும், ஊர்வலத்தில் கூட்டிச் செல்வதும் சரியா? அதே போல் கிளிகளையும் குயில்களையும், மைனாக்களையும் கூண்டுக்ளில் சிறை வைத்துத் துன்புறுத்தி எங்கள் மொழியைப் பேச வைப்பது நீதியா? இதனால் இவ்வுயிர்கள் எவ்வளவு வேதனையையும் விரக்தியையும் அனுபவிக்கின்றன.




நாமெல்லோரும் சுதந்திரமாக வாழ்கிறோம். நினைத்த மாத்திரத்திலேயே நினைத்த இடங்களுக்கெல்லாம் சுதந்திரமாகச் செல்கிறோம். அத்துடன் எம்மை ஒத்த மனிதருடன் பழகுகிறோம், அளவளாவுகிறோம், உறவாடுகிறோம் உணர்ச்சிகளைப் பகிர்கின்றோம். எங்களையும் ஏனைய மனித ருடன் தொடர்பு கொள்ள முடியாமல் தனிமையாக நிரந்தரமாக அடைத்துக் காட்டு விலங்குகள் மத்தியில் வைத்திருந்தால், அல்லது அண்ட வெளியினில் பிற கோள்களில் வாழும் சக்திமிக்க சில உயிர்கள் எம்மைக் கடத்திச் சென்று தங்கள் மத்தியில் ஒரு காட்சிப் பொருளாகவோ, அல்லது மிகக் கடினமான சாகஸங்களைப் புரியவோ வைத்தால் எங்களுக்கு எப்படியிருக்கும்? சிந்தித்துப் பாருங்கள் எங்களால் இவற்றைத் தாங்க முடியாது, ஏற்கவும்மாட்டோம், விரைவில் எங்களுக்குச் சித்தப் பிரமை பிடித்து விடும்.



இங்கு எனக்கு ஒரு நினைவு வருகின்றது. நான் வன்னியில் ஒரு கிராமத்திலிருந்த ஓர் அன்பர் வீட்டிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 2002ம் ஆண்டில் சென்றிருந்தேன். அப்பொழுதெல்லாம் அங்கு போனால் ஒரு நாளில் திரும்ப இய லாது. ஆகவே அங்கு அவருடன் ஓரிரவு தங்க வேண்டியதாயிற்று. அவர் ஒரு கோயில் தர்மகர்த்தா. அவர் நான் அங்கு போவதற்கு முதல் நாள் யார் யாரிடமெல்லாமோ சொல்லி ஊர் முருகன் கோயிலுக்கென ஒரு மயில் குஞ்சைப் பிடித்துச் சிறைவைத்திருந்தார். நான் வீட்டினுள் சென்றதும் இதைக் கண்டேன். எனக்கோ முருகனின் பெயரில் உயிர்களை வதைப்பது சரியெனப்படவில்லை. நானோ விருந்தினர். நல்ல வரவேற்பும் விருந்துபசாரமும் நடக்கவே எனது வாயை மூடிக் கொண்டேன். குஞ்சும் அன்று முழுக்க ஒன்றும் குடியாது, சாப்பிடாது, கத்திக்கொண்டே இருந்தது. அடுத்த நாள் காலையில் நான் எழுந்து பார்த்த பொழுது அது இறந்து கிடந்தது. எனக்கோ அழுகையும் ஆத்திரமும். அச்சிறிய பிராணிக்கு நான் உதவவில்லையே என துக்கம். அதைத் தாயிடமிருந்து பறித்தெடுத்துத் துன்புறுத்திக் கொன்றவர் மேல் ஆத்திரம். ஆனாலும் நான் வாய் திறக்கவில்லை. இதை இப்பொழுது இங்கு எழுதுகிறேன். வாசித்துவிட்டு இது கடவுளுக்கு ஏற்குமா எனச் சிந்தித்துப் பாருங்கள்.

துள்ளித்திரியும் மான்களையும், கூட்டங்கூட்டமாய் தன் இனத்துடன் உல்லாசமாய்த் திரியும் யானைகளையும், தாவிப்பாயுங் குரங்குகளையும், வேட்டையாடித்திரியும் புலிகளையும், சுதந்திரமாகப் பாடிக் கொண்டு பறந்து திரியும் பறவைகளையும், புற்றிலிருந்து வெளியே வந்து இரை தேடும் பாம்புகளையும் பிடித்துத் துன்புத்துதல் முறையோ? இது தகுமோ? நியாயந் தானோ? என நாம் சிந்திக்க வேண்டும். மேலும் இக் கொடிய அநியாயத்தை எதிர்ப்பதோடல்லாமல், ஏனைய புத்திஜீவிகளுக்கும் எடுத்துக் கூறி அவர்களையும் இதனை நிறுத்துவதற்கு தூண்டுகோலாக எம்முடன் இணையுமாறு வேண்டிக்கொள்கிறேன்.



**27.06.2011 – 02.07.2011**



### அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

தன்னை எதிர்ப்பவர்களுக்கும் நல்லதே செய்பவர்களே! எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். நாடாளுபவர்களின் தொடர்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகளின் நினைவாற்றல் கூடும். புது வீடு, மனை வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசு காரியங்கள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். சாதிப்பவர்களின் பட்டியலில் இடம் பிடிக்கும் வாரமிது.



### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

அதி மேதாவியாக இருந்தாலும் அமைதியாகக் காய் நகர்த்துபவர்களே! ஓரளவு பணவரவு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம். உறவினர்கள், நண்பர்கள் வீடு தேடி வருவார்கள். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரம் சுமாராக இருக்கும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்த்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பணிவால் சாதிக்கும் வாரமிது.



### மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

பனி, மழை, வெயில் பார்க்காமல் உழைப்பவர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். பெரிய பதவிகள் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நட்பால் ஆதாயம் உண்டு. விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். சகோதர வகையில் அலைச்சல் இருக்கும். தாயாருடன் கருத்து மோதல்கள் வரும். பல ஆலோசனைகள் தருவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் வாரமிது.



### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உள்ளத்தில் அழுதாலும், உதட்டால் சிரிப்பவர்களே! கேட்ட இடத்தில் பண உதவி கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வாகனத்தை ஒப்பீடு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். கெட்ட நண்பர்களை ஒதுக்குவீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். மேலதிகாரி ஆதரிப்பார். தன் பலம், பலவீனத்தை உணரும் வாரமிது.



### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

அழுத்தமான கொள்கையாலும், ஆழமான பேச்சாலும் அடுத்தவர்கள் மனதில் இடம்பிடிப்பவர்களே! எதிர்பார்த்த பணம் வரும். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவீர்கள். மகளின் திருமணத்தைக் கோலாகலமாக நடத்துவீர்கள். மகனுக்குப் புது வேலை கிடைக்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். கலைந்த காதல் இனிக்கும். உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வேலையாட்களின் தொந்தரவு குறையும். நினைத்ததை நடத்திக் காட்டும் வாரமிது.




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

உதவும் கரங்கள் உடையவர்களே! கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைக் கொடுத்து முடிப்பீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும் அக்கம்-பக்க வீட்டாரின் ஆதரவுப் பெருகும். பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து லாபத்தைப் பெருக்க முற்படுவீர்கள். அவ்வப்போது விடுமுறையில் சென்ற வேலையாட்கள் இனிப் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். நயமாகப் பேசி வெற்றி பெறும் வாரமிது.



### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

விழுவதெல்லாம் எழுவதற்கே என நினைப்பவர்களே! தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம். உடன்பிறந்தவர்களால் சங்கடங்கள் வரும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பெற்றோர் உங்களின் உணர்வுகளை புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். தன்கையே தனக்குதவி என்பதை உணரும் வாரமிது.



### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

கலங்கி வருபவர்களின் கண்ணீரைத் துடைப்பவர்களே! அதிகாரிகளின் தொடர்பு கிடைக்கும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். குடும்பத்தாரின் ஆதரவுப் பெருகும். மகனின் அலட்சியப் போக்கு மாறும். புது வீடு கட்டிக் குடிபுகுவீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். பெற்றோருக்கு சில ஆலோசனை வழங்குவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமையும், விமர்சனங்களும் அதிகரிக்கும். கடின உழைப்பால் இலக்கை எட்டும் வாரமிது.




### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

ஒளிவு மறைவு இல்லாமல் உள்ளதை உள்ளபடி பேசுபவர்களே! திடீர் பணவரவு உண்டு. பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்து கொள்வர். சொத்துச் சேர்க்கையுண்டு. கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போங்கள். விலை உயர்ந்த பொருட்களைக் கவனமாகக் கையாளுங்கள். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அனுபவ அறிவால் வெற்றி பெறும் வாரமிது.



### உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

தன்னலம் கருதாமல் பிறர் நலம் பேணுபவர்களே! குடும்ப வருமானத்தை உயர்த்தப் புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்று புது இடம் வாங்குவீர்கள். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வாகன வசதி பெருகும். பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். சிந்தனையாற்றல் மேலோங்கும் வாரமிது.



### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

அருகிலிருப்பவர்களின் குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துபவர்களே! குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வராமலிருந்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. நட்பு வட்டம் விரியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். உடன்பிறந்தவர்களால் அலைச்சல் வரும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும். வியாபாரத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். விடாமுயற்சியால் வெற்றி பெறும் வாரமிது.



### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

காலச்சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் தன்னை மாற்றிக் கொள்பவர்களே! பணம் வரும். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பிள்ளைகள் தங்கள் தவறை உணர்வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். உங்களின் கல்வித் தகுதிக் கேற்ப நல்ல வேலைக் கிடைக்கும். அதிரடி லாபம் உண்டு. கனிவான பேச்சால் சாதிக்கும் வாரமிது.

# தமிழகத்துக்கு விடிவு?

■ எஸ்.சுரேந்திரஜித்

**தி.மு.க. வின் கதை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போக அ.தி. மு.கவோ படிப்படியாக அரசியலை எப்படிச் செய்வது என்ற படிப்பினையை நன்கு கற்றுத் தேறி வருகிறது என்பதே உண்மை.**

அண்மையில் தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றமை குறித்து பலரும் முகம் சுளித்தனர். இதற்கு முன் இரண்டு தடவைகள் பதவியில் இருந்த போது அவர் காண்பித்த ஆணவம் சற்றுக் குறைந்தால் கூடப்போதும் என்று நடுநிலை அரசியல் நோக்கர்கள் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொண்டனர். ஆனால் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாக அவர் திருந்தியதன் அடையாளங்கள் ஒரு மாதத்திலேயே வெளித்தெரியத் தொடங்கி இருப்பது சிறப்பான ஒரு விடயமாகும். 1991- 1996, 2001-2006 ஆகிய சென்ற இரு பதவிக்காலங்களிலும் ஜெயலலிதா ஆடிய ஆட்டம் கொஞ்சமல்ல.

1. ஆளுநருடன் மோதுவது

2. மத்திய அரசுடன் தான் தோன்றித்தனமாக மோதுவது.

3. கூட்டணிக் கட்சிகளை மதிக்காமை.

4. ஆடம்பரச் செலவு செய்து அரசு மற்றும் தனது குடும்ப (சசிகலா குடும்ப) விழாக்களை நடத்துவது.

(1991-1996 இல் சசிகலாவின் அக்காள் மகன் சுதாகரனைத் தத்தெடுத்து அவருக்கு ஆடம்பரத் திருமணம் நடத்தியமை இதற்குச் சிறந்த உதாரணம்).

5. சிறுபான்மையினரை நேரடியாக இலக்கு வைத்து சட்டமியற்றுவது. 2001-2006 இல் இதைச் செய்து படுதோல்வி கண்டார்.

6. தொழிலாளர் உரிமைகளை மதியாமை. (வேலை நிறுத்தம் செய்த லட்சக் கணக்கான அரச ஊழியரை 2001- 2006 ஆட்சிக்காலத்தில் ஒரே நாளில் பதவி நீக்கியமை இதற்குப் பொருத்தமானதொரு உதாரணம்)

முதன்முதலில் அவர் பதவியேற்றபோது (1991) ஜெயலலிதாவுக்கு வயது 43 தான். இன்று 63 வயதை எட்டிய நிலையில் அனுபவமும் சேர்ந்து அவரை அரசியல் நாகரீகம் மிக்கவராகச் செதுக்கியிருக்க கூடும் என்பதான அறிகுறிகள் கடந்த வாரங்களில் அவரது செயற்பாடுகளில் பிரதிப்பலித்தன. 1991 ஆண்டில் முதன்முதலாகப் பதவியேற்றபின் தமிழக ஆளுனர் டாக்டர் சென்னா ரெட்டியுடன் அவர் மோதிய விதம் அவரது நண்பர்களுக்குக் கூட வெறுப்பு ஏற்றியது. அவருடனான கருத்து மோதல் காரணமாக கடைசியில் மாரடைப்பு வந்து சென்னா ரெட்டி மரணமடைந்தே போனார். தற்போதுள்ள ஆளுனர் பர்னாலா, திமுகவுக்கு வேண்டப்பட்டவர். 1990ல் புலி ஆதரவு ஆட்சி என தி.மு.க ஆட்சியைக் கலைக்க பிரதமர் சந்திரசேகர் உத்தரவிட்டபோது அன்றும் ஆளுநராக இருந்த பர்னாலா அந்த முடிவுக்கு எதிர்ப்புக் காட்டினார்.

இப்போது ஜெயலலிதா முதல்வரானதை அடுத்து 93 வயதான பர்னாலா ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தி.மு.க ஆட்சி இழந்ததும் ஓய்வுக்கான அவரது முடிவுக்கு மற்றொரு காரணம். கடந்த வாரம் டில்லி சென்ற ஜெயலலிதா தனக்கு இணக்கமான ஒருவரை ஆளுநராக நியமிக்கும்படி பிரதமர் மன்மோகன் சிங்கைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாறு மத்திய அரசுடன் மோதாது இணங்கி நடக்கும் போக்கு ஜெயலலிதா விடம் இப்போது தெளிவாகத் தெரிகிறது. ஆடம்பர விளம்பரங்களை ரசித்து ருசிப்பவரான அவர், இம்முறை கட்சியினருக்கு இட்ட கண்டிப்பான உத்தரவில் தன்னை வரவேற்று வாழ்த்தி பதாதைகள், தோரணங்கள் முதலியன வைக்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளார். முதிர்ச்சியடைந்த ஒரு அரசியல்வாதியின் மனநிலைக்கு அவர் வந்துவிட்டார் என்பதை இது காட்டுகிறது. இதுதவிர கட்சியைத் தனது இரும்புப் பிடியில் வைத்திருப்பவர் என ஏற்கனவே பெயர் பெற்ற அவர் இம்முறை அந்தப்பிடியை இன்னும் இறுக்கிப் பொலிஸ் நிலையத்துக்கு வந்து குற்றவாளிகளை விடுவிக்க பொலிசாரிடம் கோரிக்கை வைக்கும் அ.தி.மு.கவினரின் பெயர்களைத் தனக்கு அறிவிக்கும்படி பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளாராம். இதன்படி கட்டப் பஞ்சாயத்து, கப்பம் என பழைய தி.மு.க வினரின் பாணியில் ரவுடித்தனம் பண்ணிய அ.தி.மு.கவின் மூத்த நிர்வாகிகளை மதுரை, சேலம், வேலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கும்படி போயஸ் காடனிலிருந்து உத்தரவு பறந்தது. தமது கட்சி ஆட்சி தானே என தர்பார் நடத்தக் கனவு கண்ட அ.தி.முக ரவுடிகள் இதனால் கலக்கமடைந்துள்ளனர். இதன் மூலம் ஒரு விஷயம் தெளிவாகிறது. தி.மு.கவானது கலைஞரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த கட்சியல்ல; கட்சி நிர்வாகிகள் ஒரு புறம் கலைஞர் புகழ்பாடி, மறுபுறம் கட்டப் பஞ்சாயத்து நடத்திய நிலை அ.தி.மு.க ஆட்சியில் நடவாது என்ற செய்தியை இதன் மூலம் ஜெயலலிதா தெளிவாக விடுத்துள்ளார்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு கவனிக்கவேண்டும். 1991 இலிருந்து முதல் தடவை 5 வருடங்கள் ஆண்டபின். 1996 தேர்தலில் அ.தி.மு.க படுமோசமாகத் தோற்றது. 4தொகுதிகளில் மட்டுமே வெற்றி. முதல்வரான ஜெயலலிதாவே தனது சொந்தத் தொகுதியில் தோற்றார். இரண்டாம் முறை சற்றுப் பாடம் படித்துக் கொண்டாலும் 2006 இல் அ.தி.மு.க. அரசு தோற்றது. ஆனால் அந்த முறை 4 தொகுதியல்ல. 63 தொகுதிகளில் அ.தி.மு.க வென்றே ஆட்சியை இழந்தது. முதல்வர் ஜெயலலிதாவும் தனது தொகுதியில் வென்றார். ஆக 96 இல் ஏற்பட்ட தோல்வியை விட 2006 இல் ஏற்பட்ட தோல்வி மிகச் சிறியதே. இதிலிருந்து தெரிவது, அடுத்த முறை ஆட்சியை இழக்காமல் தக்க வைக்கவும் ஜெயலலிதாவால் முடியும் என்பதே. கலைஞருக்கு இந்த வித்தை தெரியவில்லை. 2001 இல் தோற்ற கலைஞர் ஆட்சியிழந்தபோது தி.மு.க மதிப்பான எதிர்க்கட்சியாக 31 தொகுதிகளை தக்க வைத்தது. ஆனால் 2011 இல் இன்று தி.மு.க ஆட்சி இழந்தபோது 23 இடங்களை மட்டும் தக்க வைத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூட கலைஞர் பெற முடியாது விஜயகாந்த் என்ற கற்றுக்குட்டி அரசியல்வாதியிடம் பறிகொடுக்க நேர்ந்துள்ளது. தி.மு.க.வின் கதை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போக, அ.தி. மு.கவோ படிப்படியாக அரசியலை எப்படிச் செய்வது என்ற படிப்பினையை நன்கு கற்றுத் தேறி வருகிறது என்பதே உண்மை.

இது மாத்திரமன்றி எம்.ஜி.ஆர் ஐ விடவும் அதிக காலம் முதல்வராக இருந்தவர் என்ற பெருமையை ஜெயலலிதா வெகுவிரைவில் எட்டவுள்ளார். 20 வருடம் முதல்வராக இருந்த பெருமை கருணாநிதிக்கு மட்டுமே உண்டு. எனினும் எதிர்வரும் 5 ஆண்டுகள் நல்லாட்சி நடத்தினால் நிச்சயமாக 2016 இல் மீண்டும் ஜெயலலிதாவே வெற்றிபெற்று கலைஞரின் அந்தச் சாதனையையும் முறியடிப்பார் என்பது நிச்சயம். எம்.ஜி.ஆர் 1977 - 1987 வரையான 10 வருடமே முதல்வராக இருந்தார். 3 தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிவாகை சூடினார். கருணாநிதியோ, ஜெயலலிதாவோ இந்தச் சாதனையை நெருங்கவும் முடியாது. ஆனால் எம்.ஜி.ஆர் 3 தேர்தல்களில் வென்றது போல தொடர்ச்சியாக இல்லாவிடினும், இடைவிட்டாவது 3தேர்தல்களில் ஜெயலலிதா வென்றுள்ளார். இது ஒரு முக்கிய சாதனையாகும். (இவ்வாறு சாதனை நிகழ்த்த முடிந்தமைக்கான காரணம், அவரது தனிப்பட்ட செல்வாக்கை விடவும் கட்சியிலுள்ள 2ம் 3ம் மட்டத் தலைவர்கள் தி.மு.க தலைவர்கள் போல் ரவுடிகளோ, பாடசாலை செல்லாதவர்களோ அல்லர் என்பது ஆகும். நீதியை விரும்பும், நீதியைப் பின்பற்றும் சாமான்ய மனிதர்களே அ.தி. மு.க வின் எம்.எல்.ஏக்களாகவும், மந்திரிகளாகவும் ஆகியுள்ளனர். உதாரணமாக கோயம்புத்தூர் மாவட்டம் அவினாசி தொகுதியில் பெரும் வாக்குவித்தியாசத்தில் வென்றவர் பெட்டிக்கடை நடத்திய, பூசாரி வேலை பார்த்த சாமானிய அ.தி.மு.க தொண்டர் ஒருவரே. அத்தொகுதியில் பலர் அ.தி.மு.க.வில் போட்டியிட விண்ணப்பித்தும் இந்த ஏழைத் தொண்டரை ஜெயலலிதா வேட்பாளராக தெரிவு செய்தார் என்றால் அவரது அரசியல் முதிர்ச்சி இதன் மூலம் வெளிப்படுகிறது. சசிகலாவின் முடிவுகளைப் புறம்தள்ளிவிட்டு ஜெயலலிதா சுயமாக முடிவெடுத்தால் தமிழ் நாட்டுக்கு விடிவுண்டாகும் என பல அரசியல் அனுபவஸ்தர்கள் முன்பு கூறி வந்தனர். சாட்சாத் இதையே ஜெயலலிதா இன்று செய்யத் தொடங்கியுள்ளார் என்று தெரிகிறது. கடவுள் புண்ணியத்தில் தமிழகம் பிழைத்துவிடும் சாத்தியக்கூறுகளே தெரிகின்றன. பல தொகுதிகளில் ஜெயலலிதா தெரிவு செய்த படித்த, பெண் வேட்பாளர்கள் நீதி, நியாயம், நேர்மையின் உருவமாக இன்று மக்கள் சேவை செய்யத்தொடங்கியுள்ளனர். கடலூர் மாவட்டம் புவனகிரி எம். எல்.ஏயும் சமூகநலத்துறை அமைச்சருமான செல்வி.ராமஜெயம் இத்தகைய ஒருவர். சாந்தம் தவழும் முகம். அதிர்ந்து பேசாத குரல், சேவையே நோக்கமாக இவர் வலம் வருகிறார்.

தி.மு.க.ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்கள் பலர் ரவுடித் தொழிலிலும் கொடிகட்டிப் பறந்தவர்கள். எடுத்ததற்கெல்லாம் அடிதடியே அவர்களின் வழியாக இருந்தது. ஆனால் இப்போதுள்ள அ.தி.மு.க.அமைச்சர்கள் பலர் அதற்கு நேரெதிராக உள்ளனர். நல்லாட்சி நடப்பதை ஜெயலலிதா தொடர்ந்தும் பேணினால் அவரை அசைப்பதற்குத் தி.மு.க.பெரும் சிரமப்பட வேண்டியிருக்கும். ★



# ஒரேயொரு முறை மட்டுமே கொப்புளிப்பான் நோய் வரும்



**கேள்வி:** 10 வயதான எனது மகனுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் கொப்புளிப்பான் நோய் வந்தது. தற்பொழுது கொப்புளிப்பான் தடுப்பூசி போடும்படி ஆலோசனை கூறியுள்ளனர். ஒரு முறை கொப்புளிப்பான் நோய் வந்தால் இந்தத் தடுப்பூசி போடவேண்டியது அவசியம்தானா?


**பதில்:** கொப்புளிப்பான் (chicken pox ) நோய் வைரஸ் கிருமிகளால் ஏற்படுகின்றது. பெரிய அம்மை (small pox) சின்னமுத்து (measles) ஜேர்மன் சின்னமுத்து (Rubella) கூகைக்கட்டு (Mumps) என்பனவும் வைரசினாலேயே உண்டாகின்றன. இவற்றில் Small pox அல்லது பெரியம்மை முற்காலத்தில் மிக ஆபத்தான நோயாகக் கருதப்பட்டது. அனேக உயிர்களைப் பலிகொண்டது. Vaccine அல்லது நோய்த்தடை மருந்து பற்றி சிந்திக்க வைத்ததே இந்த Small pox நோய்தான். Edward Jenner அம்மைப்பால் கட்டும் முறையை அறிமுகப்படுத்தியதில் தொடங்கி தற்போது இந்த நோய் முற்றாக உலகில் இருந்தே ஒழிக்கப்பட்டு விட்டது. ஆய்வு கூடத்தில் அன்றி உலகில் வேறெங்கும் Small pox வைரஸ் இல்லாமல் ஒழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே Polio வையும் மிக விரைவிலேயே உலகில் இருந்து ஒழித்து விட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக (Measles) சின்னமுத்து (Rubella) ஜேர்மன் சின்னமுத்து (Mumps) கூகைக் கட்டு போன்றனவும் மனிதருக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என் பதால் அவற்றுக்கான தடுப்பு மருந்து களும் மிக அதிகளவில் பாவனைக்கு வந்துள்ளன.

எமது சுகாதாரத்துறையும் சின்னமுத்து நோய்க்கும் ஜேர்மன் சின்னமுத்துவுக்கும் எதிரான தடுப்பு மருந்துகளை விரிவுபடுத்தப்பட்ட நோய்தடுப்பு மருந்தேற்றும் திட்டத்தில் (Expanded Programme of Immunization) உள்ளடக்கியுள்ளனர். மிக விரைவில் Mumps நோய்த்தடை மருந்தும் EPIயில் இடம்பெறும்.

ஆனால் தனியார் வைத்திய நிலையங்களில் Measles, Mumps, Rubella க்கான முக்கூட்டு மருந்து MMR கிடைக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட Chicken pox ற்கு எதிரான Vaccine உம் உண்டு.

ஆனால் ஒருமுறை கொப்புளிப்பான் வந்தால் மீண்டும் வருவதில்லை. இதை விடவும் நரம்பு கொப்புளிப்பான் எனப்படும் Herpes Zoaster நோய்வந்தாலும் Chicken pox வராது. அவ்வாறே Chicken pox வந்தவர்களுக்கு Herpes Zoaster வராது. நோய் வராத ஒருவர் தடுப்பு மருந்தை (Vaccine) ஏற்றிக்கொள்வது மிகவும் நல்லது. ஆனால் Chicken pox வந்தால் Vaccine அவருக்கு அவசியம் இல்லை.




**கேள்வி:** உணவு உட்கொண்ட ஓரிரு மணித்தியாலத்துக்குப் பின்னர் சில சமயங்களில் வயிற்றுப் பொருமல் - அதைத் தொடர்ந்து இலேசான வயிற்று வலி ஏற்படுகிறது. பெரும்பாலும் நேரம் தப்பி - வழமையான உணவு வேளைக்குப் பிந்தி உணவு உட்கொள்ளும் வேளையிலேயே இவ்வித அசௌகரியம் ஏற்படுகிறது. இதற்காக மருத்துவ ரீதியான காரணம் என்ன? இதனை எவ்வாறு நிவர்த்தி செய்ய இயலும்?

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.**

**இலவச மருத்துவ ஆலோசனை**


**I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,**
**361,கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**II.) சுடர்ஒளி,**
**85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**பதில்:** தங்களுடைய பிரச்சனையுடன் தொடர்புடைய பதில் அண்மைய வாரங்களில் ஏற்கனவே விரிவாகத் தந்திருந்தேன். பலருக்கும் பொதுவான பிரச்சனைகளில் இதுவும் ஒன்று.

நாம் உண்ணுகின்ற உணவு வகைகள் வாயில் அரைக்கப்பட்டு களத்தினூடாக இரைப்பையை அடைகின்றன. அங்கு அவை சமிபாடடைய ஆரம்பிக்கின்றன. பின்னர் அவ்வுணவானது முன்சிறுகுடல், சிறுகுடல் ஊடாக பெருங்குடலை அடைகின்றது. இவ்வேளையில் சமிபாடடைந்த உணவானது அகத்துறிஞ்சப்படுகிறது. ஏனைய கழிவுப் பொருட்கள் மலமாக வெளியேறுகின்றன.

இச்செயன்முறையில் இரைப்பையில் உணவை சமிபாடடையச் செய்வதற்காக இரைப்பைச் சாறு சுரக்கப்படுகிறது. இரைப்பைச் சாறின் ஒரு கூறாக அமிலமும் சுரக்கப்படுகிறது.




அமிலம் கலங்களால் அழிக்கக் கூடியது, காயத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதை நீங்கள் அறிவீர்கள். இருந்தபோதும் எமது இரைப்பையின் உள்ளே உள்ள சீத (கனிய) மென்சவ்வுப் போர்வை காரணமாக அமிலத்தினால் பொதுவாக எமது இரைப்பையின் உட்பகுதி சேதமடைவதில்லை.


ஆனால் சுரக்கப்படும் அமிலத்தின் அளவு அதிகமாக இருந்தால் அல்லது மென்சவ்வுப் போர்வை சேதமடைந்திருந்தால் இரைப்பையின் உட்பகுதி புண்ணாகிவிடுகிறது. இதனை Peptic Ulcer என அழைப்போம். இதன் ஆரம்பம் ஒரு பக்ரீறியாவின் தாக்கத்தோடு ஆரம்பிக்கிறது. ஆனால் இத்தகைய வயிற்றுப் புண் ணைப் பல காரணிகள் ஊக்குவிக்கின்றன. அதிகரித்த மன அழுத்தம், புகைபிடித்தல், நேரந்தவறி உணவு உட்கொள்ளுதல், அடிக்கடி விரதமிருத்தல் போன்றவை அவற்றுட் சிலவாகும்.

இதற்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து கொள்வதே சிறந்தது. மேலும் இப்போது மிகச் சிறந்த பல மருந்துகள் பாவனையில் உள்ளன. எனவே மிகச் சுலபமாக இதனைக் குணமாக்கி விடலாம். ஆனால் மீண்டும் ஏற்படாதிருக்க வாழ்க்கை முறை மாற்றம் தேவைப்படும். உதாரணமாக நீங்கள் புகை பிடிப்பவராயின் புகைத்தலை நிறுத்த வேண்டியிருக்கும். உணவுப் பழக்க வழக்கத்தையும் சீராக மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

எனவே இது ஒரு பெரிய பிரச்சனையே அல்ல. நீங்கள் சரியாக முயற்சித்தால் அது தானாகவே இயல்பு நிலைக்குத் திரும்பிவிடும். *




## புற்றுநோயைத் தடுக்க உதவும் உலர் பழங்கள்



உலர் பழங்கள் புதிய பழங்களைப் போலவே சத்துள்ளதாகத் திகழ்கின்றன. இந்த உலர் பழங்கள் புற்றுநோயை எதிர்க்கவும், இதய நோய்களைத் தவிர்க்கவும் உதவுகின்றன.


அது மட்டுமல்லாமல் வளர்சிதை மாற்ற நோய்களைத் தவிர்க்கவும் உதவுகிறது. உலர் பழங்களில் நார்ச்சத்து நிறைந்து உள்ளது. அதே போன்று வைட்டமின்கள், தாதுச்சத்துக்களும் உள்ளன.

முறைப்படியான உணவு வகைகளில் உலர் பழங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் பரிந்துரை அளித்துள்ளன. மினோசாட்டா பல்கலைகழக ஆய்வாளர் மருத்துவர் டேனியர் காலேசர் இதுபற்றிக் கூறுகையில், "உலர் பழங்களில் கரையக்கூடிய நார்ச்சத்துக்கள் அதிகம் உள்ளன என்றார்.


லீட்ஸ் பல்கலைகழக ஆராய்ச்சியாளர் மருத்துவர் காரிவில்லியம்சன் இது குறித்துக் கூறுகையில், "தாவர பாலி பீனால்ட் இதயநோயைத் தவிர்க்க முடியுமா என்ற சிறு சந்தேகம் உள்ளது" என்றார்.

உலர் பழங்கள் உட்பட சில பழங்களில் குறிப்பிட்ட வகை பாலி பீனால்கள் உள்ளன. அவை உடல்நலனுக்கு உதவும் செயற்பாட்டை அவதானித்துக் கொண்டு இருக்கிறோம் என ஏதென்சில் உள்ள ஹாரோ சோபியோ பல்கலைகழக மருத்துவர் ஆண்ட்ரியனா காலியோரா கூறினார்.

சிலவகை புற்றுநோய்களைத் தவிர்க்க உலர் பழங்கள் உதவுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். நார்த் வேல்சின் பான்கோர் பல்கலைகழக ஆய்வாளர்கள் இது பற்றிக் கூறுகையில்,பழச்சாறில் அதிக அளவு சர்க்கரை உள்ளது. கூடுதல் எடை மற்றும் உடல்பருமன் உள்ளவர்களுக்கு பழச்சாறுகளின் பலனில் பெரும் தாக்கம் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.



# பல்கலையும் பாழாய்ப் போகும் கல்வித் துறையும்




■ செந்தில்குமார்

இலங்கையில் வாழும் எல்லா மக்களுக்கும் கல்வியைப் பெற்றுக்கொள்ள அரசின் கல்வி முறைமை ஏதுவாக இருக்கின்றது. கல்வி அறிவு வீதம், எழுத்தறிவு வீதம் என்பவற்றால் இலங்கை கணிசமான அளவு முன்னிலையில் இருக்கின்றது. இந்த இரண்டு காரணங்களுமே இலங்கை அரசின் மிதவாத சிந்தனைகளை உருவாக்குபவனவாகக் காணப்படுகின்றன. இதன்காரணமாகவே எமது நாட்டின் கல்வி நடவடிக்கைகள் சீர்குலைந்து போகவும் ஏதுவாகின்றன.

சர்வதேச தரத்தில் இலங்கையின் கல்வி முறையை மாற்றுவது என்ற அளவுகடந்த ஆசைகளுடன் உயர்கல்வித் துறையில் பல்வேறு பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தப் போவதாகவும் அரசு அறிவித்திருக்கிறது. நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களைச் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைத்தும், அவற்றின் கல்வி முறைகளைப் பின்பற்றியும் இந்த இலக்கு எட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறியவும் உள் முரண்பாடுகளால் ஏற்படும் கல்விரீதியான பாதிப்புக்களைக் களைய நடவடிக்கை எடுக்கவும் அரசு தயாராக இல்லை. இந்தப் பக்குவத்தில் சர்வதேச தரம் என்பதை எவ்வாறு எண்ணமுடிகின்றதோ தெரியவில்லை.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி தொடக்கம் தமக்கான சம்பள உயர்வைக் கோரிப் பல்கலைக்கழக விரவுரையாளர்கள் பணிவிலகல் போராட்டத்தை முன்னெடுத்து, இப்போது பல்கலைக்கழக விரிவுரைகளையும் புறக்கணித்து அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

இரண்டு மாதங்களாகத் தொடரும் இந்தப் போராட்டம் காரணமாகப் பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உயர்கல்வி தேவையற்ற ஒன்றாக மாறிவிடும் அளவுக்கு இந்தச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

### இரு தரப்பும் வன்மப்போக்கு

விரிவுரையாளர்கள் தமக்குச் சம்பள உயர்வு வழங்கப்படாத பட்சத்தில் தொடர்ந்த போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அரசுக்கு மிரட்டல் விடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும் அந்த விதத்திலே அமைந்துள்ளது. தகுதி நிலை அடிப்படையில் சம்பள உயர்வு கோரிநிற்கும் இவர்கள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை இப்போது அரசு தமக்கு வழங்கிவரும் சம்பளத்தைக் கொண்டு நிவர்த்தி செய்யமுடியாதிருப்பதாகவும் இதன்காரணமாக வங்கிகளில் தாம் கடனாளிகளாக மாறவேண்டியுள்ளதாகவும் தெரவிக்கின்றனர்.

2011ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியிலிருந்தும் தாம் விலகிக்கொள்ளப் போவதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனால் முன்னர் இவர்கள் தமக்கு 4 வீத சம்பள உயர்வு கோரிப் போராடியபோது 36 வீத சம்பள உயர்வைத் தாம் வழங்கியுள்ளதாகவும், பல்கலைக்கழக நிர்வாகப் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்வதானால், மூன்று மாதங்களுக்கு முன் அது குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியைப் பெறவேண்டும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி உயர்கல்வி அமைச்சரும் விரிவுரையாளர்களது போராட்டம் எந்த விதத்திலும் நியாயமற்றது, எனவும் இவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் பல்கலைக்கழக செயற்பாடுகளைக் குழப்பும் வகையில் தமது வேலைகளைச் சரியாகச் செய்யாத விரிவுரையாளர்களது சம்பளக் கொடுப்பனவை நிறுத்தி விடுமாறும் துணைவேந்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### மாணவர்கள் பாதிப்பு

விரிவுரையாளர்களின் போராட்டமும், அதனை அரசு கருத்தில் எடுத்து எந்த மாற்று நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கு அரசால் தகுதியான வேலை வழங்கமுடியாதுள்ளது. இவர்கள் சாதாரணமான மக்களைப்போலவே, வேலைக்காகப்போட்டிபோட வேண்டியுள்ளது. நான்கு, ஐந்து வருடங்களையும் பல லட்சம் ரூபாக்களையும் செலவிட்டு பட்டம் பெற்றாலும்கூட தகுதியான வேலை இல்லாத நிலையில் பட்டதாரிகள் உள்ளனர்.

இந்த வேதனை அரசின் இது போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகளால் மேலும் தீவிரம் அடைகின்றது. உரிய காலத்தில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யமுடியாமை, பருவ காலத் தேர்வு களை உரியகாலத்தில் எழுதமுடியாமை, பட்டப்படிப்புக்கான காலத்தை வீணாகல் ,கடத்தல், விரக்தி போன்ற சிரமங்களை மாணவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

### தேவையற்ற செலவுகள்

அரசு, தேவையை விடுத்து, அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புடன், அரசியல் இலாபங் களுக்காகச் சில திட்டங்களைத்தீட்டி அதற்காகப் பல கோடி ரூபாக்களை செலவிட்டு வருகின்றது.

பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்களுக்குக் கட்டாயத் தலைமைத்துவப் பயிற்சியை இராணுவ முகாம்களில் வைத்து இப்போது வழங்கி வருகின்றது. இதற்காக அதிகளவு பணம் செலவிடப்படுகின்றது. ஆனால் பல்கலைக்கழக அபிவிருத்தி, மாணவர்களது தேவைகள் போன்ற எந்த வேலைத்திட்டங்களும் உரியமுறையில் நிறைவேற்றப்படுகின்றதாஎன்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

பொருள்களின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வாழ்கைச் செலவு அதிகரித்துவரும் நிலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில்களான மஹாபொல, மாணவர் உதவிப் பணம் என்பன காலம்காலமாக மிகக் குறைந்த தொரு தொகையாகவே வழங்கப்படுகின்றது. இவற்றை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள் ளப்பட் டுள்ளதாகக் உயர்கல்வி அமைச்சு அறிவித்திருந்த போதும், அது இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை.

முதலில் இருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு படிப்படியாக வளரவேண்டும் என்ற நிலைமாறி, எடுத்தமாத்திரத்தில் உச்சந் தலையில் ஏறிநின்று உள்ளங்காலைத் தரிசிப்பது ஆபத்திலேயே முடியும் என்பதை அரசு உணர வேண்டும்.★

# “என்னுடைய மனைவி கண்ணகிதான்!”



**ஆர்.விஜிதா,**
**பரந்தன்.**

**கேள்வி:** பித்தரே, உம்முடைய மனைவி கண்ணகியைப்போல் பத்தினியா? (இதற்குப் பதில் சொல்லா விட்டால் உமது தலை சுக்கு நூறாகச் சிதறிவிடும்.)

**பதில்:** அதில் என்ன சந்தேகம்? என் மனைவி கண்ணகியே தான். மாலை நேரங்களில் தலைவிரிகோலத்தோடும் ஒரு கையில் தோசைக் கல்லோடும் என்னை அடிக்க ஓடி வருகையில் கண்ணுக்குள் வருவது கண்ணகி தான். போதாக்குறைக்கு கண்ணகி மதுரையை பற்றி எரியச் செய்தது போல ஊர்த் துழவாரங்களை எல்லோருக்கும் பற்ற வைத்து மற்றவர்களின் குடும்பங்களைப் பற்றி எரிய வைப்பதிலும் கெட்டிக்காரி. இப்போது நீங்களே சொல்லுங்கள். என் மனைவி கண்ணகி தானே?

**ஆர்.ராஜ்,**
**மானிப்பாய்**

**கேள்வி:** பித்தா, சனல்-4 வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் பார்த்தீர்களா?

**பதில்:** பார்க்கச் சகிக்கவே முடியாத படம் அது. மனித குலம் நாகரீகமடைய முன்னர் சக மனிதர்களையே வேட்டையாடி உண்டதாகக் கதைகள் பல கேட்டிருக்கிறேன். அதை நேரில் பார்க்கும் வாய்ப்பை சனல்-4 தந்திருக்கிறது.

**எஸ்.அபிஷன்,**
**உரும்பிராய்**

**கேள்வி:** ஸ்ரீலங்கன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் தமது நாட்டு வீரர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என இந்தியா கைவிரித்து இருப்பது பற்றி...?

**பதில்:** ஐ.பி.எல்லுக்குப் போட்டியாக வேறெந்த அமைப்பும் உருவாகக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். ஆனாலும் கீரைக்கடைக்கு எதிர்க்கடை இருக்கத்தானே வேண்டும்.



**கே.லக்ஷன்,**
**அக்கராயன்.**

**கேள்வி:** உலகத்திலேயே மிகக் கஷ்டமான காரியம் எது பித்தா?

**பதில்:** பதிலாக ஒரு கதை சொல்கிறேன்.

ஒரு முறை ஒரு பக்தனுக்கு முன்னால் கடவுள் தோன்றி “ உனக்கு என்ன வரம் வேண்டும்?” என்று கேட்டார்.

அதற்கு பக்தன் “ இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு நடந்து செல்ல ஒரு றோட் போட்டுத்தர வேண்டும். ” என்றான்.

கடவுள் உதட்டைப் பிதுக்கியவாறு “அது சரியான கஷ்டம். அதைவிட வேறேதாவது கேள்!” என்றார்.

பக்தன் யோசித்து விட்டு “அப்படியானால் நான் சொல்வ தையெல்லாம் என் மனைவி கேட்க வேண்டும்” என்று கேட்டான்.

உடனேயே கடவுள் “உனக்கு அமெரிக்காவுக்கு சாதாரண றோட்டா? அல்லது காப்பெற் றோட்டா வேண்டும்” என்று சரணடைந்தார்.

இப்போது நீங்களே ஊகித்திருப்பீர்கள். உலகிலேயே கஷ்டமான காரியம், எதுவென்று.

**த.சந்தோஷ்,**
**வவுனியா.**


**கேள்வி:** தகுதிக்கு மீறி ஆசைப்படுவது தவறல்லவா பித்தரே.

**பதில்:** இந்தக் காலத்தில் தகுதி மட்டுமல்ல, எல்லாவற்றையும் மீறித்தான் ஆசைப்படுகிறார்கள். எட்டாவிட்டால் ஏணி வைத்தாவது அடைந்து விடத் துடிப்பது இக்காலத்தில் சர்வசாதாரணம்.

**எஸ். ஜனாகி,**
**கொழும்பு.**

**கேள்வி:** பித்தரே, சில ஆண்களுக்குத் தான் அதிக அளவில் பார்வைக் கோளாறு ஏற்படுவதாகச் சொல்கிறார்களே...

**பதில்:** சில ஆண்களுக்குக் குறும்பார்வைக் குறைபாடு அதிகமாயிருப்பதென்னமோ உண்மைதான். இப்படியானவர்களுக்கு பக்கத்தில் நிற்கும் மனைவி மங்கலாகத் தெரியும் அதே வேளை தூரத்தில் காணும் ஒரு பெண் பளிச் சென்று தெரிவதாகச் சொல்வார்கள். இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல கடையில் மூக்குக் கண்ணாடி வாங்கிக் கொடுப்பது நல்லது.




**ரி. அஜய், மன்னார்.**

**கேள்வி:** பித்தரே, எப்படிப்பட்ட மனிதர்களை நம்பலாம்?

**பதில்:** எவரையும் நம்பலாம்; ஆனால் அவர் உங்கள் தலையில் மிளகாய் அரைக்க அனுமதிக்காத அளவுக்கு ஜாக்கிரதை தேவை.


**வி.பேபி, வவுனியா.**

**கேள்வி:** அளவெட்டியில் கூட்டமைப் பின் கூட்டத்தை குழப்பியது ‘இனந் தெரியாத நபர்கள் தான்’ என்று அரசு கூறியிருக் கிறதே? இதைப்பற்றி பித்தரின் கருத்து என் னவோ?

**பதில்:** இவ்வாறு கூறியது கூட இனந் தெரியாத அரசு தான் என்று நாளைக்கு வேறொரு அறிக்கை வந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. இலங்கை ஆசியாவின் ஆச்சரியமல்லவா?

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 475



### மேலிருந்து கீழ்

01.தர்க்கம்.
02.அருள் கூர்ந்து அளிப்பது.
03.நறுமணம் பெறவும் பயன்படுத்துவர்/ முட்டாளைத் திட்டவும் பாவிப்பர்.
04.மார்பு/நெஞ்சு.
05.பொருத்தமானது / சரியானது.
06.பகுபத உறுப்பில் ஒன்று.
08.இரண்டு.
10.தமிழ் மாதம் ஒன்று.
13.இறத்தல்.
14.சேர்தல்/சேர்த்தல்/ ஒருவரைப்பற்றி அள்ளி வைத்தல்.
15.பன்னிரண்டு அங்குலம்.
16.கொலை செய்யாமை.
17.தினசரி மாறுவது.
18.நமது/ நம்முடைய.
20.இது அறுபத்தி நான்கு என்பர்

### இடமிருந்து வலம்

01. வேளாண்மை செய்பவன்.
04. சிலப்பதிகாரத்தில் கோவலன் காதல்நாயகி.
07. ஏழு நாட்கள்.
08. தென்னோலையைக் கீறிப் பெறுவது
09.இளைய சகோதரர்மார்.
11. வேகம்.
12.சோதிடத்தில் வீடு அல்லது மேடை.
13.போதை தருவது.
14.குழு
15. சிங்கம்.
17. வலிமை.
18. சினிமாவிலும் நாடகத்திலும் பலரும் செய்வது.
19. ஒரு ராசி / ஓலையால் வனைந்த பெட்டி.
21.சிதம்பரம்
22.அறியாமை/படியாத தன்மை

அனுப்புபவர் பெயர்:...............................................
விலாசம்:...............................................
...............................................
கையொப்பம்:...............................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 475

*சொற்சிலம்பம் 475 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 17 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக்குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 472 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **செ.சின்னத்துரை,** இல114/ 01புதிய அமைப்பு வீதி பூந்தோட்டம், வவுனியா

**2 ஆம் பரிசு** — **அ.அன்ரனி சுரேஸ்குமார்,** இல 23/ 10,B பாடசாலை வீதி, ஜயந்திபுரம், மட்டக்களப்பு.

**3 ஆம் பரிசு** — **திருமதி.ம.வரதராஜன்,** மணிமேகலை இல்லம், வந்தாறுமூலை.

## சொற்சிலம்பம் போட்டி இல.472 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.மகத்துவம். 02.திறை. 03.புவனம் 04.பதி 05.வில்லை 08.சதி 09.கரம்பற்று 10.அரும் 12.வட 13.நேரும் 15.இயல்பு 16.புடையன் 18.திற 19.முன் 20.சக

### இடமிருந்து வலம்

01.மதிப்பு 04.பதவி 06.கறை 07.வசதி. 09.கனதி 10.அலை 11.துவரம். 13.நேரு. 14.வடம் 15.இரும்பு 17.பதியம் 19.முற்றல் 20.சய 21.நன்று. 22.புளுகன்

## பாராட்டுப் பெறுவோர்

(1) **திருமதி.வி. மகேஸ்வரி,** ‘விக்னேஸ்வர வாசா’, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(2) **ஏஞ்சல் ஆரபி சொரூபன்,** இல.49, 3/3, கொலிங்வூட் பிளேஸ், கொழும்பு- 06.
(3) **எஸ். சவிலக்ஷனா,** இல 264 பசறை றோட், மூன்றாம் கட்டை, பதுளை.
(4) **இ.திலகவதி,** இல.97F, மகளிர் திட்டம், திருவையாறு, கிளிநொச்சி.
(5) **எம்.எம்.அஷ்ரப்,** இல.276 A, மார்க்கட் றோட், சாய்ந்தமருது- 07.
(6) **திருமதி. சத்தியலட்சுமி உமாபதிசிவம்,** பரமநயினார் கோயிலடி, ஆரையம்பதி-01.
(7) **சி.குகராஜா,** இல.125/1B, தாழ்வுபாடு வீதி, எழுத்தூர், மன்னார்.
(8) **திருமதி.சி.ஜெயராணி,** வாசிகசாலை வீதி, கொம்மாதுறை, செங்கலடி.
(9) **செல்வன்.பி.பானுஜன்,** இல.177, மூர் வீதி, மன்னார்.
(10) **வி.சிவபாதவிருதயர்,** இல.10/ 3, பான்ஸ் அவனியூ, கல்கிசை.



# சிறுவர் சுடர்



## பூனையும் நரியும்




ஒரு காட்டில் பூனையும் நரியும் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் பூனை நரியைச் சந்தித்தது. அவை தங்களுக்குள் பல விஷயங்களைப் பற்றிப்பேச ஆரம்பித்தன. கடைசியில் உயிர் இரக்கம் பற்றியும், கொடுமையான கொலைகளைத் தடுப்பது பற்றியும் பேசிக்கொண்டிருந்தன. எல்லா நல்ல காரியங்களிலும் கருணையே மிகச் சிறந்தது. உன் அபிப்பிராயம் எப்படி? என்று நரி பூனையைக் கேட்டது. ''அதிலென்ன சந்தேகம்? கருணையை விடச் சிறந்த குணம் ஏது? தன்னுயிரைப் போல பிற உயிரையும் நேசிப்பது தான் கடமை'' என்று பூனை கூறியது. இவ்வாறு இவைகள் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு ஓநாய் ஒரு ஆட்டுக்குட்டியைக் கௌவிக்கொண்டு போயிற்று. இதைக் கண்ட பூனையும் நரியும் ''அநியாயம், கொடுமை, இப்படியும் செய்யலாமா? ஒரு நிரபராதியான, ஒரு பாவமும் அறியாத ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்பதை விட இந்த ஓநாய் மண்ணைத் தின்னட்டுமே! எதற்காக ஓ அப்பாவி உயிரைக் கொலை செய்ய வேண்டும்?'' என்று பேசிக் கொண்டன. இப்போது நரி தன் பசியை உணந்து சுற்றும் முற்றும் பார்த்தது. அப்போது ஒரு சேவல் ஒய்யாரமாக நடந்து சென்றதை நரி பார்த்தது. நரிக்குப் பசி எடுத்தது. நரியின் வேதாந்தம் பறந்தது. ஒரே பாய்ச்சலில் அந்தச் சேவலைக் கௌவித்தின்ன ஆரம்பித்தது. அதே சமயத்தில் ஒரு எலி போவதைப் பூனை பாத்தது. பூனைக்கும் பசி எடுத்தது. அதுவும் தன் போக்கில் எலியைக் கௌவி விழுங்கியது.

நீதி: பிறருக்கு உபதேசம் செய்பவன், தான் ஒரு போதும் அவ்வாறு நடக்க மாட்டான்.

சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்.


## நன்மை சேரட்டும்



அன்பும் நல்ல பண்பும் சேர
அறிவும் வளர்ந்திடும்
இன்பம் சேர்க்கும் நல்ல குணமே
இறைவன் ஆலயம்
கல்வி, செல்வம், வீரம் சேர
கருணை பெருகிடும்
சொல்லில் வல்ல உண்மை கூட்டும்
சொர்க்கம் வாழ்விடம்.

- உமாபாரதி.

## ஆறு வித்தியாசங்கள் காட்டுங்கள்




## சிரியுங்கள்....



ஆசிரியை:- ''புத்தகம் படிக்கும் போது நேராக இருந்து படிக்காமல் ஏன் நெளிஞ்சு நெளிஞ்சு படிக்கிறாய்!''

மாணவன்:- ''நான் ஒரு புத்தகப் புழு ரீச்சர்!''



நா.புருஷோத்தமன்.
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.



ர.கயேந்திரன்.
யாழ்.விக்ரோறியாக் கல்லூரி.

# இறந்தும் உயிர் வாழும் டெபி

## உண்மைச் சம்பவம்




**கார் விபத்தில் சிக்கி மீளவே முடியாத கோமா நிலைக்குச் செல்லும் டெபி என்ற யுவதியின் உடல் உறுப்புக்களை அவை தேவைப்படும் நோயாளிக்குத் தானமாக வழங்க முன் வருகின்றனர் டெபியின் பெற்றோர். டெபியின் உடல் ஊறுப்புக்கள் மாற்றுச் சிகிச்சை மூலம் பல நோயாளர்களுக்குப் பொருத்தி அவர்களைக் குணமாக்கும் கடினமான பணியில் டாக்டர்கள் குழுவொன்று இறங்குகிறது. இனி....**

**காலை மணி 9.35:** பழுதடைந்த ஈரல் வெளியே எடுக்கப்பட்டு விட்டது. பனிக்கட்டிப்பையில் வைக்கப்பட்டிருந்த ஈரல் சரியாக இருக்கிறது என்று நிச்சயிக்கப்பட்டதால் மெதுவாக அது சைலாவின் மார்புக்கூட்டுக்குள் வைக்கப்பட்டது.

**காலை மணி 10.00:** மிகப் பிரகாசமான வெளிச்சத்தின் கீழே மிகவும் உறுதியான நூலிழை போன்ற இணைப்புகளின் மூலம் டாக்டர்கள் சார்ள்ஸ், தோமஸ் மற்றும் உதவியாளர்கள் என ஒரு குழு புதிய ஈரலை சைலாவின் உடலோடு இணைக்கத் தொடங்கினார்கள். ஒரு பென்சிலின் கூர்மையான முனையைவிட மெல்லியதாக இருந்த இரத்தக் குழாய்களை ஒவ்வொன்றாக மிகவும் லாகவத்தோடு இணைக்கத் தொடங்கினார்கள். அடுத்த ஐந்து மணி நேரம் இதற்குத் தேவைப்படும்.

**மாலை மணி 3.00:** புதிய ஈரல் பொருத்தப்பட்டு விட்டது. மிகவும் ஆவலோடு புதிய ஈரல் இயங்குகின்றதா எனப் பார்த்துக்கொண்டிருந்தார்கள. ஆம். அது இயங்கத் தொடங்கி விட்டது. அதன் நிறம் இயற்கை நிறத்துக்கு வந்ததோடு இரத்தமும் சுரக்கத் தொடங்கியது. இரு டாக்டர்களின் கண்களும் சந்தித்துக் கொண்டன. விழியோரங்கள் நனைந்தன. எதை நினைத்து? தங்கள் திறமைக்குக் கிடைத்த வெற்றியை நினைத்தா அல்லது ஒரு இளம் யுவதியின் தியாகத்தை நினைத்தா? ஒன்றும் புரியவில்லை.

பேபி

மார்புக்கூட்டைத் தைத்து மூடும் பணியை உதவியாளர்களிடம் விட்டு விட்டு சோர்வடைந்த நிலையில் இருவரும் சத்திர சிகிச்சைக் கூடத்தை விட்டு வெளியேறினார்கள்.

**மாலை மணி 5.00:** விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த தங்கள் நோயாளிகளை ஒரு முறை சுற்றிப்பார்த்து தேவையான சிகிச்சை முறைகளை விடுதி வைத்தியர்களிடம் அறிவித்த பின் மீண்டும் இருவரும் சத்திர சிகிச்சைக் கூடத்துக்குத் திரும்பினார்கள். டேவிட் சாட்லர் என்னும் சிறுநீரக நோயாளி, டெபியின் இடது சிறுநீரகத்தைப் பெறுவதற்குத் தயாராக இருந்தார். அதே நேரம் இன்னொரு சத்திரசிகிச்சைக் கட்டிலில் திருமதி அலஸ், டெபியின் வலது சிறுநீரகத்துக்காகக் காத்திருந்தாள். சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் ரிச்சர்ட்டும், டாக்டர் லாரன்ஸூம் ஏற்கெனவே அங்கு பிரசன்னமாயிருந்தார்கள். அவர்களுடன் டாக்டர்கள் போல் மற்றும் தோமஸ் இணைந்துக் கொண்டார்கள்.

**மாலை மணி 6.00:** சத்திரசிகிச்சைகள் ஆரம்பமாகிவிட்டன.

**விடியற்காலை மணி 4.00:** இரண்டு சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகளும் வெற்றிகரமாக முடிந்து விட்டன. 10 மணித்தியாலங்களாக சத்திரகிகிச்சை நிபுணர்கள் செய்த முயற்சி பலனளித்து விட்டது. 'நான் அப்படியே விழப் போகிறேன். அப்பா என்னவொரு களைப்பு?' டாக்டர் சார்ள்ஸ் சொன்னதை டாக்டர் போல் ஆமோதித்தார். இருவரும் தங்கள் தங்கள் வீடுகளை அடைந்து ஒரு நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்தார்கள். டெபி இறந்து ஏறத்தாழ 35 மணித்தியாலங்கள் தொடர்ந்த போராட்டம் ஒரு ஈரல் நோயாளி, இரண்டு சிறுநீரக நோயாளிகள் ஆகியோருக்கு உயிர்ப்பிச்சை அளித்துவிட்டது. அடுத்து ஒரு இருதய நோயாளியும், பான்கிரியாஸ் செயலிழந்த ஒரு நோயாளியும் உயிர் பிழைக்க இருக்கின்றார்கள். அதற்குப் பிறகும் டெபியின் எலும்பு மச்சையாலும் பிட்டியூட்டரி கிளான்ட் மூலம் பெறப்படும் ஹோர்மோனாலும் சில நோயாளிகள் குணம் பெற உள்ளார்கள்.

அடுத்த நாள் டெபியின் பெற்றோர் மகளின் இறுதியாத்திரைக்குத் தயாரானார்கள். அமெரிக்கக் கலாசாரத்தின்படி மரணச்சடங்குகளை நடத்தி வைக்க ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். அவர் மெல்ல அணுகி டெபியின் பெற்றோரைக் கேட்டார். " திறந்திருக்கும் சவப்பெட்டியில் அவளைக் கிடத்துவதா அல்லது மூடப்பட்ட சவப்பெட்டியில் வளர்த்தவா?"

டெபியின் பெற்றோர் எங்கோ பார்த்தபடி விரக்தியாக 'மூடப்பட்ட சவப்பெட்டி. ஆனால் அவளை ஒரு முறை நாங்கள் பார்க்கவேண்டும்' என்று சொன்னார்கள்.

கண்கள் பனிக்க அவளை இறுதியாகப் பார்த்த அவர்கள் துக்கம் பாதியாகக் குறைந்தது. ஆம். அவளால் எத்தனைபேர் பிழைத்துள்ளார்கள்?

ஒரு 14 வயதுடைய சிறுவன் மூன்று வருடங்களுக்கு முன் ஒரு விபத்தில் பார்வை இழந்திருந்தான். இன்னொரு குழந்தை பிறக்கும் போதே பார்வைக் கோளாறுடன் பிறந்திருந்தது. இருவரும் டெபியால் பார்வை பெற்றார்கள். ஒரு மாதம் சென்ற பிறகு ஒரு நாள் டாக்டர் போல் டெபியின் பெற்றோரைத் தொடர்பு கொண்டார். டெபியின் தியாகத்தினாலும் பெற்றோரின் தன்னலமற்ற அனுமதியாலும் உயிர் பிழைத்தவர்களைப் பற்றி விபரமாகக் கூறினார்.

இனி டெபியின் கண்களால் இருவர் இந்த உலகத்தைப் பார்ப்பார்கள். அவளது சிறு நீரகங்களாலும், ஈரலாலும், இருதயத்தாலும், நால்வர் பல காலம் வாழப்போகிறார்கள். இதைவிட வேறும் பலர் தங்கள் நோய்களிலிருந்து விடுதலை பெறுவார்கள். யாரென்று தெரியாமலே அவர்கள் உள்ளம் டெபியை வாழ்த்திக் கொண்டிருக்கும்.

மற்றவர்களுக்கும் பயன்பட வாழ் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். மண்ணோடு மக்கிப்போகும் டெபியின் உடல் எத்தனை பேருக்கு வாழ்வளித்திருக்கிறது? இது ஒரு மௌன சரித்திரமாக என்றும் டெபியின் பெற்றோர் மனதில் வாழும். நாமும் டெபியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம். ★ ★ ★

---

## இதிலும் முதலிடம்

அமெரிக்கா எவ்வளவு மோசமான பொருளாதாரச் சரிவுகளைச் சந்தித்தாலும் அனைத்து விடயங்களிலும் தான் எப்போதும் முதலிடத்தில் இருப்பதை நிரூபித்துக் கொண்டே இருக்கிறது. அதில் ஒன்று தான் அங்கு பாவிக்கப்படும் கைத் தொலைபேசிகள் பற்றிய ஆய்வு முடிவு. சாதாரணமாக ஒவ்வொரு தனிநபரும் இரண்டு கைத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். 18 மாதங்கள் மட்டுமே பாவித்து விட்டு குப்பைக் கூடைக்குள் போட்டு விடுகின்றனர். பின்னர் புதிய தொன்றைக் கொள்வனவு செய்கிறார்கள். வருடமொன்றுக்கு 250 தொன் எடையுள்ள தொலைபேசிகள் குப்பைக்குள் போகின்றனவாம்.



தொண்டன்: தலைவரே! நாட்டில் பெரிய அநீதி நடந்து வருகுது. மிருகவதை மிகவும் அதிகரித்து விட்டது. நீங்கள் தான் மிருகங்களுக்காகக் குரல் கொடுக்க வேணும்.

தலைவர்: அந்தளவுக்கு எனக்கு மிமிக்கிரி பண்ணத் தெரியாதே?





அப்பா: ''என்னடா ஹரிஸ் இரவு முழுவதும் படித்தேன் என்று சொன்னாய். ஆனால் லைற் எரியவேயில்லையே?


ஹரிஸ்: படிக்கிற ஆர்வத்திலை லைற் எரிஞ்சுதா இல்லையா எண்டு கவனிக்கவே இல்லை அப்பா!....

அப்பா: ???......

## மீனினமே...!

உலகில் மீனினம் தோன்றி 55 கோடி ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அதில் எத்தனை வகை உண்டு என்று கேட்டால் யாராலும் சரியான பதில் அளிக்க முடியாது. ஒவ்வொரு ஆண்டும் கலப்பினங்களின் எண்ணிக்கை மாறிக் கொண்டே போகின்றது.

இதுவரை 28 ஆயிரம் வகையிலான மீனினங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டன. வருடத்திற்கு சுமார் 300 வகையான மீன்களை ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்திருக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.



# COLOMBO Bond International School



தலைநகரில் தமிழ்பேசும் மக்களுக்காக தனியார் ஆங்கிலப்பாடசாலை ஒன்று இல.62, சித்தார்த்த வீதி, கிருலப்பனையில் அமைந்துள்ளது.

பாலர் பாடசாலையிலிருந்து உயர்தரவகுப்புக்கள் (Montessori, Grade 1 - 9, O/L, A/L) வரையிலான அனைத்து வகுப்புக்களும் மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. தற்போது புதிய மாணவர்களை உள்வாங்கும் நோக்கத்துடன் முதலில் வரும் 25 மாணவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படுவதுடன் 50 மாணவர்களுக்கு முதலாம் தவணைக் கட்டணத்தில் 25% கழிவும் வழங்கப்படும்.

இங்கு நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் முன்கல்வியும் பட்டதாரி ஆசிரியர்களினால் உயர்கல்வியும் மேலும் விளையாட்டுப்போட்டி சுற்றுலா என்பனவும் சிறந்த முறையில் கையாளப்படுகின்றது.

**தாமதம் இன்றி அனுமதிக்கு முந்துங்கள். அனுமதி கிடைக்கும் காலம் June 26 இருந்து August 31 ஆம் திகதிவரைமட்டுமே**

இது தொடர்பன மேலதிக தகவல்களை 03.07.2011 சுடர் ஒளி பத்திரிகையில் காணலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
BOND INTERNATIONAL SCHOOL
No.62, Sidhartha Road, Kirulapane, Colombo-05
Tel:2512247

# BODY TONE

19 அமினோ அமிலங்கள் அடங்கிய புரதச்சத்து வில்லைகள்

## பொடிடோன்

எல்லா விளையாட்டு வீரர்களுக்கும்,
நோயிலிருந்து நிவாரணம் பெறுபவர்களுக்கும்,
கடினஉழைப்பாளிகளுக்கும் சோர்வையும்,களைப்பையும்
போக்கி உடல் தைரியத்தையும்,பலத்தையும்
புத்துணர்வையும் மேலதிக சக்தியையும்
திடகாத்திரத்தையும் சுறுசுறுப்பையும் தரவல்லது



கொழுப்பற்றது

அற்றது

பக்கவிளைவு

15 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு வில்லைவீதம் காலையும் இரவும் சாப்பட்டிற்கு முன்னர் எடுக்கவும்.

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள WESCO PHARMACY 284 HOSPITAL ROAD. மற்றும் Cargills Food City, Super Market மற்றும் Pharmacy களில் கிடைக்கும்

ஏக இறக்குமதியாளர்களும் விநியோஸ்தர்களும்
K.S.P.international Pharmacy
No-L4 1st Foloor, Central Bus Stand, Colombo
Tel: 2449766

# 5 தசாப்தங்களுக்கு மேலாக

நிலையானதும் ஸ்திரத் தன்மையும் கொண்ட சேவைக்கு

செண்ட்ரல் பினான்ஸ்

# யாழ் மண்ணில்

நிதி வளம் பெருக, நாம் உங்களுடன்!





உங்கள் அனைத்து நிதித்தேவைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன.
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்.
மக்ஸிமோ ட்ரக்களுக்கான கவர்ச்சிகரமான குத்தகை வசதிகள்.
டிமோ பட்டா வாகனங்களுக்கு விசேட நிதி வழிமுறைகள்.
மக்ஸிமோ ட்ரக் மற்றும் டிமோ பட்டா வாகனங்களுக்கான இலவச காப்புறுதி சேவை.
நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான அதி கூடிய வட்டி வீதம்.

**செண்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி**
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 1608, 021 222 1942

# SONDERVERKAUF

**Möbel Ferrari**

**HINWIL**

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00



KOMPLETT **1890.-** statt 2750.-

**ROSY**
Kompletta Polstergruppe
Echt Leder schwarz
In diversen Farb- und Materialvarianten
erhältlich / Chromfuss
3er 230x101x80 / 2er 195x101x80

**Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.**

**0.0%** Direkt Finanzierung


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, ஜூன் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது